வெளியீடு 14-9-1989 Issued 14-9-1989

தமிழ்நாடு அரசு ஆவணக்காப்பகம் ★ எழும்பூர், சென்னை-600008.
11 சன 1990
1276

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, பிப்ரவரி 16, 1989–தொகுதி 2–எண் 3
Thursday, the 16th February, 1989–Volume 2–No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

## உள்ளடக்கம்.

16—2—1989.

பக்கங்கள்


1. பேரவையில் திருக்குறள் வணக்கம் 249

2. தகவல் கோரல்—

(அ) அரசியல் சட்டத் திருத்தம் தமிழில் தரப்பட வேண்டியதன் அவசியம் குறித்து 250

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்த அறிவிக்கைகள் 250—251, 251—252

(இ) தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பெற்ற காவல்துறை உயர் அதிகாரி தெரிவித்த கருத்து 251

(ஈ) சட்டமன்றப் பேரவையிலுள்ள கட்சிகள் மற்றும் அணிகளின் பெயர்கள் குறித்து 252, 253—273

(உ) மாநகராட்சிகளின் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல் 253

3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி 273—385

திரு. ஆஸ்கார் சி. நிக்ளீ 277—278

திரு. பி. எச். பாண்டியன் 279—295

திரு. பி. என். வல்லரசு 295—304

* திரு பொன். விஜயராகவன் 307—320

திரு. சோ. அழகர்சாமி 320—333

திரு. எம். அப்துல் லத்திப் 333—349

* திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் 350—367

* திரு. கே. ரமணி 368—385

4. அறிவிப்பு—

பேரவை அலுவல் நேரம் 350

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 385

144353
600 008

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1989 பிப்ரவரி 16, வியாழக்கிழமை.

மாசி 5, விபவ—திருவள்ளுவர் ஆண்டு—2020.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்."

சொற்களின் நடையை ஆராய்ந்த நன்மை உடையவர் அவையின் செவ்வியை ஆராய்ந்து நன்றாக உணர்ந்து சொல்ல வேண்டும்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

## 1. பேரவையில் திருக்குறள் வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் அவைக்கு வந்து தங்களுடைய இருக்கையிலே நின்று குறள் படித்துப் பொருள் சொல்லி முடிக்கிறவரையில் உறுப்பினர்களும் எழுந்து நின்று அந்தக் குறளைக் கவனமாகக் கேட்டு மரியாதை செலுத்துவது இன்னும் மாண்புள்ள செயலாக இருக்கும். அதைத் தாங்கள் ஏற்பீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய வேண்டுகோள் அனைவராலும் ஏற்கக் கூடிய ஒன்று. எனவே நாளையிலிருந்து குறள் படிக்கும் போதும் உரை படிக்கும்போதும் அவையினுடைய மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் அனைவரும் எழுந்து நின்று மதிப்பளிப்பது உலகம் அனைத்துக்கும் தருகிற மதிப்பாகும். (மேசையைத் தட்டும் ஒலி).

## 2. தகவல் கோரல்.

### (அ) அரசியல் சட்டத் திருத்தம் தமிழில் தரப்பட வேண்டியதன் அவசியம் குறித்து.

* திரு. கே. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜ்ய சபாவிலிருந்து நிறைவேற்றியிருக்கும்படியான 61-வது அரசியல் சட்டத் திருத்தம் ஆங்கிலத்திலும் அதனுள்ளே கொஞ்சம் இந்தியிலுமாக இரண்டு மொழிகளிலேதான் இருக்கிறது. நம்முடைய நண்பர்கள் பலபேர்கள் ஆங்கிலம் தெரியாதவர்களாக இருக்கிறார்கள். இந்தி தெரியாதவர்கள் ஏராளமான பேர் இருக்கிறார்கள். அவர்கள் தமிழில் இதைக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அதற்கு என்ன ஏற்பாட்டைத் தாங்கள் செய்ய இருக்கிறீர்கள். மத்திய அரசே பார்த்து மொழி பெயர்ப்புச் செய்து அனுப்பி இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் செய்யவில்லை . . . .

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதிப்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் கேட்டதற்கு விடை சொல்லி விடுகிறேன். தமிழிலே தரவேண்டுமென்று மதிப்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழிலே தரப்பட வேண்டும் என்பது தான் மத்திய அரசினுடைய கோட்பாடு, மும்மொழிக் கொள்கையின்படி. எனவே முடிந்தால் மத்திய அரசே இதைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் இல்லாவிட்டாலும் தமிழக அரசே இதைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்த அறிவிக்கைகள்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் நீதிமன்றம் தீர்ப்பு எதுவும் கூறவில்லை என்று சொல்லியிருந்தார்கள். ஆனால் நீதிமன்றம் 10—1—1989-ல் தீர்ப்பு ஒன்று வழங்கி . . . . .

1989 பிப்ரவரி 16]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் கொடுத்த உரிமைப் பிரச்சினை ஆய்வில் உள்ளது. அது குறித்து நாளை தெரிவிக்கப்படும்.

**திரு. எம். அப்துல் லத்தீப்:** பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும்போது சில கருத்துக்களை —Judicial Observations

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் எழுப்பிய உரிமைப் பிரச்சினைக்கு பேரவைத் தலைவர் விடை சொல்லிவிட்டார். எனவே இடையில் சொல்வதற்கு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) வேறு பிரச்சினையாக இருந்தால் சொல்லுங்கள்.

**(இ) தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பெற்ற காவல்துறை உயர் அதிகாரி தெரிவித்த கருத்து.**

**திரு. எம். அப்துல் லத்தீப்:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் உயர் அதிகாரியாக இருந்த ஒருவர், டி.ஐ.ஜி. யாகப் பணியாற்றிக் கொண்டிருந்தவர் திரு. வித்தியாசாகர். அவரைத் தற்காலிகமாக வேலையிலிருந்து அரசு நீக்கி இருக்கிறது. அதை நான் சந்திக்கத் தயார் என்று அவர் விடை அளித்திருக்கிறார். எனவே இது தொடர்பாக . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது குறித்து நீங்கள் தனி ஈர்ப்புத் தீர்மானமோ, ஒத்திவைப்புத் தீர்மானமோ கொடுக்க வேண்டுமே தவிர நேரடியாக இப்போது கேட்பது முறையாகாது. மேலும் இதுபற்றித் தாங்கள் குறிப்பிட விரும்பினால் அங்கிருந்து உரையாற்றுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. எனவே அருள்கூர்ந்து அப்போது எழுப்ப வேண்டும். (குறுக்கீடு) இது தொடர்பாகத் தீர்மானம் கொடுப்பதற்கு உறுப்பினருக்கு முழு உரிமை இருக்கிறது. அதைப் பயன்படுத்தத் தவறிவிட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

**(ஆ) உறுப்பினர்கள் கொடுத்த அறிவிக்கைகள்—தொடர்ச்சி.**

*திரு. ரவி அருணன்: பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரத்தில் மதுரா கோட்ஸ் நிறுவனத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்குப் பணிக்கொடை ஊதியம் பாக்கியை வழங்காததால் அந்தத் தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தொடர்பாக ஒத்தி வைப்புத் தீர்மானமோ அல்லது கவன ஈர்ப்புத் தீர்மானமோ கொடுக்க வேண்டுகிறேன்.

திரு. ரவி. அருணன்: ஏற்கெனவே கொடுத்திருக்கிறேன்.
மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கான முடிவை நாளை தெரியப்படுத்துகிறேன்.

(ஏ) சட்டமன்றப் பேரவையிலுள்ள கட்சிகள் மற்றும் அணிகளின் பெயர்கள் குறித்து.

திரு. சா. பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்பற்றவேண்டிய நடைமுறை விதிகள், எவ்வாறு உறுப்பினர்கள் அழைக்கப்பட வேண்டும் என்பதைப்பற்றி யெல்லாம் நேற்று நாம் இங்கே நீண்ட ஒரு விவாதத்தை எடுத்துக் கொண்டோம். தாங்களும் அதற்கான முடிவை இன்று சொல்வதாகச் சொல்லியிருக்கின்றீர்கள். தங்களது முடிவு இறுதியான முடிவு. வானளாவிய முடிவு. அந்த முடிவைச் சொல்வதற்கு முன்னால், இந்த மத்திய அரசு ஆர்டரிலே கொடுத்திருக்கின்ற சில பெயர்களை மட்டும் உங்களுடைய நோட்டீசுக்குக் கொண்டு வருகிறேன். அதைக் கேட்டுவிட்டு நீங்கள் என்ன முடிவு வேண்டுமானாலும் சொல்லுங்கள். நாங்கள் அதைக் கேட்டுக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று இது தொடர்பாக நீண்ட விவாதம் நடந்தது. பேரவைத் தலைவர் இது தொடர்பாக தக்க ஆவணங்களை ஆய்ந்து இந்த அவையில் சொல்லுவார் என்று சொன்னதற்கேற்ப நீங்கள் இன்று கேட்கின்றீர்கள். அதைச் சொல்லவேண்டும் என்று நான் இப்போது சொல்லப் போகிறேன். என்றாலும் இடையில் அதற்கும் ஏதாவது செய்தி இருக்குமானால்—இன்றைக்குச் சொல்கின்ற அறிவிப்பு இது—நீங்கள் தருகின்ற செய்தியை அறையில் வந்து தருகிறீர்கள் என்று சொன்னால்—நாளைக்கு அந்த வாசகங்கள் மாறலாம். அமைப்புகள் மாறலாம், பெயர்கள் மாறலாம். எனவே அருள்கூர்ந்து உறுப்பினர்கள் தாங்கள் சொல்லப் போகின்ற செய்தியை என்னுடைய அறையிலேயே தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்போது உங்களுடைய வேண்டுகோளை ஏற்று இந்தப் பெயர்கள் அறிவிக்கப்படுகின்றன. (குறுக்கீடு)



(உ) மாநகராட்சிகளின் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல்.

திரு. எஸ். டி. உக்கம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 18 வயது நிரம்பிய வாக்காளர் பட்டியல் மே மாதம் 29 ஆம் தேதி தயாராக இருக்கும் என்று அறிவிப்புகள் சொல்லப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு நேற்று சொல்லியிருக்கின்றார்கள், ரம்ஜான் பண்டிகைக்குப் பிறகு மாநகராட்சித் தேர்தல் நடைபெறும் என்று சொல்லியிருக்கின்றார்கள். ரம்ஜான் பண்டிகை முடிகின்ற தேதி மே மாதம் 7-ம் தேதி. மற்றும் இரண்டு வாரங்கள் என்று சொன்னார்கள். அப்படியென்றால் மே மாதம் 21-ம் தேதி முடிவடைகின்றது. ஆதலால் இந்த மாநகராட்சியினுடைய தேர்தலில் 18 வயதை உட்கொண்டு அவர்களையும் வாக்காளர்களாகப் பட்டியலில் சேர்த்து தேர்தல் நடத்தப்படுமா என்பதை நான் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைக் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்.

(ஏ) சட்டமன்றப் பேரவையிலுள்ள கட்சிகள் மற்றும் அணிகளின் பெயர்கள் குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றையதினம் அறிவித்ததற்கு இணங்க, சட்டமன்றப் பேரவையிலே இடம்பெற்ற பெயர்களில் கட்சிகளும் அணிகளும் இவைதாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் :

1. சட்டமன்றக் கட்சிகள் (Legislature Parties) :

(1) திராவிட முன்னேற்றக் கழகம்.

(2) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (ஜெயலலிதா) அணி.

(3) இந்திய தேசியக் காங்கிரஸ்.

2. சட்டமன்ற அணிகள் (Groups) :

(1) இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்).

(2) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (ஜானகி எம். ஜி. இராமச்சந்திரன்) அணி.

3. இதர அணிகள் :

(1) ஜனதா.

(2) இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக் (எல்.).

(3) இந்திய கம்யூனிஸ்ட் கட்சி.

(4) தமிழ்நாடு ஜனதா.

(5) தமிழ்நாடு பார்வார்ட் பிளாக்.

(6) சுயேட்சைகள்.

(முற்பகல் 9-10)

* திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (ஜெயலலிதா) பிரிவு என்றும், அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (ஜானகி எம். ஜி. இராமச்சந்திரன்) பிரிவு என்றும், இரண்டு பிரிவுகளாக இயங்கிவந்த அமைப்புகள், இரண்டு தலைமையும் ஒப்புக்கொண்டு இணைந்ததற்குப் பின்னால், அது சம்பந்தமான வழக்குகளை, டெல்லி தலைமைத் தேர்தல் அதிகாரியிடத்திலே திரும்பப் பெற்றுக்கொண்டு, தலைமைத் தேர்தல் அதிகாரியால் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற பெயர், இணைந்ததற்குப் பின்னால் அந்தப் பெயரிலே இனிமேல் இணைந்திருக்கின்ற ஒன்றுபட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று அழைக்கப்படும் என்று உத்தரவும் போட்டிருப்பதற்குப் பின்னால். . . அந்தச் சின்னமாக ஏற்கெனவே இருந்த இரட்டை இலை சின்னத்தையும் அந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தந்ததற்குப் பின்னால், நாங்கள் இணைந்துள்ளோம் என்பதைச் சட்டப்படி மாண்புமிகு தலைவர் அவர்களுக்கும் தெரியப்படுத்தி, எங்களை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று அழைக்க வேண்டுமென்று





மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு எழுத்து மூலமாக தந்ததற்குப் பின்னால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், ஜெயலலிதா பிரிவு என்று எந்த வகையிலே அழைக்க இங்கே நீங்கள் உங்களுடைய முடிவினை அறிவித்தீர்கள் என்பதை நான் தெரிந்து கொள்ள விருப்பப்படுகிறேன்? * * இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே அவர்களுடைய கருத்துக்களைச் சொல்வதிலே எங்களுக்கு கருத்து மாறுபாடு இல்லை. ஆனால் அவர் இங்கே ஒன்றை மட்டும் திருத்திக்கொள்ள வேண்டும் அல்லது அவை நடவடிக்கைக் குறிப்பிலேயிருந்து எடுத்துவிட வேண்டும். எந்த அடிப்படையில் தீர்ப்பளித்தீர்கள் என்று விளக்கம் கேட்டார்கள். அதோடு அவர் நிறுத்தியிருந்தால் தாங்களும் அதுகுறித்து அறிவித்திருப்பீர்கள். * * இந்த அவையிலேயுள்ள மற்றவர்களும் பின்னால் பின்பற்றக்கூடும். அனுபவமிக்க உறுப்பினர் அவர்களே சொல்கிறார்கள் என்பதால் மற்றவர்களும் பின்னால் அதே நடைமுறையைப் பின்பற்றக்கூடும். எனவே "எந்த அடிப்படையில் அறிவித்திருக்கிறீர்கள்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தலைவர் அவர்கள் தங்களுக்கு உள்ள உரிமையைப் பயன்படுத்தியிருக்கிறீர்கள். ஆகவே, உறுப்பினர் குறிப்பிட்ட கடைசி இரண்டு சொற்றொடர்களை நீக்கிவிடுவது நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்களுக்குப் பொதுவாகக் குறிப்பிட விரும்புகிறேன். பேரவைத் தலைவர் ஒரு தீர்ப்பளித்த பிறகு தீர்ப்பு சரியல்ல. முறையல்ல என்று சொல்வதைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எப்போதுமே பொருத்தமாக இருக்காது. எனவே, அந்த இரண்டு வார்த்தைகளும் அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. விளக்கம் சொல்ல எப்போதும் தலைவர் இருக்கிறார் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எப்போதும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்த இரண்டு வார்த்தைகளையும் தாங்கள் நீக்குவதில் எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் இது சாதாரணமான சட்டமன்ற அலுவல் நடைமுறை சம்பந்தப்பட்ட பிரச்சினை அல்ல. இது சட்டம் பற்றிய பிரச்சினை. ஏற்கனவே தலைமைத் தேர்தல் அலுவலரால் இதுகுறித்து தீர்ப்பு பிறப்பிக்கப்பட்ட பிறகு, இன்றைக்கு இடைத் தேர்தலில் கூட கழகத்தின் சார்பில், இயக்கத்தின் சார்பில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலதான் மனுச் செய்திருக்கிறார்கள். இரட்டை இலை சின்னத்தில்தான் போட்டியிருகிறோம் என்று மனுச் செய்திருக்கிறார்கள். அதற்குப் பிறகும், இன்றைக்குச் சட்டமன்றத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், ஜெயலலிதா பிரிவு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஜானகி பிரிவு என்று சொல்வது எங்களுக்கு திருப்தியளிக்காது என்று சொல்லி இதைத் தாங்கள் கவனத்தில் கொண்டு விளக்கத்தை அளிக்கும்படி கேட்கிறோம்.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சி.எஸ். 23/88, உயர் நீதிமன்றத்தில் 7 மாவட்டச் செயலாளர்கள் நீக்கப்பட்ட பிறகு, அவர்கள் அணியின் சார்பில் பொதுச் செயலாளர் மீது தொடரப்பட்ட வழக்கில் அவர் பொதுச் செயலாளர் அல்ல, நியமிக்கப்பட்ட மெம்பர் என்று அவர்களே வழக்குப் போட்டிருக்கிறார்கள். அப்படி அவர்களை நீக்கியது செல்லாது என்று சொல்லி அவர்கள் வழக்குப் போட்டிருக்கிறார்கள். தேர்தல் கமிஷனில், யாருக்கும் ராகவானந்தம் பொதுச் செயலாளர் அல்ல, அவர் நியமிக்கப்பட்ட மெம்பர் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. அது சம்பந்தப்பட்ட காப்பியை இப்பொழுது தங்கள் கையிலே தருகிறேன். ஏழு மாவட்டச் செயலாளர்கள் நீக்கப்பட்டார்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மறைந்தபிறகு. அவர்கள் திரு. கருப்பசாமி பாண்டியன் உட்பட 7 பேர். அந்த 7 பேரும் வழக்குத் தொடர்ந்தார்கள். அதில் அபிடவிட் பைல் பண்ணியவரைப் பொறுத்தவரையில் அவரும் ஒரு மாவட்டச் செயலாளர். அவர் அதில் சொல்லியிருக்கிறபோது 'இவர் ஒரு நியமிக்கப்பட்ட மெம்பர், எங்கள் ஏழு பேரையும் நீக்குவதற்கு இவருக்கு அதிகாரம் கிடையாது' என்று சொல்லியிருக்கிறார். இவருடைய நீக்கத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட அபிடவிட் நம்பர் சி.எஸ். 28/88. தேர்தல் கமிஷனைப்



பொறுத்தவரையிலும் யாருக்கும் சொல்லவில்லை, எங்களுக்குத் தெரியாது. அதைத்தான் நேற்றைய தினம் கொஞ்சம் வேகமாகச் சொன்ன காரணத்தால் தலைவர் அவர்களே, தாங்கள் வேகமாக எடுத்துக்கொண்டீர்கள். இரண்டாவது சனிக்கிழமையில் எங்களுக்குச் சொன்னார்கள். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் சொல்லாமல் இரவு நிறைவேற்றப்பட்ட உத்தரவு. இதை நாங்கள் எங்கே போய்ச் சொல்வது?

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, இணைப்புக்கு முன்னால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டாக உடைந்தபோது ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொள்ளவில்லை. ஒருவரை ஒருவர் பொதுச் செயலாளராகவோ, தலைவராகவோ ஏற்றுக்கொள்ளாமல், நான் தான் தலைவர், நீ தான் தலைவர் என்று கழகங்கள் அல்லது அமைப்புகள் அல்லது கட்சிகள் உடைகிறபோது பிரச்சினைகள் வருவதும், வழக்குகள் தொடரப்படுவதும் சகஜமான ஒன்றுதான். நேற்றுகூட இங்கே பேசுகிறபோது முஸ்லீம் லீக் கட்சியைப் பற்றி இதுமாதிரி பிரச்சினை எழுந்தது. அதற்குப் பின்னால் நடந்த இது சம்பந்தமான வழக்குகளை எல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு, இரண்டு பிரிவுகளும் ஒன்றாக இணைந்தோம் என்று சொல்லி. இணைந்ததற்குப் பின்னால், தலைமைத் தேர்தல் அதிகாரிதான் இது குறித்துத் தீர்ப்புக் கூற மிகச் சிறந்த தலைமை அதிகாரியாவார். அதற்கு அடுத்து சுப்ரீம் கோர்ட்தான். சுப்ரீம் கோர்ட்டிலே விவாதிக்க வேண்டியதை, இந்தச் சட்டமன்றத்திலே நிச்சயமாக விவாதிக்க விதிகளிலே இடமில்லை. எனவே தலைமைத் தேர்தல் அதிகாரி ஒரு ஜுடிஷியல் அதிகாரி. மாண்புமிகு முன்னாள் பேரவைத் தலைவருக்கு சட்டம் நன்றாகத் தெரியும். பேரவைத் தலைவராகவும் இருந்திருக்கிறார். இது போன்று பல தீர்ப்புகளைத் தந்திருக்கிறார். எனவே ஒரு நீதிபதியினுடைய விசாரணை தான் தலைமைத் தேர்தல் அதிகாரியினுடையது. அதை இங்கே விமர்சிப்பதோ, அது குறித்து இங்கே பேசுவதோ தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்தும். அதைத் தயவு செய்து நீங்கள் அனுமதிக்கக்கூடாது.

இரண்டாவது, இணைந்ததற்குப் பின்னால், நாங்கள் ஒன்றுபட்டுவிட்டோம் என்று சொன்னதற்குப் பின்னால், முன்னாள் சபாநாயகர், இன்றைக்கு இங்கே உட்கார்ந்துள்ள சட்டமன்ற உறுப்பினர் அவர்களை எந்தப் பிரிவில் வைப்பது, அதை எப்படி

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 பிப்ரவரி 16

நடத்துவது என்பதைப் பற்றித்தான் யோசிக்க வேண்டுமே தவிர, எங்கள் இரண்டு பேரையும் அழைத்து, இங்கே உட்கார வைப்பது நியாயமல்ல என்பதை மீண்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் உங்களுடைய தீர்ப்பை எதிர்பார்க்கிறேன்.

**திரு. பி. எச். பாண்டியன்:** மாண்புமிகு தலைவரவர்களே, எதிர்க் கட்சித் துணைத் தலைவர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் பேசும்போது தலைமைத் தேர்தல் கமிஷனை உச்ச நீதி மன்ற நீதிபதிக்கு ஒப்பாகச் சொன்னார்கள். அது சட்டத்திற்குப் புறம்பானது.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் சொல்லாததை எல்லாம், சொன்னதாக அவர் சொல்லக் கூடாது. அவர் நீதி வழங்குகின்ற இடத்திலே இருக்கிறார். ஒரு நீதிபதிக்குரிய அந்தஸ்திலே தான் சொல்கிறார். ஒரு ஜுடிஷியல் அதிகாரியாகத்தான் அவர் செயல்படுகிறார். உச்ச நீதிமன்ற நீதிபதி என்று நான் சொல்லவில்லை. அந்த அதிகாரத்திற்கு ஒப்பானவரோ, மிக்கானவரோ, அது எனக்குத் தெரியாது. ஆனால் அந்த அதிகாரங்கள் அவருக்கு இருக்கிறது. ஆர்.டி.ஓ. விசாரணை என்று நடத்தியதற்குப் பிறகு, அவர் நீதிபதியாகச் செயல்படுகிறார். ஜுடிஷியல் என்கொயரி என்று வந்தாலும் சரி, அல்லது வேறு வகையில் விசாரணை என்று வந்தாலும் சரி, அவர் நீதிபதியாகச் செயல்படுகிறார். எனவே கட்சிகளைப் பொறுத்த வரையில், தேர்தல் சின்னங்களைப் பொறுத்தவரையில், தலைமைத் தேர்தல் அதிகாரிதான் உச்ச உயர் அதிகாரத்தைப் படைத்த அதிகாரியாவார். அவருடைய தீர்ப்பை விமர்சிப்பது என்றால் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகலாம். அதற்குப் பரிகாரம் காண இந்தச் சட்டமன்றம் உரியதல்ல. ஏற்கெனவே நாங்கள் கொடுத்துள்ள மனுவின்மீது, விண்ணப்பத்தின் மீது முடிவு செய்யுங்கள். இதுபோன்ற விவாதத்தை நடத்திக் கொண்டிருந்தால் எத்தனை மணி நேரம் வேண்டுமானாலும் நடத்திக் கொண்டிருக்கலாம். அவரும் வக்கீல், நானும் வக்கீல். பேசிக்கொண்டே இருக்கலாம்.

**திரு. பி. எச். பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. தேர்தல் கமிஷனருக்கு 'Contempt of Court' கிடையாது. அவரைப் பற்றிப் பேசலாம். (குறுக்கீடு) கிடையாது. இருக்கிறது என்றால் சொல்லுங்கள். எனக்குத் தெரியும். 20 வருடங்கள் நான் கறுப்புக் கோட்டு போட்டிருக்



1989 பிப்ரவரி 16] [திரு. பி. எச். பாண்டியன்]

கிறேன். அதாவது தேர்தல் கமிஷனரைப் பதவி நீக்கம் செய்வதற்கு மட்டும், உச்ச நீதிமன்ற நீதிபதிக்கு எந்த முறையைக் கையாள்கிறார்களோ அந்த முறையைக் கையாளலாம். Impeachment-க்கு மட்டும்தான் உச்ச நீதிமன்ற நீதிபதிக்கு கையாளும் முறையைக் கையாளலாம். தேர்தல் கமிஷனர் நம்முடைய முனிசிபல் கமிஷனர் மாதிரிதான்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முன்னாள் பேரவைத் தலைவர், அவர் பேரவைத் தலைவராக இருந்தபோது இந்த உலகத்திலேயே மிக அதிகாரம் மிக்கவராக விளங்கியவராக அவர்மட்டும்தான் திகழ்ந்தார். எனவே அவரைத்தவிர, மற்றவர்களை அவர் குறைவான அதிகாரம் உள்ளவர்களாகத்தான் எப்போதும் கருதுவார். அது அவருடைய மனோபாவம் என்று நினைக்கிறேன். தேர்தல் கமிஷனரை முனிசிபல் கமிஷனரோடு ஒப்பிடுவது, அசிங்கப்படுத்துவது முறையல்ல. அதை சபைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, வானளாவிய அதிகாரம் எனக்கு உண்டு என்று சொன்னபோது அதை ஆமோதித்துக் கொண்டு இருந்தவர்தான் நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்பதை மறந்து விடக்கூடாது. (சிரிப்பு) ஆனால் ஒன்றை அவைத் தலைவருக்கு நினைவூட்ட விரும்புகிறேன். இப்படி ஒன்றாக இருக்க முடியாமல் இவ்வளவு நேரம் வாதம் செய்து கொண்டிருக்கிறவர்கள், ஏன் இங்கே ஒன்றாக உட்கார வேண்டுமென்று விரும்புகிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடு)

**திரு. பீட்டர் ஆல்போன்ஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே, விவாதம் திசை திரும்பிப் போய்க் கொண்டிருக்கிறது . . .

(முற்பகல் 9-20)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அருள்கூர்ந்து நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். உங்கள் வரியிலிருந்தே நான் தீர்ப்புக் கொடுக்கிறேன். உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள் (குறுக்கீடு) திரு. பீட்டர் ஆல்போன்ஸ் கேட்பதுதான் நியாயமானது. இது திசை திரும்பி, எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஒரே ஒரு வரியில் குறிப்பிட்டார்கள். "நாங்கள் கடிதம் எழுதியிருக்கிறோம். அதற்கு உரிய தீர்ப்பு என்ன என்று காலாகாலத்தில்

[பேரவைத் தலைவர்] [1989 பிப்ரவரி 16

சொன்னால் ஒரு முடிவுக்கு வரலாம்" என்றார். இதை, முதல் வரியிலேயே சொல்லியிருந்தால் நானும் விடை சொல்லி இருப்பேன். இவ்வளவு நேரம் சுற்றி வளைத்துப் பேசியிருக்க வேண்டாம். இரண்டே வரியில் சொல்லி இருக்கலாம். "நீங்கள் மடல் எழுதியிருக்கிறீர்கள். அதற்குரிய விடையை, அவைத் தலைவர் உரியவருக்கு அனுப்பியிருக்கிறார். அது தொடர்பாக நீங்கள், பார்த்துப் படித்து, எங்களுக்கு மீண்டும் தெரிவித்தால், அதற்குப் பிறகு அடுத்த முடிவு எடுக்கப்படும்" என்பதை மட்டும் இப்போது தீர்ப்பாகச் சொல்லி, இந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறேன். அருள்கூர்ந்து அனைத்து உறுப்பினர்களும், முன்னாள் பேரவைத் தலைவரும், எதிர்க் கட்சியின் துணைத் தலைவர் அவர்களும்—எல்லோரும்—அமர்ந்து அடுத்த பொருளுக்குப் போக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் தொடர்ந்து பேசுவது எங்களுக்குச் சுவையாக இருப்பது என்பது வேறு (சிரிப்பு) அவைக்கும் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் இது திசை திரும்பிப் போகிறது. நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். நீங்கள் எழுதிய மடலுக்கு விடை தரப் பட்டிருக்கிறது. அருள்கூர்ந்து, விடையை நன்றிக் கவனித்துப் படித்து, மீண்டும் எங்களைச் சந்தியுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சட்டமன்றத்தில் மட்டுமல்லாமல் வெளியே பார்த்திருக்கிறேன் என்றாலும், படிக்கிற காலத்திலேயே தி.மு.க.-விலிருந்துதான் எல்லோரும் வந்தோம் என்றாலும், அவரோடு நெருங்கிய பழக்கம் எனக்கில்லை. என்னைப் பற்றியும் அவர்கள் நெருங்கித் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லை—அரசியல் ரீதியாகத் தெரிந்து கொள்வதைத் தவிர, நான், எப்போதும் இருக்கிற இடத்தில், ஏற்றிருக்கிற தலைமைக்கு விசுவாசமாக இருப்பவன். நான் யாரைத் தலைவராக ஏற்று இருந்தேனோ, அந்த இயக்கத்தின் முடிவுக்குக் கட்டுப்பட்டு ஒத்துக் கொண்டிருந்தேன். அடுத்து இங்கே இருக்கிற மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் எங்களோடு வந்துதான் ஆக வேண்டும் என்று நாங்கள் வற்புறுத்தவில்லை. அவர் எங்கே வேண்டு மானாலும் இருக்கட்டும். எங்கே வேண்டுமானாலும் போகட்டும், அது அவருடைய இஷ்டம். ஆனால் எங்களை—இரண்டு பிரிவு களும் இணைந்த பிறகு—ஒரே பெயரில்தான் அழைக்க வேண்டு



1989 பிப்ரவரி 16] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

மென்பதும்' ஜானகி அணியின் சார்பில் அவர் இங்கே அமர முடியாது, எங்களோடுதான் இருக்க வேண்டும் என்பதும்தான் எங்களது வாதம் அவரை அவர் இஷ்டம் போல் விட்டுவிடு கிறோம். அவர் எங்கே வேண்டுமானாலும் அமரலாம். அவர் வாழ்க, வளர்க என்று வாழ்த்துகிறோம் (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: Sir, on a point of order. Election Commission is an independent Commission. எந்த அரசினுடைய அதிகார வரம்பிற்கும் உட்பட்டதல்ல. அவரை முனிசிபல் கமிஷனரோடு ஒப்பிடுவது சரியில்லை. எனவே இதைச் சபைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

திரு. பி. எச். பாண்டியன்: முனிசிபல் கமிஷனர் என்றால் தாழ்ந்தவர் என்று அல்ல. அவருக்கு எவ்வளவு பணம் கொடுக்கிறீர்கள்; இந்தத் தேர்தல் கமிஷனருக்கு பணம் கொடுத்திருக்கிறீர்களா? (சிரிப்பு). அதற்கு மேலே வேண்டாம். (குறுக்கீடு) கொஞ்சம் பொறுங்கள். நான் இதைப் படித்து விடுகிறேன்.

அரசியல் சட்டத்தின் 52-வது அமெண்ட்மெண்டில்—செக்ஷன் 4-ல் போட்டிருக்கிறார்கள். நான் ஒரு வார்த்தை சொன்னால் போதும். அதாவது under Section 4 Cl. (1) (*b*), I have not accepted the merger. I opt to function as a separate group. எனவே, இதற்கு மேலே அல்ல, தேர்தல் கமிஷன் என்பது.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் மிகச் சுருக்கமாகச் சொல்வதால் எனக்கு அவர் சொன்ன சில விஷயங்கள் விளங்கவில்லை. தங்களுக்கு விளங்கி யிருந்தால் சரி. திரு. இராகவானந்தம் அவர்களைப்பற்றி, அவர் களுடைய பொறுப்பைப்பற்றி இங்கே கேள்வி கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் தேர்தலில் போட்டியிடுகிறபோது, அந்த இராகவானந்தம் பொதுச் செயலாளராகவும், ஜானகி அம்மையார் அவர்களைக் கட்சித் தலைவராகவும் ஏற்றுக் கொண்டு, அவர்கள் கொடுத்த இரட்டைப் புறா சின்னத்தில்தான் போட்டியிட்டார். அவர் விலகிக் கொண்டார். மற்றவர்கள் இணைந்து விட்டனர்.

கழகம் இணைந்துவிட்டது. எனவேதான் அவர் அந்தக் கட்சியின் சார்பில் இங்கே உட்கார முடியாது என்று வாதிடு கிறோம். அடுத்து இதுதான் உங்களுடைய இறுதித் தீர்ப்பாக இருக்குமானால், இந்தத் தீர்ப்பை ஆட்சேபித்து—இது சட்டத் திற்கும் நியாயத்திற்கும், தர்மத்திற்கும் புறம்பானது என்று சொல்லி—நீங்கள் எது வேண்டுமானாலும் செய்யலாம் என்று செய்கிறீர்கள் என்று சொல்லி, இதை ஆட்சேபித்து, அனைத் திந்திய அண்ணா தி.மு.க. வெளிநடப்புச் செய்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஏதோ ஒரு பெயருக்காக வெளிநடப்புச் செய்யவேண்டிய அவசியம் இல்லை. தயவுசெய்து உட்காருங்கள். நீங்கள் கடிதம் எழுதியிருக்கிறீர்கள். நான் அவைத் தலைவர் அவர்களிடமிருந்து தெரிந்து கொண்ட விவரம் என்னவென்றால் 'ஜெ' என்ற எழுத்து இல்லாமல் அ.இ.அ.தி.மு.க. கட்சி என்று குறிப்பிட்டால் போதும் என்று எழுதியிருப்பதாக, எனக்கு சபாநாயகர் அவர்களின் செகரட்டேரியட் மூலமாக தெரிவிக்கப்பட்ட தகவலைச் சொல் கிறேன். அப்படி எல்லா உறுப்பினர்களும் எழுதிக் கொடுப்பது முறையென்றும், அப்படி எல்லோரும் எழுதிக் கொடுத்துவிட்டால் 'ஜெ' அணி என்பது மாற்றப்படும். அதற்கான வாய்ப்பு இருப்ப தாகவும் கூறியிருக்கிறார்கள். அப்படி எழுதிக் கொடுத்து விட்டால் நாளைக்கே கூட இந்த அவையைப் பொறுத்து மாற்றி விடலாம். அது ஒன்றும் பெரிய விவகாரம் இல்லை.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே குறிப் பிட்டதை அவர்கள் சொன்ன வழியிலே எடுத்துக்கொண்டு நாளைக்கு தீர்ப்பு அ.இ.அ.தி.மு.க. என்று அறிவிப்பீர்கள் என்றால் அதற்குள்ளே சில சட்டமன்ற உறுப்பினர்கள் வெளியூர் போயிருக்கிறார்கள். நாங்கள் யாராவது மறுப்புத் தெரிவித்தால் தான் அதை நீங்கள் எடுத்துக் கொள்ளலாம். இல்லை எல்லோரும் எழுதித் தரத்தான் வேண்டுமென்றால் ஊருக்குச் சென்றவர்களை வரவழைத்து எழுதித் தருகிறோம். ஆனால், தீர்ப்பை அந்த அடிப்படையில் அ.இ.அ.தி.மு.க. என்று அறிவிக் கிறேன் என்று சொன்னால் முதலமைச்சர் அவர்கள் சொன்னதை ஏற்றுக்கொண்டால் நாங்கள் உள்ளே உட்காருகிறோம். இல்லை யென்றால் வெளிநடப்புச் செய்கிறோம்.





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, விதிமுறைகளில்,

'For the purposes of sub-paragraph (1) of this paragraph, the merger of the original political party of a member of a House shall be deemed to have taken place, if and only if, not less than two-thirds of the members of the Legislature party concerned have agreed to such merger '. ,

என்று இருக்கிறது. அதன்படி எழுதிக் கொடுத்துவிட்டால், நாளைக்கு நீங்கள் விரும்புகிற அந்தப் பெயரை வைக்கலாம்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, வேறு ஏதோ விதியை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் கொடுத் திருக்கிறார்கள். அதற்கும், இதற்கும் சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அருள்கூர்ந்து, நான் பேரவைத் தலைவர் என்ற முறையில் குறிப்பிட விரும்புகிறேன். இது சம்பந்தம் இல்லாதது என்று சொல்வது முற்றிலும் அவைக்குப் புறம்பான செய்தி, பேரவைச் செயலாளர், முதல்வர் அவர்களிடம் கொடுத்தது எதற்கும் சம்பந்தம் இல்லாதது என்று சொல்வது பொருத்தமற்றது. அருள்கூர்ந்து நான் எழுதியிருக் கிற விடைகளை நன்கு படித்துப்பார்த்து நீங்கள் முடிவெடுக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டு கோளின்படி, அவர்கள் நான் அதை வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறார்கள், அதைச் சொல்கிறேன். இரண்டு செய்திகள். ஒன்று அ.இ.அ.தி.மு.க. 'ஜெ' அணியைச் சேர்ந்தவர்கள் அனைவரும் மொத்தத்தில் மூன்றில் இரண்டு பங்கினர் ஓர் அமைப்பிலிருந்து விலகி இன்னொரு அமைப்பில் சேரலாம் என்று எழுதிக்கொடுத்தால் (குறுக்கீடு) அதேபோல, அ.இ.அ.தி.மு.க. 'ஜா' அணியைச் சேர்ந்தவர், தான் வந்து இணைகிறேன் என்று எழுதிக் கொடுத்தால் தான் அதில் இணைத்துக் கொள்ளலாம் என்பது விதி. எனவே உங்களுக்கு எழுதப்பட்டிருக்கிறது. இதை மறுப்பதோ, எதிர்ப்பதோ உங்க ளுடைய உரிமை என்பதால் உங்களுக்கே விட்டுவிடுகிறேன். இவை தான் நான் எழுதியிருக்கிற செய்திகள். அதற்குத் தக்கவாறு பதில் அளித்து, நீங்கள் அனைவரும் அ.இ.அ.தி.மு.க. என்ற

பெயரில் இயங்குகிறோம் என்று எழுதிக் கொடுத்தால் அதன்படி நாளைக்கு அறிவிக்கப்படும். அதற்கு உங்களுக்கு முழு உரிமை இருக்கிறது. ஆனால் அ.தி.மு.க. (ஜானகி இராமச்சந்திரன்) அணியைச் சார்ந்தவர், அவராக எழுதிக் கொடுத்தாலன்றி இது அவரைக் கட்டுப்படுத்தாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. நூர்முகமது :** தலைவர் அவர்களே, எதிர்க் கட்சியின் துணைத்தலைவர் அவர்கள் இங்கே பேசுகிறபோது ஒரு குறிப்பிட்ட தீர்ப்பை, பேரவைத் தலைவர் வழங்குவதாக இருந்தால் உள்ளே இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அப்படி பேரவைத் தலைவரை நிர்பந்திக்கிற உரிமை இங்கே இருக்கிற உறுப்பினர்களுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படி பேரவைத் தலைவரை நிர்பந்திப்பதற்கு யாருக்கும் எந்த உரிமையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, தயவுசெய்து தாங்கள் கொஞ்சம் பொறுமையாக இருந்தால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்னுடைய பொறுமையைப் பற்றி விளக்கம் சொல்கிற தாங்கள் இதிலே மிகுந்த பொறுமை காட்டி முதலில் விளக்கம் கேட்டிருந்தால் இந்நேரம் அது கிடைத்திருக்கும்.

(முற்பகல் 9-30)

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, மிக்க நன்றி. நான் உங்களைக் கட்டாயப்படுத்தவில்லை. தீர்ப்பு நீங்கள் இப்படி எழுதிக் கொடுத்தால் இப்படி வரும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தவறாகச் சொல்லவில்லை, சட்டத்தைத் தான் அவர்கள் சொன்னார்கள். இப்படி எழுதிக் கொடுத்து விட்டால், வேறு வழியில்லை, நீங்கள் அறிவித்துத்தான் ஆக வேண்டும். எனவே அதற்காக நீங்கள் வெளிநடப்புச் செய்ய வேண்டாம், இருங்கள், சபாநாயகர் அறிவிப்பார் என்று அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொன்னதின் அடிப்படையிலேதான், அதை நீங்கள் நாளைக்குச் சொல்வதாக இருந்தால், நாங்கள் இருக்கிறோம் என்று சொன்னோம். உங்களை நாங்கள் வற்புறுத்தவில்லை, கட்டாயப்படுத்தவில்லை. நானும் அங்கே மூன்றாண்டுக்



காலம் உட்கார்ந்திருக்கிறேன், எனக்கு அதுவும் தெரியும். எனவே, இதற்கு முன்னாலே நீங்கள் குறிப்பிட்டுச் சொல்கிறபோது, சட்டமன்ற உறுப்பினர் நம்முடைய மாண்புமிகு பி. எச். பாண்டியன் அவர்களைப் பொறுத்தவரையில், எங்களுக்குத் தீர்ப்பைச் சொல்லியிருக்கிறீர்கள், சரி, அதை ஏற்றுக் கொண்டு அமருகிறோம்—நான் விதியைக் கூட தவறு என்று சொன்னதற்குக் காரணம், ஆன்டி-டிபக்சன் ஆக்டிலே கூட பல செக்ஷன்கள் இருக்கின்றன. அதிலே இதுவும் ஒன்று. ஒரு கட்சியிலே இருந்து இன்னொரு கட்சிக்கு, அதாவது இப்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கோ, அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கோ, இப்படி கட்சி விட்டு கட்சி போகிறபோது, மூன்றிலே இரண்டு மடங்கு வேண்டும் என்று இருக்கிறது. (குறுக்கீடு). உங்களை நான் தவறாகச் சொல்லவில்லை. ஏன் சார் கோபித்துக் கொள்கிறீர்கள். (குறுக்கீடு) முன்னாள் சபாநாயகர் அவர்கள், (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவரைப் பற்றிப் பேசும் போது; அவர் விடை சொல்லியாகவேண்டும். நீங்கள் அவரைப் பற்றிப் பேசாமல், உங்களைப் பற்றிப் பேசவேண்டியதுதானே, நீங்கள் உங்களைப் பற்றிப் பேசினால், அவர் தலையிடமாட்டார். அவருடைய பெயரைச் சுட்டியிருக்கிறீர்கள். இதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. (குறுக்கீடு).

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் தலைவர் அவர்களே, அவர், நான் தான் எம்.ஜி.ஆர். என்கிறார், நான் தான் முதலமைச்சர் என்று இங்கே வந்து உட்காராமலிருந்தால் சரி தான் (குறுக்கீடு).

**திரு. பி. எச். பாண்டியன் :** ஜெயித்தால் வருவோம்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** உணர்ச்சி வசப்படாதீர்கள். அவருக்காக நீங்கள் ரொம்பப் பரிந்துரை செய்து பேசுகிறீர்கள், அது எனக்குத் தெரியும். முன்பு எப்படியெல்லாம் செய்தீர்கள் என்பதும் தெரியும். மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீது அருமை நண்பர் மாண்புமிகு பி. எச். பாண்டியன் அவர்களுக்கு திடீரென்று ஏற்பட்டிருக்கிற பாசத்தை நான் உள்ளபடியே பாராட்டுகிறேன்.

**திரு. பி. எச். பாண்டியன் :** தமிழன் ஐயா, அதுதான்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** ஆகா, என்ன அற்புதமான உணர்ச்சி, அந்த உணர்ச்சிகளையும் சேர்த்துப் பாராட்டுகிறேன்.

**திரு. பி. எச். பாண்டியன்:** நான் டெபுடி ஸ்பீக்கராக இருந்த போதே, சொன்னேன். அப்போது கை தட்டினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினை ஏற்கனவே முடிந்து போய்விட்டது (குறுக்கீடு). இல்லையில்லை. அருள்கூர்ந்து உட்காருங்கள், அல்லது எந்த முடிவை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். அதுபற்றி ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தாங்கள் ஒரு முடிவை இங்கே அறிவித்துவிட்டீர்கள் அவர்கள், தாங்கள் எழுதியுள்ள கடிதத்திற்கு பதில் எழுதி, அ.இ.அ.தி.மு.க. (ஜெ) என்று இருக்கத் தேவையில்லை "ஜெ அணி" என்று இருக்கத் தேவையில்லை என்று அவர்கள் குறிப்பிட்டு எழுதுவார்களானால், அ.இ.அ.தி.மு.க. என்று அவர்கள் இங்கே அமரலாம். அப்படித்தான் அந்தக் கட்சியினர் அழைக்கப்படுவார்கள் என்று கூறிவிட்டீர்கள். அதற்கு அடுத்து, இன்னொன்றையும் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அ.இ.அ.தி.மு.க. (ஜா) என்பதைப் பொறுத்தவரையில், நம்முடைய முன்னாள் சட்ட மன்றத் தலைவர் திரு பி. எச். பாண்டியன் அவர்கள் விரும்பினால்தான், இதில் அவர்கள் இணைய முடியுமே தவிர, இல்லாவிட்டால் இயலாது என்று கூறியிருக்கிறீர்கள். அ.இ.அ.தி.மு.க. (ஜா) என்பதைப் பொறுத்தவரையில், நம்முடைய முன்னாள் சட்ட மன்றத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் விரும்பினால்தான், இதில் அவர்கள் இணைய முடியுமே தவிர, இல்லாவிட்டால் இயலாது என்று கூறியிருக்கிறார்கள். இதைப்பற்றிப் பிறகு பேசிக்கொள்ளலாம். இப்போது, அவர் விரும்புகிற பெயரில் நாளைக்கு எழுதிக் கொடுத்துவிட்டால், நாளை முதல் அவர்கள் அமரலாம் என்று கூறியிருக்கிறீர்கள். எனவே அதை ஏற்றுக் கொண்டு, அவையை முறைப்படி நடத்துவதுதான் நல்லது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சோ. அழகர்சாமி அவர்களைப் பேச அழைக்கிறேன்.

* **திரு. சோ. அழகர்சாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மணி இப்போது 9.30. அரை மணி நேரம் ஆகிவிட்டது. ஆளுநர் உரையின் மீது இங்கே வந்து இருக்கிற உறுப்பினர்கள் பல்வேறு விஷயங்களை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, சில தீர்வுகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். காரணம் நாளையோடு, இந்த விவாதம் முடிவுற்று, முதலமைச்சர் பதில் சொல்லவேண்டியதிருக்கிறது. எனவே இது சம்பந்தப்





பட்ட விஷயத்தில் மாண்புமிகு உறுப்பினர்களைத் தங்களுடைய அறைக்கு அழைத்து, அலுவல் ஆய்வுக்குழு மூலமாக, எந்தக் கட்சியை எப்படி அழைப்பது என்று விதிகள் மூலமாகப் பார்த்து, முடிவு செய்திருக்கலாம். 3 பேர்கள் பேசக்கூடிய நேரம் முடிந்துவிட்டது. ஆகவே, பேரவைத் தலைவர் அவர்கள், எங்கள் உறுப்பினர்களுடைய உரிமையை, நாங்கள் எங்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு ஏற்ப வாய்ப்புக்களை, அளிக்கக் கூடிய முறையில், சரியானபடி ஒரு தீர்ப்பை அளிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே நான் முடித்துவிடுகிறேன். ஒன்று, ஏற்கெனவே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக (ஜெயலலிதா) பிரிவு என்று அழைக்க வேண்டாம் அ.இ.அ.தி.மு.க. பிரிவு என்று அழையுங்கள் என்று சொல்லி, உச்சநீதி மன்றத் தலைமைத் தேர்தல் அதிகாரி தீர்ப்பினுடைய நகலை வைத்து ஏற்கெனவே ஒரு கடிதம் கொடுத்திருக்கிறோம். மற்ற சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலே வாங்கித் தரவேண்டுமென்று சட்டம் இருப்பதாகச் சொன்னால், அதையும் நாங்கள் வாங்கித் தருகிறோம். இரண்டு, மருமை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் எங்கே வேண்டுமானாலும் உக்காரட்டும். இங்கே வரவேண்டுமென்று கட்டாயப் படுத்தவில்லை. அது சட்டப்படி செல்லுபடியாகுமா என்பது கோர்ட்டில் நிர்ணயிக்கப்பட வேண்டியது ஆனால் அதே நோக்கில் . . . . (குறுக்கீடு)

**திரு. பி. எச். பாண்டியன்:** என்ன அரட்டுகிறீர்கள்?

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** இது அரட்டல் அல்ல, உண்மையைத்தான் சொல்கிறேன்.

**திரு. பி. எச். பாண்டியன்:** புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** அவர் புலியாகவே இருக்கட்டும்.

**திரு. பி. எச். பாண்டியன்:** பின்னாலே நீங்கள் அவதிப்படப் போகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெங்கடேஸ்வர தீட்சிதரைப் பேச அழைக்கிறேன்.

[1989 பிப்ரவரி 16

* **திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சபை ஆரம்பித்து 36 மணித் துளிகள் ஆகி விட்டன. இந்தக் கட்சியைப் பற்றி அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அது உங்கள் அறையில் போய்ப் பேசித் தீர்த்துக் கொள்ளவேண்டியது. திரு. அழகர்சாமி சொன்னமாதிரி அறையிலே போய்ப் பேசித் தீர்த்திருக்கலாம். இது என்ன பட்டி மன்றமா? இதை வைத்து நீங்கள் தீர்ப்பு கூறப் போகிறீர்கள்? அவர்கள் விடாமல் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அதை அனுமதித்தது அவர்கள் வழியில் போவதாக இருக்கிறது. அவர் வெளியில் போகிறேன் என்கிறார். நீங்கள் கூடாது என்கிறீர்கள் எனக்கு அதைப்பற்றி எதுவும் தேவையில்லை. எங்களை அனுமதியுங்கள் கட்சித் தலைவர்கள் எல்லாம் பேசியாக வேண்டும். அதை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு விஷயங்கள். ஒன்றுக்கு நீங்கள் தீர்ப்பு அளித்துவிட்டீர்கள். இன்னொரு விஷயம் மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் உட்கார்ந் திருக்கிற இடம். அவர் எந்தக் கட்சியின் பின்னால் உட்கார வேண்டுமென்பது. அவர் தனியாக உட்காரலாம். ஆனால் அவர் சார்ந்திருக்கின்ற கட்சி—இரண்டு கட்சிகளும் இணைந்திருக் கிறது—அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக (ஜானகி) அணி பின்னால் அவர் உட்கார முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அருள்கூர்ந்து தங்களுடைய அணியைப் பற்றி நீங்கள் பேசுங்கள். அவையிலே இருக்கிற மற்றொரு உறுப்பினரைப் பற்றி ஏற்கெனவே பேசித்தான் பிரச் சினைகள் உச்ச கட்டத்தில் போய்க் கொண்டிருக்கின்றன. அருள் கூர்ந்து உங்கள் அளவோடு நீங்கள் வாருங்கள். அதைத் தான் திரும்பத் திரும்ப நான் சொல்ல விரும்புகிறேன் நீங்கள் பேசிக்கொண்டு இருப்பதனால் எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை நடக்கட்டும் என்று சொல்கிறேன். நாங்கள் எல்லோரும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறோம். நீங்களே ஒரு முடிவிற்கு வாருங்கள். நானும் ஒரு முடிவிற்கு வருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் எல்லைக்கு உட்பட்டுப் பேசுவதில் எனக்கு ஒன்றும் கவலையில்லை நான் முழுக்க முழுக்க



1989 பிப்ரவரி 16] [பேரவைத் தலைவர்]

அனுமதிக்கிறேன். ஆனால் இங்கே இருக்கிற இன்னொரு உறுப் பினர்பற்றிப் பேசுவதை, விரும்புவதை இருப்பதை நான் அனுமதிக்க மாட்டேன் நான் உச்ச கட்டத்தில் தான் இதைச் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினைகள் எல்லாவற்றுக்கும் ஒரே தீர்ப்பாகத் தயவுசெய்து சொல்ல வேண்டாம். உணர்ச்சிவசப்பட வேண்டாம் என்று சொன்னாலும் கோபித்துக் கொள்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அருள்கூர்ந்து இந்த மாதிரி வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டாம். தீர்ப்பு எப்படிச் சொல்ல வேண்டுமென்ற கட்டளையை இடுகிற உரிமை உங்களுக்கு அறவே கிடையாது. அதை நினைவில் கொள்ள வேண்டும். யார் உணர்ச்சிவசப்படுகிறார்கள் என்பதை நீங்களும் அறிவீர்கள் மற்றவர்களும் அறிவார்கள். நாடும் அறியும்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வேறு சட்டமன்ற உறுப்பினரைப் பற்றியோ, அவரது நடவடிக்கை பற்றியோ பேசவில்லை. வேறுவிதமாகவும் பேசவில்லை. எழுதப்பட்ட பிரச்சினைகள் இரண்டு தான். சட்டமன்றத்திலே பேசுவதற்கு அந்தக் கட்சியின் சார்பில் அவர் பிரதிநிதி என்று சொல்லி, அந்த இடத்திலே உட்கார்ந்து இருக் கிறார். ஏன் நான்கு பேர் இடம் பெற்றிருக்கிற மற்ற கட்சி களிலே இருப்பவர்களை எல்லாம் அந்தப் பக்கத்திலே உட்கார வைத்துவிட்டு, இந்த இடத்திலே அவருக்கு ஏன் இடம் தரப் பட்டது என்று சொன்னால், ஜானகி அம்மையாருடைய சொல்லும் . . (குறுக்கீடுகள்).

**திரு. பி. எச். பாண்டியன்:** முன்னாள் சபாநாயகர் என்ற முறையில் . . . .

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** அப்படி நீங்கள் அனுமதித்திருந் தால் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அருள்கூர்ந்து அனைவரும் உட்காருங்கள். விளக்கம் சொல்கிறேன்.

**திரு. பி. எச். பாண்டியன்:** நீங்கள் இருங்கள். எம்.ஜி.ஆர். சொத்தே போய்விட்டது. (குறுக்கீடு)

[1989 பிப்ரவரி 16

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அருள்கூர்ந்து கவனிக்க வேண்டும். 24 உறுப்பினர்களைக் கொண்டிருந்தால், அது ஒரு அரசியல் கட்சி, 'Legislature Party' என்று ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அதே நேரத்தில் 8 உறுப்பினர்களைக் கொண்டிருந்தால் அது ஒரு 'Group' அணி என்று கொள்ளப்படுகிறது. 8 உறுப்பினர்களைக் கொண்டிராத கட்சிகள் மொத்தத்தில் வாங்கப்பட்ட வாக்குகளில் 4 விழுக்காட்டிற்கு மேல் வாங்கியிருந்தால் "அணி" என்று சட்டபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. எனவே, அந்த அடிப்படையில் தான் அ.இ.அ.தி.மு.க. (ஜானகி இராமச்சந்திரன்) என்பது ஒரு அணியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கிறது.

(முற்பகல் 9-40)

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்தில் உங்களுடைய தீர்ப்பு மிக அருமையாக இருந்தது, மிக அருமையான தீர்ப்பு . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அருமையோடு முடித்துவிட்டால், இன்னும் அருமையாக இருக்கும். (குறுக்கீடு). இப்போது தாங்கள் முடிக்க வேண்டுமென்று கருதுகிறீர்களா அல்லது அவையை நான் தொடர்ந்து நடத்த வேண்டாமென்று கருதுகிறீர்களா?

திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விஷயம். நான் சொல்ல வந்தது, நீங்கள் அவரை உட்கார வைத்திருப்பது முன்னாள் சபாநாயகர் என்பதற்காக என்று அவர் சொன்னார். நீங்கள் இல்லை, ஜானகி அம்மையார் குழு ஏற்கெனவே மற்ற கட்சிகள் 4 இடங்களைப் பெற்றிருந்தாலும் கூட—வாக்குகள் அதிகம் பெற்ற அடிப்படையிலே சட்டப்படி அங்கே உட்கார்த்தி இருக்கிறேன் என்று சொன்னீர்கள். ஆக, He is representing —ஜானகி அம்மையார் குரூப் என்று சொல்கிறார்கள். நாங்கள் எழுதிக் கொடுத்திருப்பதும் அதுதான். அந்த ஜானகி அம்மையார் கட்சியும், எங்கள் கட்சியும் ஒன்றாக இணைந்தகற்குப் பின்னால் அதை ரெப்பரசன்ட் பண்ணி அங்கே எப்படி உட்கார முடியும்?

அடுத்து, அந்தக் கட்சியின் பெயரை அவர் சொல்ல முடியாது என்பதற்காகத்தான் நாங்கள் தீர்ப்பை எதிர்பார்க்கிறோம். இப்போது இல்லாவிட்டாலும் நாளை அதற்கான தீர்ப்பை வழங்கினால் போதும். (குறுக்கீடுகள்)



1989 பிப்ரவரி 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது யார் யார் எல்லாம் விரும்புகிறார்களோ அவர்களெல்லாம் பேசலாம்.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம். என்னுடைய நண்பர் திருநாவுக்கரசு, எதிர்க்கட்சித் துணைத் தலைவர், ஜானகி எம்.ஜி.ஆர், அணி இணைந்து விட்டதாகச் சொன்னார். எங்கே இணைந்தது? யார் இணைந்தார்கள்! (குறுக்கீடு) நான் சொல்லி முடித்து விடுகிறேன். உங்களுக்குப் பின்னால் சான்ஸ் கொடுக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் வேண்டுமானால் இங்கே இருங்கள், எனக்கு இந்த அவையிலே இருக்க வேண்டும் என்பது முக்கியமல்ல. நாமெல்லாம் நண்பர்கள், ஒன்றாக இருந்தோம். எங்களுக்கு வந்த கதி என்ன என்று பாருங்கள்? யார் குறுக்கே வந்தார்கள்? நமக்கு இது வேண்டுமா?

மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசும்போது 3-ல் 2 பேர் எழுதிக் கொடுத்தால், அதுவும் 'உங்களில்' என்று சொல்லி விட்டார்கள். நான்தான் எழுதிக் கொடுக்க வேண்டும். எங்களில் 3-ல் 2 பேர் மெர்ஜருக்கு ஒத்துக் கொண்டால்தான் இந்தப் பிரச்சினை. நான் ஒருவன் தான் இருக்கிறேன். எங்கே மெர்ஜ் பண்ணுவது என்னை? (குறுக்கீடு) நான் பேசி முடிக்கிறேன். ஏன் திருநாவுக்கரசு அவசரப்படுகிறீர்கள்? இது அவைக்கு வரக் கூடாத விவகாரம். இதை வரவழைத்தது நீங்கள். நான் இதைக் கொண்டு வர விரும்பப்படவே இல்லை. அன்னை திருமதி ஜானகி எம்.ஜி.ஆர்., சார்பில் 9 லட்சம் வாக்குகளைப் பெற்று இந்த இடத்திலே நான் அமர்ந்தது எப்படி என்று கேட்கிறார்கள். 4 பேர் சேர்ந்து விட்டால், அந்த 9 லட்சம் வாக்குகளைப் போட்டவர்கள் எல்லாம் அந்தக் கட்சிக்குப் போய் விட்டார்களா? ஜானகி இப்போது அரசியலில் தேறிவிட்டார்கள். நீங்கள் நினைக்கிற மாதிரி அல்ல. ஏதோ தேர்தலில் வந்த முடிவுகள் வேறு வகையில் இருக்கின்றன. அதனால் இங்கே வந்து பிரச்சினையைக் கிளப்புவது, நான் எப்படி இங்கே அமரலாம் என்று கேட்பது சரியல்ல. (குறுக்கீடு) இது என்ன முறை? ஏன் அவசரப்படுகிறீர்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த இரண்டு பிரச்சினைகளும் "இன்டர்லிங்க்" என்பது போல இணைந்த பிரச்சினைகள். இது பற்றி இந்த அவையிலே விவாதித்துக் கொண்டிருந்தால், இன்று ஆளுநர் உரையின் மீது

எதிர்க்கட்சியினுடைய தலைவர்கள் யாரும் பேச இயலாத சூழ்நிலை ஏற்படும். நாளைக்குப் பதிலுரை என்பதையும் வேறு ஒரு நாளைக்கு மாற்றி வைத்துக் கொள்ளக் கூடிய ஒரு இக்கட்டான நிலைமை ஏற்படும். எனவே, இத்தோடு இந்தப் பிரச்சினையை முடித்து விட்டு, வேண்டுமானால் பேரவைத் தலைவர் அறையிலே இது குறித்து விவாதித்து முடிவுக்கு வருவது நல்லது. எனவே, இத்தோடு முடித்து விடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்றுக் கொள்கிறேன். இத்தோடு முடித்துக் கொள்கிறேன். ஆனால் நாளைக்கு நாங்கள் எழுப்பிய பிரச்சினைக்கு தீர்ப்புச் சொல்ல வேண்டும். இதைச் சபையிலே விவாதிப்பது தான் பொருத்தமாக இருக்கும். இது சாதாரண பிரச்சினை அல்ல. சட்டப் பிரச்சினை. அறையிலே விவாதித்து முடிவு எடுக்க முடியாது. இங்கேயே அவர் எப்படிப் பேசுகிறார், நாளை அறையில் அவர் எப்படிப் பேசுவார்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை அறையில் முடிவெடுப்பதா அவையில் முடிவெடுப்பதா என்பதைப் பேரவைத் தலைவர் தான் முடிவு எடுக்க வேண்டும்.

**திரு. பி. எச். பாண்டியன்:** தலைவர் அவர்களே, இது அவைப் பிரச்சினை என்றார். அல்ல, என்னுடைய பிரச்சினை. என் பிரச்சினையை அவையிலே விவாதித்தால் நான் எல்லோருடைய பிரச்சனைகளையும் விவாதிக்கட்டுமா? விவரம் இருக்கிறது. எம்.ஜி.ஆர். மறைந்தால், கட்சி பிளவுபட்டால் 30 சதவிகிதம் தொண்டர்கள் பிரிந்தால் குருடர்கள், செவிடர்கள், ஊமைகளுக்குப் போக வேண்டும் என்று எழுதி வைத்திருக்கிறார். அதற்குத்தான் இந்த இணைப்பு. நான் போகமாட்டேன். ஏழைக்கு வேணும். என் சொத்து ஏழைக்கு . . . .

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, இதை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் பி. எச். பாண்டியன் . . . . (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அவர்களுடைய இரு பிரிவுகளைப் பற்றிய விவாதத்தை பொது மேடையிலே பேசுவதைப்போல இந்த அவையிலே நீண்ட நேரமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இந்த அவையில் இருக்கின்ற ஆளும் கட்சி தி.மு.க., ஏனைய காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்ட்



கட்சிகள் மற்ற கட்சிகள் எல்லாம் வேடிக்கை பார்த்துக்கொண்டு அவர்களுடைய கடமையை ஆற்ற முடியாமல் இருப்பதைத் தாங்கள் உணர்வீர்கள். எனவே இந்தப் பிரச்சினைக்கு இதோடு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீங்களும் பேசியிருக்கிறீர்கள். அவர்களும் பேசியிருக்கிறார்கள். (குறுக்கீடு).

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, அந்த வாசகங்களை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதையும் நீக்க முடியாது. முழுவதுமாக அத்தனையும் இடம்பெறும்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, அவருக்குச் சாதகமாகச் செய்ய வேண்டும் என்ற கருத்திலே, ஒரு தவறான சொற்றொடரை நீங்கள் அனுமதிக்கின்ற அடிப்படையில் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். அவர் சொன்ன அந்தச் சொற்களை ஆட்சேபித்து வெளிநடப்புச் செய்கிறோம்.

[அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக (ஜெ) உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.]

### 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் முன்மொழியப்பெற்று, வழிமொழியப்பெற வேண்டும். முதலில் மதிப்புமிகு உறுப்பினர் திரு. பொன். விஜயராகவன்.

* **திரு. பொன். விஜயராகவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

(1) தமிழகத்தின் பொருளாதாரத்தையும், வளத்தையும், உருவாக்கிடும் விவசாயிகளின் நலன் குறித்தும்;

(2) ஆளும் கட்சியின் தேர்தல் அறிக்கையில் விவசாயிகளுக்கு உறுதிமொழியாக வழங்கப்பட்ட

(i) சிறு விவசாயிகளின் பழைய கூட்டுறவுக் கடன் பாக்கிகளை அனைத்தும் அறவே ரத்து செய்வது பற்றியும்;

[திரு. பொன். விஜயராகவன்] [1989 பிப்ரவரி 16

(i) விவசாயிகள் மின் வாரியத்திற்கு தாமதமாகக் கட்டிய தொகைக்கு விதிக்கப்பட்டிருக்கும் வட்டியை அறவே ரத்து செய்வது பற்றியும்;

(ii) காவிரி மட்டுமல்லாது பாலாறு, வைகை, தாமிர பரணி போன்ற நதிகளுக்கும் அதைச் சார்ந்த கால் வாய்களுக்கும் உரிய இடங்களில் "காங்கிரீட் லைன்" அமைத்தல்; ஏழ்பவானி திட்டத்தின் கீழ் ஆண்டுக்கு ஒரு முறை தண்ணீர் விடும் உத்தர வாதம் அளித்தல்; நீர்ப்பாசன மேம்பாட்டு நிலைக் குழு (Standing Irrigation Commission) அமைத்தல் ஆகியவற்றைப் பற்றியும்;

(3) மத்திய அரசு கைத்தறித் துணிகளுக்கு வழங்கி வந்த ரிபேட்டை ரத்து செய்ததை நீக்கி ரிபேட்டை மீண்டும் கொண்டு வர வலியுறுத்துவது பற்றியும்;

(4) தமிழ்நாட்டிலுள்ள ரேஷன் கடைகளில் வழங்கப்படும் பச்சரிசிக்குப் பதிலாக புழுங்கல் அரிசி வழங்க வேண்டும் என்ற பெருவாரியான தமிழக மக்களின் கோரிக்கை குறித்தும்;

(5) தமிழ்நாட்டில் குறிப்பாக கன்னியாகுமரி மாவட் டத்தில் பல்லாயிரக்கணக்கான குடும்பங்களுக்கு ரேஷன் கார்டுகள் வழங்கப்படாமலிருப்பது குறித்தும்;

(6) சென்னைப் பெருநகர் விரைவு இரயில்வே திட்டம் 'கரூர்-திண்டுக்கல், திண்டுக்கல்-காரைக்குடி அகல இரயில் பாதைத் திட்டம்' ஆகியவற்றை வேகமாகச் செயல் படுத்த மத்திய அரசை வலியுறுத்துவது பற்றியும்;

(7) சென்னைப் பெருநகருக்குத் தண்ணீர் வழங்கும் தெலுங்கு கங்கைத் திட்டத்தினைச் செயல்படுத்த வேண்டிய அவசியம் குறித்தும்;

(8) பினாமி நிலம் ஒழிப்பு குறித்தும்;

(9) கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் தேதி திட்டவட்ட மாக அறிவித்தல் பற்றியும்;

(10) தமிழகத்தில் மூடிக்கிடக்கின்ற பஞ்சாலைகளைத் திறப்பது குறித்தும்;



1989 பிப்ரவரி 16] [திரு. பொன். விஜயராகவன்]

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது".

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

திரு. எஸ். டி. உகம்சந்த் இருக்கையில் இல்லாததால் திருத்தம் மொழியப் பெறவில்லை.

திரு. பி. மாரப்பன் இருக்கையில் இல்லாததால் திருத்தம் மொழியப் பெறவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் சோ. அழகர் சாமி, ஜி. பழனிசாமி, செ. பிச்சைமுத்து ஆகியவர்கள் திருத் தங்கள் கொடுத்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் அவற்றை மொழிவார்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே நான் கீழ்க் கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"(1) பினாமி நிலங்களை அரசு கையகப்படுத்தி நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்குவது பற்றியும்;

(2) வீட்டுமனை இல்லாத கிராமப்புற ஏழைகள் அனைவ ருக்கும் குறிப்பிட்ட காலத்திற்குள் மனைகள் வழங்குவது பற்றியும்;

(3) குத்தகை சாகுபடியாளர் அனைவரையும், பதிவு செய்து உரிய பாதுகாப்பு அளிக்கப்படுவது பற்றியும்;

(4) விவசாயிகளைக் கடன் தொல்லையிலிருந்து விடுவிக்க கடன் நிவாரணம் அளிப்பது பற்றியும்;

(5) மூடிக்கிடக்கும் பஞ்சாலைகளைத் திறந்து தொழிலா ளர்களுக்கு உதவுவது பற்றியும்;

(6) போதுமான வேலையும் ஊதியமும் இன்றி அல்லல்படும் நெசவாளர்கள் பற்றியும்;

(7) நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டே போகும் அத்தியா வசியப் பொருள்களின் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவது பற்றியும்;

(8) விவசாய விளைபொருள்களுக்குக் கட்டுபடியான விலை கிடைப்பது பற்றியும்;

[திரு. சோ. அழகர்சாமி] [1989 பிப்ரவரி 16

(9) மத்திய அரசு ஊழியர்களுக்குச் சமமான ஊதியம் மாநில அரசு ஊழியர்களுக்கும் வழங்கப்படுவது பற்றியும் ;
—ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது".

**திரு. ஜி. பழனிச்சாமி:** தலைவர் அவர்களே, நான் திருத்தத்தை வழிமொழிகிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் இருக்கையில் இல்லாததால் திருத்தம் மொழியப் பெறவில்லை.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே. நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

" Add at the end the following :

' but regret to note that no mention is made about :

(1) the Legislation for inquiring into conduct of the Ministers including the Chief Minister and thereby to guarantee a clean and efficient Government ;

(2) the creation of new jobs to solve the problem of unemployment ;

(3) the re-opening of the closed industrial undertakings ;

(4) the relief to be given for farmers from their debt burden ;

(5) the clear language policy in view of the fact that the Government of India have already enacted legislation for continuing English as official language of the Central Government till all the non-Hindi speaking States accept Hindi as a sole official language ;

(6) the steps to be taken to check the rising prices of the essential commodities especially the price of rice in the open market ;

(7) the quantum of amount cut in the plan outlay of Rupees 1,457 crores. "



1989 பிப்ரவரி 16]

**திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்:** நான் திருத்தத்தை வழிமொழிகிறேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வரர் தீட்சிதர்:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

" Add at the end the following :

' but regret to note that no mention is made about :

(1) the transfer of officers effected during the election ;

(2) the announcement made enhancing the prices of rice when the popular Ministry was to take office. "

**திரு. எம். சேட்டு:** நான் திருத்தத்தை வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் தொடர்கிறது. இன்று ஏற்கனவே அதிக நேரம் முன்னுரிமைப் பகுதியில் எடுத்துக் கொள்ளப்பட்டு விட்டதால் இப்பொழுது நேரடியாகக் கட்சிகளினுடைய தலைவர்கள் பேசவிருக்கிறார்கள். முதலில், திரு. ஆஸ்கார் சி. நிக்லி.

(முற்பகல் 9-50)

**Thiru OSCAR C. NIGLI:** Honourable Speaker and hon. Members of the Assembly! As the outset, I would like to convey my greetings on behalf of the Anglo-Indian Community to the Hon. the Chief Minister. Why I would like to make a mention of this is : Some of my colleagues have been telling me that I have been nominated by the Governor and a decision has been taken by the Governor. I would like to make it clear to the very many members here that the Governor simply makes his nomination on the recommendation of the Chief Minister. Therefore, on behalf of my community, I am grateful to the Hon. the Chief Minister and the Dravida Munnetra Kazhagam — party for this nomination. (Cheers).

I would like to draw the attention of this House regarding the Governor's Address with regard to English. This Government has reiterated that it will fight for the retention of English and I am sure that the Government which thinks in these terms is a Government with vision and the D.M.K. is definitely one party which has been standing by the English language, because English has been our mother tongue. Some people say that it is a foreign language. I say ' It is not '. Because it is the mother tongue of Anglo-Indian. We are Indians and so it is not foreign.

[Thiru Oscar C. Nigli] [1989 பிப்ரவரி 16

Moreover, two States in India—the North Eastern States have English as their Official Language and that is why we have been demanding that English should be included in the English Schedule of the Constitution. It is the link language, anl not just national, but it is an international language. I am not advocating English out of selfish motives. If we call our Parliamentary system, Indian then English is also Indian, because our parliamentary system came from the English. If English is abolished even for one day, we can imagine, the entire administrative machinery would come to an absolute standstill.

We, the Anglo-Indian will be with the people of Tamil Nadu to fight against any imposition of Hindi, through, as my hon. Friend Thiru M. Abdul Latheef said, subtle, back-door methods. We are not taking any advantage by not learning Hindi. Let us not impose Hindi on the people. I am quite sure that if you give the Tamilians six months, they will speak better Hindi than a North Indian. We have always been pro-Tamil. In fact

டாக்டர் கலைஞர் அவர்களை முதலாவது பார்க்கும்போது, அவருடைய முதல் கேள்வி, 'தமிழிலே பேசுவாரா?' என்பது. நான் தமிழ்நாட்டிலே பிறந்தவன். நான் தமிழன்தான். இப்போது கலைஞர் தலைமையில் ஒரு தமிழ் அரசு வந்திருக்கிறது. அதை நான் ஆதரிக்கிறேன்.

As one who has been teaching, and teaching Economics for the past over ten years, I am happy to note in the Governor's Address, from paragraphs 17 to 26, that it is dealing with the economic policy and it is indeed a great lift for Tamil Nadu Economy, because economic development can only take place if it also includes welfare, and welfare measures have been spelt out. I am sure these welfare measures will help the over-all economic development of Tamil Nadu.

Before I conclude, I would just like to make an observation. Tamil Nadu was holding the third place, after Maharashtra and Gujarat industrially. Today, over the years, we have slipped to 17th place, which is really a distressing figure, namely, to slip from third place to 17th place, so far as the States in the country are concerned. So I will be happy if this Government would take immediate measures to restore Tamil Nadu on the industrial map and ensure to see how best there can be some kind of economic prosperity in the next few years, so that we would be able to restore the glory of Tamil Nadu which was there a few years ago. வணக்கம், நன்றி.



1989 பிப்ரவரி 16]

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு இன்றைக்குப் பேசக் கூடிய வாய்ப்பு இந்த அவையிலே எனக்குக் கிடைத்திருக்கிறது. 1980-லிருந்து 1984 வரை துணைச் சபாநாயகராக இருந்த நேரத்தில் ஒரு நேரத்தில் காவல்துறை மானியத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அனுமதித்ததனால் பேசினேன். அதற்குப் பிறகு சபாநாயகராகிவிட்ட பிறகு பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்காமல் இருந்த காரணத்தால் பேச முடியவில்லை. இன்றைக்கு அந்த வாய்ப்பைக் கொடுத்திருக்கிறீர்கள். மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆளுநர் அவர்கள் இங்கே நிகழ்த்திய உரையைப் படித்துப் பார்த்ததில் என்னைக் கவர்ந்த பாரா—15—ஆங்கிலத்தில்—அதாவது, யாரோ சிலருக்காக விதிகளை மதுவிலக்குச் சட்டத்தில் திருத்தி, யாரோ கொஞ்சம் பணத்தைச் சேர்த்துவிட்டார்கள் என்பதை பெயரைக் குறிப்பிடாமல் நீங்கள் சொன்ன காரணத்தினால் நானும் அப்படியே இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்று காலை இங்கு வருவதற்கு முன்பு, இந்தியன் பீனல் கோடில் அதற்கு என்ன பதில் இருக்கிறது என்பதைக் கொஞ்சம் திருப்பிப் பார்த்தேன்.

அதில்

Wrongful gain : Wrongful gain is the gain by unlawful means of property to which the person gaining is not legally entitled.

என்று இருக்கிறது.

சட்டத்திற்கு முரணாக தனக்கு சேரக்கூடாத பணம் சேருமேயானால் அது

Wrongful gain : A person is said to gain wrongfully when such person retakes wrongfully as well as when such person acquires wrongfully.

இது சேர்த்ததை கையில் வைத்துக்கொள்ளுவது

முதலில் இந்த விவாதத்தை துவக்கி வைத்த என்னுடைய வழக்கறிஞர் நண்பர் திரு. கணபதி அவர்கள் பேசும்போது ஒரு விசாரணைக் கமிஷன் வேண்டுமென்று சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் அதில் எனக்கு உடன்பாடு கிடையாது.

விசாரணைக் கமிஷனால் பலன் கிடையாது. ஒரு சாதாரண மனிதன் ஒரு கடையில் வேலை பார்த்தால் கடையில் ஒரு பொருளைத் திருடி விட்டால் போலீசார் அவனைக் கைது செய்கிறார்கள். உடனே பொருளை பறிமுதல் செய்கிறார்கள். சிறையில் அடைக்கிறார்கள், நீதிமன்றத்திற்கு முன்னால் நிறுத்துகிறார்கள். சாதாரண மனிதன் அவன் ஒரு வாக்காளர். வாக்காளர் கதி அப்படி. நாம் எப்படி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்கு ஒரு உதாரணத்திற்கு இதைச் சொன்னேன்.

ஆகவே, இதுவரை பயன்படுத்தாத ஒரு சட்டப் பிரிவு இந்தியாவில் 1945 ஆம் ஆண்டில் கவர்னர் ஜெனரல் போட்ட அவசரச் சட்டம் 1945— Criminal Law Amendment ஐ இதுவரை யாரும் இந்தியாவில் பயன்படுத்தவில்லை. அது இன்னும் அவசரச் சட்டமாகவே இருக்கிறது. எந்த அவசரத்தில் போட்டார்களோ தெரியாது. அந்தச் சட்டத்தின்படி நாளைக்கே நீங்கள் முதலில் பறிமுதல் செய்யலாம், பறிமுதல் செய்துவிட்டு வழக்கு போட வேண்டும்.

வழக்குப் போட்டால் எனக்குத் தெரியும், சட்டத்திலே என்னென்ன வழிகளிலே ஓட்டைகளை நாங்கள் கண்டுபிடித்து நாங்கள் வாதாடுவோம் என்பது எனக்குத் தெரிந்த காரணத்தால் நான் சொல்லுகிறேன். இதைக்கூட இப்போது பத்திரிகை நிருபர்கள் வேறுவிதமாகப் போடுவார்கள். நான் கறுப்புக் கோட்டை 10 நாட்களுக்கு முன்பு மாட்டிய உடனேயே துணைச் சபாநாயகராக இருந்த நேரத்தில் விசாரணை இல்லாமலேயே கொலை செய்தவனை கொல்ல வேண்டாமென்று சபாநாயகர் சொன்னார் என்று அன்றைக்குப் போட்டார்கள். அங்கே நான் கறுப்புக் கோட்டைப் போட்டால் குற்றவாளிகளைப் பாதுகாக்கக் கூடியவனாக இருக்கவேண்டும். ஆனால் இங்கே வெள்ளைச் சட்டையைப் போட்டால் குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு தூண்டக் கூடியவனாக இருப்பது, இதுதான் என்னுடைய எம்.எல்.ஏ. பொறுப்பு. அங்கே தொழில், சாப்பிட வேண்டும். வேறு வழி கிடையாது இந்த நாட்டில்.

ஆகவே நான் இங்கே அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுவது யார் என்று தெரியவேண்டாம், சொல்லவே வேண்டாம், முதலில் பறிமுதல். பறிமுதல் செய்து அரசாங்கத்தில் வைத்துக்கொள்





ளுங்கள். மத்திய அரசிடம் போய் கையேந்த வேண்டிய நிலையே இருக்காது. நமக்கு அரசாங்கத்திற்கு வரவேண்டிய பணம் வருமானால் இங்கே பற்றாக்குறையே இருக்காது. வணிக வரித் துறை . . . .

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கலைஞர் அவர்கள் எடுத்துச் சொன்னபடி அரசாங்க கஜானா காலியாக இருக்கிறது. டெல்லியிடம் பணம் கேட்டிருக்கிறார்கள். கேட்கவேண்டிய அவசியமே வராது, இருப்பவர்களிடமிருந்து இருப்பதை பறித்துக் கொண்டால் என்றார். எவ்வளவு கோடி தேறும் என்பதை திரு. பாண்டியன் அவர்கள் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. எச். பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நாம் அரசியல் ஆக்காமல், ஒவ்வொரு துறையாக நான் சொல்கிறேன். அதாவது இந்த ஒரு ஆண்டு காலமாக சபாநாயகராக இருந்தேன். எல்லோரும் என்னென்னமோ சொல்லும் போது என்னுடைய எண்ணம் மட்டும் இதில்தான் போயிற்று. ஒவ்வொரு துறையிலும் எந்த எந்த அளவுக்கு நிர்வாகத்தில் சில குறைபாடுகள் இருந்தன என்பதை பத்திரிகைகளின் வாயிலாகவும், பல பந்தகங்களைப் படித்தும் தெரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு இருந்தது.

(முற்பகல் 10-00)

வணிக வரித் துறையில் ஒருவர் 70 லட்சம் ரூபாய் அரசாங்கத்திற்குக் கட்டவேண்டிய விற்பனை வரியைக் கட்டாத காரணத்தால் ஒரு இறப்பிடு. விசாரித்தால் தெரியும். அரசியல்வாதி அல்ல; நீங்கள் யாரும் தவறாக எண்ண வேண்டாம். நான் நாட்டில், நிர்வாகத்தில், சிலபேர் வெளியிலே இருக்கக் கூடியவர்கள் தவறு செய்பவர்களைத் தான் சொல்கிறேன். அதே நபர் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில், பினாமி காண்டிராக்டுகளை எடுத்து, உயிரோடு இல்லாதவர்களின், உலகத்திலேயே இல்லாதவர்களுடைய பெயர்களில் காண்டிராக்டுகளை எடுத்து, அங்கே ஒரு 70, 80 இலட்சத்துக்கு தவறு நடந்திருக்கிறது. அதே நபர்தான். ஆகவே அதற்குமேல் நான் சொல்ல வேண்டுமானால் நான் இங்கே இருக்கவேண்டிய நிலை

டையாது. நீங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்திக் கண்டுபிடியுங்கள். கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் சொல்லுங்கள், சொல்லுகிறேன். காரணம், நீங்கள் செய்ய வேண்டியதை நீங்கள் செய்ய வேண்டும், அதற்காகச் சொன்னேன். இங்கே மதுவிலக்குக் குற்றத்தில் 6 இலட்சம் வழக்குகள் தேங்கிக் கிடப்பதாக ஆளுநர் . . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பெயர்களைச் சொல்லவேண்டிய அவசியமில்லை. சிவில் சப்ளைஸில் ஒரு காண்டிராக்ட் என்று சொன்னால், அது பொதுவாக இருக்கிறது. அது எங்களால் கண்டுபிடிப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. எனவே குறிப்பாவது காட்டவேண்டும். என்ன காண்டிராக்ட் என்று சொன்னால் நாங்கள் அதைக் கண்டுபிடிக்க ஏதுவாக இருக்கும்.

**திரு. ஒய். வேங்கடேஸ்வர தீட்சிதர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். இவர் சொல்கின்ற இந்த ஊழல்களெல்லாம் கவர்னர் ஆட்சியில் நடந்ததா அல்லது இவர்கள் ஆட்சி நடந்தபோதே அப்போதே நடந்ததா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**திரு. பி. எச். பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத்தான் சொன்னேன், அரசியல் என்பது வேண்டாம் என்று. நீங்கள் அரசியல் என்று பேசுவதாக இருந்தால் நான் ஒன்றுமே பேச வேண்டாம். நான் இப்போது ஒன்றும் சொல்லவில்லை. இதைச் சொல்வதற்கு எனக்கு உரிமையில்லை என்று சொன்னால், எனக்கு இங்கே என்ன வேலை? எனக்கு எதற்கு இந்த இடம்? மதுவிலக்கு குற்றத்தில் குற்றம் சாட்டப்பட்டோர் 6 இலட்சம் பேர் வழக்குகளின் விசாரணைக்காக எதிர்நோக்கி இருப்பதாகப் பார்த்தேன். இவ்வளவு பெரிய குற்றவாளிகளெல்லாம் பங்களாக்கள் கட்டி, தியேட்டர்களைக் கட்டி பெரியவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கும்போது, இந்த ஆறு இலட்சம் பேர்களின் மீது ஏன் வழக்கு? முதலமைச்சர் அவர்களே, இதை நீங்கள் வாபஸ் பெறுங்கள் என்று நான் இங்கே கேட்டுக் கொள்கிறேன். இந்த 6 இலட்சம் பேர்களும் ஏழைகள். இந்த 6 இலட்சம் பேர்களும் சாதாரண, சாமானிய மக்கள். இவர்கள்தான் நம்மை இங்கே அனுப்பியிருக்கிறார்கள்; வாக்களித்திருக்





கிறார்கள். சொன்னேனே, இரண்டு குற்றச்சாட்டுகள்; அதில் சம்பந்தப்பட்ட இரண்டு பேரும் வாக்குச் சாவடிக்கே போயிருக்கமாட்டார்கள் வாக்களித்தவர்களைத் தண்டிக்கலாமா? நமக்கு வாக்களித்தவர்களைத் தண்டிக்கலாமா? (குறுக்கீடு).

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சாராய வழக்குகளில் தவறு செய்தவர்களால்தான் இங்கே இருக்கின்றவர்களெல்லாம் அனுப்பப்பட்டிருக்கிறோம் என்று சொல்வது இந்த அவையை அவமதிப்பதாகும் என்று நான் குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அந்த 6 இலட்சம் பேரும் வாக்களித்தார்கள் என்றுதான் சொன்னார்களே தவிர, மாண்புமிகு உறுப்பினர் பி. எச். பாண்டியன் அவர்களோ அல்லது வேறு யாரோ ஒருவர் அந்த 6 இலட்சம் பேர்களால்தான் வந்தார்கள் என்று சொல்லவில்லை. மொத்தத்திலே வாக்களித்தவர்களிலே அந்த 6 இலட்சம் பேர்களும் உண்டு என்பதைத்தான் அவர்கள் சொன்னார்கள் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சா. பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாராயம் காய்ச்சுபவர்கள் வாக்களித்துத்தான் நாம் வந்தோம் என்று சொல்ல வருகிறாரா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு சிறு விளக்கம். பல இலட்சக்கணக்கான மக்கள் நமக்கு வாக்களித்திருக்கிறார்கள். இந்தச் சாராய வழக்கிலுள்ள 6 இலட்சம் பேரும் வாக்களித்து இருக்கிறார்கள். ஓர் உண்மை; அவ்வளவுதான்.

**திரு. பி. எச். பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது இவர்களெல்லாம் சிறு தவறைச் செய்திருப்பவர்கள், குடித்து இருப்பார்கள் (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் முதல்வர் அவர்கள் தெளிவாக ஒரு கேள்வியைக் கேட்டார்கள். எந்த காண்டிராக்ட்? எப்படிப்பட்ட காண்டிராக்ட் என்று மட்டும் கேட்டார்கள். பெயரைக்கூட கேட்கவில்லை . . . .

(குறுக்கீடு).

**திரு. பி. எச். பாண்டியன்:** இதை முதல்வர் கண்டு பிடிக்கட்டும். கண்டு பிடிக்க முடியவில்லையென்றால் நான் சொல்வேன். நான் கண்டுபிடிப்பதாக இருந்தால் நானே முதல்வராக வந்து விடுவேன். (சிரிப்பு) இல்லை, வேறுவிதமாக எடுத்துவிடாதீர்கள்.

ஏழைகள்தான் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை நான் வழக்கறிஞர் என்ற முறையில் கொஞ்சம் உணர்வேன். 1888-வது ஆண்டு Madras City Police Act பிரிவு 64. என்ன குற்றம் தெரியுமா? தலையில் துண்டு கட்டினால் குற்றம். முக்காடு வழக்கு. இன்றைக்கும் போலீசார் போடுகிறார்கள் வெள்ளைக்காரன் நம்மை அடையாளம் தெரியாமல் கொண்டு வந்த இந்தப் பிரிவு இன்றைக்கும் பயன்படுத்தப்படுகிறது. இது தேவைதானா? ஏழை எளிய மக்களைப் பாதுகாக்க வேண்டாமா? முக்காடு வழக்கு இனிமேல் போடக் கூடாது என்று உத்தரவிடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1898-வது ஆண்டு 41 Cr. P.C. பிரிவு 64. சந்தேக வழக்கு இன்றைக்கும் தமிழ்நாட்டிலுள்ள எல்லா நீதிமன்றங்களிலும் காலை 11-00 மணிக்கு நீதிபதி முன்னால் நிற்பது யார் தெரியுமா, தமிழ்நாட்டில், சந்தேகத்திற்கு உரியவர்கள். 11 மணிக்கு காலையிலே, பெருமைதான். நீதிபதி கேட்பார். நேற்றையதினம் இரவு 11 மணிக்கு கோபாலபுரத்திற்கு அருகாமையில் நடந்து சென்றீர்களா என்று. ஆம் என்றால் போதும். 15 நாள். இது தான் நடக்கிறது. இது தேவையா? கன்கரன்ட் லிஸ்டிலேதான் வருகிறது. உடனே சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரலாம். இப்படி ஏழை எளிய மக்களுக்கு (குறுக்கீடு) நான் பேசி முடித்து விடுகிறேன். ஏழை எளிய மக்களுக்காக இருக்கக்கூடிய அரசு, ஏழைகளை மன்னிக்க வேண்டும். பெரிய பெரிய குற்றங்களைச் செய்தவர்கள், FERA-FERA -வுக்கு மன்னிப்பு. (குறுக்கீடு) நான் பேசி முடித்த பிறகு . . .

* **திரு. க. குருநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 41 சி.ஆர்.பி.சி. என்ற செக்ஷன் இருக்கிறது. அந்த செக்ஷன் படியும் வழக்குகள் தற்போது போடப்படுகின்றன. அது தேவையில்லாத ஒரு செக்ஷன் என்ற காரணத்தால் இன்றையதினம் நடுவர்களெல்லாம் 15 தினங்கள் தண்டனை கொடுப்பதை விட்டு விட்டு, உடனடியாக மன்னித்து அனுப்புகிறார்கள். ஆகவே, அந்த செக்ஷன் இருப்பது தேவையானது என்று கூறுகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒழுங்கு பிரச்சினை என்பது, உறுப்பினர் எழுப்புகின்ற பிரச்சினைக்கு முரணாக வேறு ஏதாவது செய்தி இருந்தால்தானே தவிர தன்னிலை விளக்கம் கூறுவதோ, வேறு விளக்கத்தைச் சொல்வதோ பொதுக் கருத்தைச் சொல்வதோ அல்ல. அருள்கூர்ந்து ஒழுங்குப் பிரச்சினை பற்றி உள்ள விதியைப் படித்துப் பாருங்கள்.

**திரு. பி. எச். பாண்டியன்:** ஆளுநர் ஆட்சியில் பத்திரிகையில் ஒரு செய்தியைப் பார்த்தேன். வெளி மாநில லாட்டரி சீட்டை இங்கே விற்றால் அதில் விற்பனை வரி இழப்பு ஏற்பட்டிருப்பதாக —முழுமையாக எனக்குத் தெரியவில்லை. இன்னும் தெரிந்து கொள்ளலாம் என்று பார்த்தேன். வேறு வழி தெரியவில்லை. இந்த ஒரு வாசகத்தை மட்டும் முதலமைச்சருடைய கவனத்திற்குச் சொல்கிறேன். வெளி மாநில லாட்டரி சீட்டைத் தமிழ்நாட்டில் விற்றால் இங்கே விற்பனை வரி சேர்வது கிடையாது. இதனால் பல கோடி இழப்பு என்பதை ஆளுநர் ஆட்சியில் பத்திரிகை வாயிலாக நான் தெரிந்து கொண்டேன். ஆகவே, அதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று. இன்றைக்கு இரண்டு நாட்களாக இங்கே விவாதத்தில் பல்வேறு உறுப்பினர்கள் கலந்து கொள்ளும்பொழுது உணவுத் துறை அமைச்சரவர்கள் நியாய விலைக் கடைகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். (குறுக்கீடு) அதுபற்றிச் சொல்லவில்லை நான். ஒரு எடுத்துக்காட்டாகச் சொல்கிறேன். நம்முடைய நாட்டில்தான் ஒரே பஜாரில் நியாய விலைக்கடையும் உண்டு; அநியாய விலைக் கடையும் உண்டு. சிமெண்ட் நியாய விலைக் கடையிலும் வாங்கலாம், சில நேரத்தில் அதே கடையிலும் 10 ரூபாய் அதிகம் கொடுத்தும் வாங்கலாம். இது நம்முடைய நாடு. ஒரே கடையில் சீனி நியாய விலைக் கடையிலும் வாங்கலாம்; அதே கடையில் அநியாய விலையும் கொடுத்து வாங்கலாம். இன்றைக்கு அநியாய விலையையே விளம்பரப்படுத்தக்கூடிய அளவிற்குப் பத்திரிகைகளில், ஞாயிற்றுக்கிழமை 'இந்து' பத்திரிகையைப் படித்தவர்களுக்குத் தெரியும். " Maruti Car allotment papers for sale " என்று பிளாக் மார்க்கெட்டிலே விற்பதற்கு ஒரு advertisement இது நாடு.

[திரு. பி. எச். பாண்டியன்] [1989 பிப்ரவரி 16

(முற்பகல் 10-10)

இதுவும் Concurrent List -ல்தான் இருக்கிறது, மோட்டார் வாகனங்கள் பற்றி. ஆக, எதற்கும் பார்த்துக் கொண்டிருக்க வேண்டாம்; சில நேரங்களில் ஆட்சியில் அமர்ந்தவுடன் நமக்கு ஏன் இந்த வம்பு ; நாம் ஏன் பலருடைய பொல்லாப்புக்கு ஆளாக வேண்டும்; எல்லோரிடமும் நல்ல பெயர் எடுக்க வேண்டுமென்று நீங்கள் இருந்துவிடக் கூடாது என்பதற்காக இதைச் சொல்கிறேன். வேண்டுமானால் அந்தப் பழியை நான் ஏற்றுக்கொள்கிறேன் (குறுக்கீடு) நீங்கள் நடவடிக்கை எடுங்கள். 'புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது'.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: புல் என்பது புல்லா, Bull- (சிரிப்பு).

திரு. பி. எச். பாண்டியன்: புல்தான். புல் என்று நான் தமிழில்தான் சொன்னேன். அடுத்து, ஞாயிற்றுக்கிழமை விளம்பரத்தைப் பார்த்தால் தெரியும். அண்ணாநகர் வீட்டுவசதி வாரியத்தில் ஒதுக்கப்பட்ட நில விற்பனை. இதையும் கேட்க ஆள் கிடையாது. அதனால்தான் நல்ல நாடு, ஏமாளி நாடு, எதையும் செய்யலாம், யாரும் கேட்கமாட்டார்கள்; எல்லோரும் அவர் அவர் வேலையைப் பார்ப்பார்கள் ; எல்லோருக்கும் நல்ல பெயர் ; இவர் எதிலும் தலையிடமாட்டார் : நல்லவர் என்று நினைக்கிறார்கள். ஆனால் நான் அப்படி அல்ல. ஒவ்வொரு விவகாரத்திலும் தலையிட்டுப் பழக்கம் உடையவன் ; அதை மாற்ற முடியாது. நாஞ்சிலாருக்கு எல்லாம் தெரியும். (சிரிப்பு)

பதவியில் வந்தவுடன் நமக்கு ஏன் இந்தக்கெட்ட பெயர் என்று எண்ணக்கூடாது. பதவி வந்த பிறகு என்னிடம் இருந்தவன் அங்கே இருப்பான். இப்படி ஒரு 'செட்' இருக்கிறார்கள். தயவுசெய்து ஏமாற வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு இடம் கொடுத்துவிட்டால் பின்னால் வருத்தப்படுவீர்கள். சந்தர்ப்பம் ஒருதடவைதான் வரும். கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதனால் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று அமைச்சர் பெருமக்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நடவடிக்கை எடுக்கும்போது தாட்சண்யம் காட்டாமல், பாரபட்சம் காட்டாமல் வேகமாக நடவடிக்கை எடுங்கள். அமைச்சராக இருந்தால்தான் நடவடிக்கை எடுக்க முடியும். சும்மா இருந்தால் முடியாது. ஆகவே, அமைச்சராக இருக்கும்போது



1989 பிப்ரவரி 16] [திரு. பி. எச். பாண்டியன்]

நடவடிக்கை எடுங்கள். அதற்காகத்தான் பதவி. சும்மா இருந்தால் எல்லோரும் சும்மா இருக்கமாட்டார்கள். ஆகையால் பதவி கிடைத்த காலத்தில், மக்களுக்காக அதிகாரத்தைப் பயன்படுத்துங்கள். தேவைப்பட்டால மக்களுக்காக விதியை மீறுங்கள். தனி மனிதனுக்காக விதியை மீறவேண்டாம்; பொது மக்களுக்காக மீறலாம்.
"You bend the law ; but you should not break the law"
இது ஒரு ஆலோசனை ; நீங்கள் யோசிக்க வேண்டாம் (குறுக்கீடு) நான் அங்கே இருக்கும்போது இதை எல்லாம் சொல்ல முடியாது ; பேச முடியாது ; சபாநாயகர் பேசமாட்டார். அங்கே இருக்கிற என்னுடைய நண்பர் பேச முடியாது. இங்கே இருந்து பேசும் போதுதான் இதை எல்லாம் பேச முடியும்.

ஆளுநர் இங்கே உரையாற்றியிருக்கிறார்கள். ஆளுநர் பதவி தேவைதானா என்ற கேள்வி பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. நம்முடைய இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஆளுநருக்குத்தான் முழு அதிகாரம் தரப்பட்டிருக்கிறது. ஜனாதிபதிக்கு அப்படி அல்ல. மந்திரிசபை ஆலோசனையை நிராகரிக்கலாம். ஆனால் இங்கே "discretionary powers" கவர்னருக்கு மட்டும வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே மாநில சுயாட்சி என்று பேசும்போது, இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தில் மாநில சுயாட்சி கிடைக்கவே கிடைக்காது. அதற்கு வழியே இல்லை ; சட்டத் திருத்தம் கொண்டுவர முடியாது. இது 1919 ஆம் ஆண்டு வெள்ளைக்காரன் கொண்டு வந்த Government of India சட்டத்தை வரிக்கு வரி பார்த்து எழுதப்பட்டது. 1935 ஆம் ஆண்டு வெள்ளைக்காரன் கொண்டு வந்த Government of India சட்டத்தை வரிக்கு வரி 'காப்பி' அடித்த சட்டம் இது. "Unitary form" என்பது "Federal" அல்ல. முழுமையாக மாற்றினால்தான் மாநில சுயாட்சி பெற முடியும். ஏதேதோ எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள என்றைக்காவது கிடைக்குமா என்று. அதற்கு இந்தச் சட்டத்தை மாற்ற வேண்டும். Federal Legislature என்பது மாற்றப்பட்டிருக்கிறது. அது Parliament என்று திருத்தப்பட்டிருக்கிறது. Provincial Legislatures' Parliament' என்று எழுதப்பட்டு இருக்கிறது. அந்த வார்த்தையை மட்டும் நான் பார்த்தேன். வரிக்கு வரி அப்படியே இருக்கிறது. வேறு மாற்றமே கிடையாது. ஆகவேதான் நீங்கள் மாநில சுயாட்சி

[திரு. பி. எச். பாண்டியன்] [1989 பிப்ரவரி 16

பெறுவதற்கு இன்னும் சட்ட வல்லுநர்களோடு பல மாநாடுகளை நடத்தி இந்திய அளவில்—ஏனென்றால் இது எல்லா மாநிலத்திற்கும் இருக்கக்கூடிய பிரச்சினை—இதற்கு முன்னோடியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

டெல்லிக்குச் சென்று நிதி வேண்டும் என்று பிரதமரிடம் பேசி விட்டு வந்தேன் என்று முதலமைச்சர் அவர்கள் பத்திரிகையில் கொடுத்த செய்தியைப் பார்த்தேன். நான் பத்திரிகையில் பார்த்தேன். அதையும் சில நேரங்களில் ஏதோ எங்களுக்குத் தாருங்கள் என்று நீங்கள் போய்க் கேட்க வேண்டிய நிலை வேண்டாம். இந்திய அரசியல் சட்டப் பிரிவு,

I will read—

**'Article 282—The Union or a State may make any grants for any public purpose, notwithstanding that the purpose is not one with respect to which Parliament or the Legislature of the State, as the case may be, may make laws.'**

நேராகப் போய் இதைக் 'கோட்' பண்ணிக் கேட்கலாம். எங்களுக்குத் தாருங்கள் என்று கேட்கலாம். அது உரிமை. நாம் போய் அதைச் சலுகையாகக் கேட்பது மாதிரி கேட்க வேண்டாம். இங்கேயுள்ள வருமான வரி அங்கே தான் போகிறது, இங்கேயுள்ள 'கஸ்டம்ஸ்' அங்கேதான் போகிறது. இங்கேயுள்ள 'எக்ஸைஸ்' அங்கேதான் போகிறது.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆர்ட்டிக்கின் 282-ல் மாநில அரசுக்கு ஏதே ரைட்' இருப்பது மாதிரிச் சொல்கிறார்.

It is a miscellaneous provision of grant of financial assistance.

அதையெல்லாம் 'கோட்' பண்ணிக் கேட்க முடியாது. அரசியல் அமைப்புச் சட்டம் கையிலே இருப்பதன் காரணத்தால் எதை வேண்டுமானாலும் பேசலாம் என்று அர்த்தம் இல்லை. 282-லே இருப்பது

It is not a matter of right

அதைக் காட்டி உடனடியாகப் பணம் கேட்கலாம் என்கிறார். அது சரியில்லை என்பதால்தான் நான் சொல்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன்: பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஹெக்டே அவர்களும் இதைத்தான் குறிப்பிட்டார்கள். அவர் ஒரு முதலமைச்சராக இருந்தவர்.



1989 பிப்ரவரி 16] [திரு. பி. எச். பாண்டியன்]

இங்கே நாமெல்லாம் ஒன்று. அங்கேயிருந்து பணம் எனக்கும், உங்களுக்கும் சேர்ந்துதானே வரப்போகிறது. இதிலென்ன காங்கிரஸ் கட்சி? (சிரிப்பு) எதற்காகச் சொன்னேன் என்றால் அங்கே போய், நமது முதலமைச்சர், நாம் **Opposition Chief Minister** ஆயிற்றே, கேட்டால் கொடுப்பார்களா என்றெல்லாம் யோசிக்க வேண்டாம். தமிழ் மாநிலம் தானே, அங்கே போய் பிரித்தா பார்க்கிறார்கள். சபாநாயகர் என்றால், தமிழ்நாட்டுச் சபாநாயகர் திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற சபாநாயகர் என்றா சொல்வார்கள். கிடையாது. தமிழ்நாட்டு முதலமைச்சர் அங்கே போய், தாருங்கள் என்று கேட்க வேண்டும். அதற்கு உரிமை இருக்கிறது. சாதாரண மனிதனே இன்றைக்கு உரிமைக்காகப் போராடுகிறபோது ஒரு முதலமைச்சர் விட்டுக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை கிடையாது.

அடுத்து இங்கே இந்திப் பிரச்சினை பற்றி ஒரு வார்த்தை பேசினார்கள். நமது முதலமைச்சர் பிரதம அமைச்சரோடு முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்டதைத் தொலைக் காட்சியில் பார்த்தேன். மேலே இந்தி, அடுத்தது ஆங்கிலம், அதை நான் பார்த்தேன். சில இடங்களில் இதெல்லாம் இருக்கிறது. இதை என்ன பண்ண முடியும்? நம்முடைய கையிலே போர்டு போட்டுக் கொண்டுதான் போக வேண்டும். 9.30 மணி செய்தியில் நான் தொலைக்காட்சியில் பார்த்தேன்.

இப்படி பல்வேறு பிரச்சினைகளை ஆளுநர் அவர்கள் இங்கே நீங்கள் சொன்னதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர் இதை எல்லாம் குறிப்பிடாமலேயே கடந்த ஓராண்டு காலத்திலேயே நடவடிக்கை எடுத்திருக்கலாம். அதனால்தான் நமக்கே கெட்ட பெயர். கெட்ட பெயர் இங்கே வரட்டும் என்று அவர் விட்டாரோ என்று எனக்குக் கொஞ்சம் சந்தேகம். 15 வது பாரா— ஓராண்டுக் காலத்தில் தனி மனிதன், ஆளுநர் இருக்கும்போது எவ்வளவோ நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆனால் இன்றைக்கு அந்த மாதிரி உங்களால் எடுக்க முடியுமா என்று எனக்குச் சந்தேகம். ஏனென்றால் 10 பேர் வருவார்கள். அரசியல் என்றால் என்ன? தேர்தலிலேயே பார்த்தோம். இங்கே தேர்தல் சுமுகமாக நடைபெற்றது என்று. . . (மணியடிக்கப் பெற்றது). நான் 8 ஆண்டுக் காலம் நேரத்தை சேமித்து வைத்து இருக்கிறேன். எனவே விரைவில் பேசி முடித்து விடுகிறேன். தேர்தல் சுமுகமாக நடைபெற்றது என்று ஆளுநர் அவர்கள்

[திரு. பி. எச். பாண்டியன்] [1989 பிப்ரவரி 16

குறிப்பிட்டு இருக்கிறார்கள். சுமூகமாக எப்படி நடைபெற்றது. ஆளாளுக்கு செலவழித்துக்கொண்டு சுற்றியதால் நேரமே இல்லை சண்டை போட. இந்தத் தேர்தல், தேர்தலா இது? எவ்வளவு பணம்? இந்த ஏழை நாட்டிலே எவ்வளவு பணம்? போய்ப் பாருங்கள். அவரவர்கள் மனசாட்சிக்குத் தெரியும். இதை எல்லாம் சொல்லமுடியாது. எவ்வளவு செலவு பண்ணினார்கள்—யார் யார் வந்தார்கள்? எவ்வளவு கொடுத்தார்கள்? இந்தத் தேர்தலைப் பார்க்கும்போதுதான் தெரிகிறது News Talks -லே Video-Cassette -லே பார்த்தேன். இன்டர்வியூ பண்ணுவதைப் பார்த்தேன். இன்னும் இரண்டு மூன்று வோட்டாளரைத் தேர்ந்தெடுப்பதைப் பார்த்தேன். நீங்களும் பார்த்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். (சிரிப்பு) அதாவது 5 லட்சம் ரூபாய் கொடுக்கமுடியுமா? செலவு செய்ய முடியுமா? நாடு எங்கே போய்க்கொண்டிருக்கிறது இந்த சீட்டுக்கு, இதற்கு அவ்வளவு விலையா? நீங்கள் ஒரு குருட்டுப் பள்ளிக்கூடத்திற்கு கொடுத்துவிடுங்கள். நான் இந்த சீட்டை விட்டுவிடுகிறேன். இந்த சண்டையெல்லாம் எதற்கு? ஐந்து லட்சம். அதை வாங்கி ஊமைப் பள்ளிக்கூடத்திற்குக் கொடுத்துவிடுங்கள் எதற்கு இது? இவ்வளவு செலவு செய்து சீட்டு வாங்கவேண்டுமா நீங்கள் எல்லாம் முதிர்ந்தவர்கள். என்னைப் போன்ற இளைஞர்கள் நாற்காலியிலே இருந்தால் அதை எல்லாம் முடிவெடுக்க முடியாது. (சிரிப்பு) என்னைவிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 20 ஆண்டுகள் மூத்தவர்.

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : உங்களுடைய ஆர்வத்தை நான் பெரிதும் பாராட்டுகிறேன். இளைஞர்களுடைய வாய்ப்பை நீங்கள் எந்தக்காலத்திலும் மறுக்கக்கூடாது.

**திரு. பி. எச். பாண்டியன்** : கொஞ்சம் அரசியலில் முதிர்ந்தவர்கள் என்றால் நாடு என்ற ஒரு எண்ணம் வரும். நாம் எவ்வளவு சீர்திருத்தம் பண்ணவேண்டும் என்ற ஆசை வரும். நீங்கள் முதலமைச்சர் ஆனவுடன் சொன்னீர்கள். நிர்வாகச் சீர்திருத்தத்தை செய்யப்போகிறோம் என்று சொன்னீர்கள். அதைப் பார்த்தேன். இவ்வளவு ஏன் சொல்கிறேன் என்றால் இன்றைக்குப் பேசிவிட்டு 5 மாதம் சும்மா இருப்பேன். நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று பார்ப்பேன். நீங்கள் கண்டுபிடியுங்கள். முடியவில்லை என்றால் சொல்லுங்கள். நான் சொல்லி விடுகிறேன்.



1989 பிப்ரவரி 16] [திரு. பி. எச். பாண்டியன்]

எனக்கு 8 வருடங்களாகப் பேசிப் பழக்கம் இல்லை. இன்னும் இரண்டு தடவை பேசினால் வேகம் வரும். இப்போது கோர்வை இல்லை. ஆகவே இந்த ஆளுநர் அவர்கள் உரைக்கு நான் என்னைச் சார்ந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (ஜானகி எம். ஜி. இராமச்சந்திரன்) அணி சார்பில் நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு** : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதை நான் ஆட்சேபிக்கிறேன்.

**திரு. பி. எச். பாண்டியன்** : அந்த அம்மாவை எடுத்துவிடலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மழை விட்டுவிட்டது என்று நினைத்தேன். இன்னும் தூவானம் இருந்துகொண்டே இருக்கிறது. (சிரிப்பு)

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் சபாநாயகர் அவர்கள் பேசும்போது இங்கே சொன்னார்கள். கலைஞர் அவர்கள் முதலமைச்சர் அவர்கள் மகாநாட்டிலே இந்திதான் இருக்கிறது. ஆங்கிலம் தான் எழுதியிருக்கிறது என்று சொன்னார்கள். நாங்கள் எல்லாம் போய்ப் பார்க்கவில்லை. அதுவும் டி.வி. யிலே பார்த்திருக்கிறேன் என்று சொன்னார்கள். அவர்கள் இதற்கு முன்னாலே 8 வருடங்களாக சபாநாயகராக இருந்திருக்கின்றார்கள். இவர் சபாநாயகராக இருந்த காலத்தில், டாக்டர் எம். ஜி. ஆர்., அவர்கள் காலத்தில் முதலமைச்சர் மகாநாட்டில் கலந்துகொண்டிருக்கிறார்கள். பல தடவைகள் கலந்துகொண்டிருக்கின்றார்கள். அப்போது என்ன 14 மொழிகளிலா எழுதியிருந்தார்கள். அதற்கு ஒரு விளக்கம் நான் கேட்கிறேன்.

**திரு. பி. எச். பாண்டியன்** : ஆக இன்னொன்று. ஓராண்டுக் கால ஆளுநர் ஆட்சியில் 4 ஆயிரம் கோப்புகளை பைசல் செய்ததாகச் சொன்னார்கள் ஒரு பிரேக் போட்டது மாதிரி ஒரு பாயின்ட் 4 ஆயிரம் கோப்புகள் என்ன? ஏழை எளிய மக்களுடைய கோப்பா என்பது எனக்குத் தெரியவேண்டும். நான் என்னுடைய தொகுதியில் பேசும்போதுகூட சொன்னேன். ஏழையெளிய மக்களுடைய கோப்பு கோட்டைக்கு அதிகமாக வராது. தாசில்தார் அலுவலகத்தோடு நிற்கும் அல்லது மாவட்ட.

[திரு. பி. எச். பாண்டியன்] [1989 பிப்ரவரி 16

ஆட்சித் தலைவரோடு நிற்கும். அதையும் மிஞ்சிப் போனால் போலீஸ் ஸ்டேஷனில் இருக்கும். ஆகவே அந்த 4 ஆயிரம் கோப்புகள் என்ன கோப்புகள்? என்ன உத்தரவுகள் என்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

இங்கே மேலவையைக் கொண்டு வருவதாகச் சொல்லி இருக்கின்றார்கள். இங்கே வரமுடியாதவர்கள், தேர்தலில் நின்று வெற்றிபெற்று வரமுடியாதவர்கள், தோற்றவர்கள் அல்ல, தோற்றவர்கள் எல்லாம் வரமுடியாதவர்கள், அவர்களை எல்லாம் இங்கே வரமுடியாதவர்களை அங்கே வரவழைக்கக்கூடாது. அதற்கு அல்ல மேலவை House of Lords போல ஆலோசனை வழங்கக்கூடிய அவையாக, முதலமைச்சருக்கே ஆலோசனை வழங்கக்கூடிய அவையாக அந்த அவை இருக்கவேண்டும். அப்படி என்றால் அந்த அவை எப்படி இருக்கவேண்டும்? முதலமைச்சரைவிட அறிவு முதிர்ச்சி பெற்றவர்கள் தான் அங்கே வர வேண்டும். அதை நீங்கள் செய்து காட்டவேண்டும். அந்த முறை. நடைமுறைக்கு வருகின்ற ஒரு மேலவையாக அது இருக்க வேண்டும். இது பேரவை. அதாவது கீழ் அவை. இந்த அவையை விட முதிர்ச்சி பெற்றவர்கள் அங்கே அமர்ந்து பணியாற்றுவதற்கு நீங்கள் அதைக் கொண்டு வந்தால் நல்லது. ஆகவே, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்திற்கான பதிலுரையின்போது அதற்கான பதிலை எதிர்பார்க்கின்றேன். எதற்கும் அஞ்சாமல், யார் என்று பார்க்காமல் நேர்மையாக அஞ்சாமல் நடவடிக்கை எடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் நான் இங்கே வருவதில் அர்த்தம் கிடையாது. நீங்கள் நடவடிக்கை எடுங்கள். இந்த அவையிலேயே உங்களுக்கு பாராட்டுப் பத்திரம் தருகின்றோம். நடவடிக்கை எடுக்காவிட்டால் இந்த அவைமீது எனக்கு நம்பிக்கை போய்விடும். இதைத்தான் தேர்தலின்போது சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். இதையெல்லாம் சொல்லக் காரணம் தமிழ்நாட்டிலே இன்றையதினம் எவ்வளவு ஏக்கர் புறம்போக்கு நிலம் இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியும். செங்கற்பட்டு மாவட்டத்தில் அதிக அளவில் புறம்போக்கு நிலம் இருக்கிறது. எனக்குத் தெரிந்தவரையில் 17 ஆயிரம் ஏக்கர் நிலம் இருக்கிறது. மகாபலிபுரம் சாலையில் அப்படிப்பட்ட புறம்போக்கு நிலம் இருக்கிறது. இந்த நிலங்கள் எல்லாம் யாருக்கு என்று தெரிய வேண்டாமா? நான் ஒருமுறை நாகர்கோவிலுக்கு கன்னியாகுமரி



1989 பிப்ரவரி 16] [திரு. பி. எச். பாண்டியன்]

மாவட்டத்திற்கு மனுக்கள் குழு சார்பில் மனுக்கள் பெறுவதற்காகச் சென்றிருந்தேன். அப்போது திரு. சுந்தரதாஸ் கூட என்னுடன் வந்தார்கள். அங்கே பாரஸ்டுக்குச் சொந்தமான நிலத்தை ஆளுக்கு ஓர் ஏக்கர், இரண்டு ஏக்கர் என்று வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட பொதுச் சொத்துக்களை எல்லாம் பாதுகாக்க வேண்டும். பொதுமக்களையும் பாதுகாக்க வேண்டும். பொதுச் சொத்துக்களுக்கு இழப்புகளை ஏற்படுத்தாமல் இருக்கும் பொறுப்பும், அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டுமென்று பொறுப்பும் பொது மக்களுக்கும் உண்டு, இந்த அமைச்சரவைக்கும் உண்டு என்பதை நினைவூட்டி இத்துடன் என் உரையை முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது நடவடிக்கை எடுங்கள் என்று சொன்னார். அதுகுறித்து ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன் . . . .

* மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் நாட்டில் சிமெண்டும், சக்கரையும் நியாய விலைக் கடைகளின் மூலமாகவும், அநியாய விலைக் கடைகளின் மூலமாகவும் விற்கப்படுவதாக சொல்லியிருக்கிறார்கள். இது மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கை. 'லெவி சர்க்கரை', 'ஓப்பன் மார்க்கெட் சர்க்கரை' என்றும் 'லெவி சிமெண்ட்', 'ஓப்பன் மார்க்கெட் சிமெண்ட்' என்றும் மத்திய அரசாங்கம்தான் கொள்கையை வகுக்கிறது, விலையை நிர்ணயிக்கிறது. இந்த அரசாங்கத்துக்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, Piece Contro. உங்களிடம்தான் இருக்கிறது. நீங்கள் போலீசை வைத்துப் பிடியுங்கள். இன்னொன்று, அதிகாரம், அதிகாரம் என்று கேட்பதை விட்டுவிட வேண்டும். நீங்கள் அதிகாரம் வேண்டும் என்று கேட்டால் 'இல்லை' என்றுதான் சொல்வார்கள். நாமே எடுத்துச் செய்வதுதான் அதிகாரம். (சிரிப்பு) You should assert your powers.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் அருள்கூர்ந்து மாண்புமிகு உணவு அமைச்சர் சொன்னது குறித்து மட்டுமே கருத்துச் சொல்லுங்கள்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நாமே அதிகாரத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று உறுப்பினர் சொல்கிறார். மாநிலத்திற்கு அவ்வாறு எடுத்துக் கொள்வதற்கான அதிகாரம் இருக்கிறதா? உதாரணத்திற்கு நாமாக நோட் அடித்தால் அது செல்லுபடியாகுமா என்பதற்கு விளக்கம் தேவை.

**திரு. பி. எச். பாண்டியன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்திய அரசியல் சட்டத்தின் 1-வது பிரிவைப் படித்துப் பார்க்கும்படி உறுப்பினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

India, that is Bharat, shall be a Union of States என்று இருக்கிறது. ஆகவே, அமென்டமென்ட் கொண்டு வந்தால் என்ன ஆகும்? இதற்கு மேல் சொல்வதென்றால் India, that is Bharat, shall be a Union of States என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்:** On a point of order, மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் பேசுகின்றபோது நடவடிக்கை எடுங்கள், நடவடிக்கை எடுங்கள் என்று சொன்னார்கள். அவர் கருத்துக்களைச் சொல்லும்போது, முதல்வரைப் பார்த்துச் சொல்லும் போது, முதல்வர் முன்னால் இருக்கிற சரியான துப்பாக்கி திரு. பாண்டியன் என்று நான் நினைத்தேன். ஆனால் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கேட்டபோது இவர் சொன்னது கழன்று போன துப்பாக்கிபோல் இருக்கிறது. நடவடிக்கை எடுங்கள். நடவடிக்கை எடுங்கள் என்று சொல்கிற அதே நேரத்தில் அரசு முடிவை ஆதரித்தபடி பேசுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றுமில்லை. விளக்கம் சொல்ல ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பக் கூடாது. இதில் என்ன ஒழுங்குப் பிரச்சினை?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் கையில் இருப்பதை துப்பாக்கியாகக் கருதியதாக நண்பர் அவர்கள் சொன்னார்கள். இது ஆயுதத் துப்பாக்கி அல்ல, 'துப்பார்க்குத் துப்பாக்கி' என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு).





(முற்பகல் 10-30)

**திரு. எஸ். டி. உகம்சந்த்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் பேசும்போது ஒரு தகவல் சொன்னார்கள். ஆளுநர் உரையில் 6 இலட்சம் வழக்குகள் தேங்கி நிற்கின்றன என்று சொல்லி, அவைகளை வாபஸ் பெற வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு கள்ளச் சாராயம் விற்பதன் காரணமாக பலர் மரணம் அடைய வாய்ப்பு ஏற்படுகிறது என்பதால், அது கொலைக் குற்றத்தைப் போன்று கொடிய குற்றமாகக் கருதப்பட்டு, அந்த வழக்குகள் இருந்துகொண்டிருக்கின்றன. அதிலே பல அப்பாவிகளும் இருக்கலாம். எனவே அந்த வழக்குகளை வேண்டுமானால் துரிதமாக முடிக்க நடவடிக்கை எடுக்கலாமே ஒழிய, அதை விட்டுவிட்டு கொலைக் குற்றம் போன்று இருக்கிற இந்த வழக்குகள் அனைத்தையும் ரத்து செய்ய வேண்டுமென்று சொல்லுவது சரியல்ல.

**திரு. பி. எச். பாண்டியன்:** பேரவைத் தலைவரவர்களே, நேற்றைய தினம் பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் 'டக்' இருந்து 28,000 பேர் கடன் வாங்கித் திருப்பச் செலுத்தவில்லை என்று சொன்னார்கள். அந்த 28,000 பேர் மேலே வழக்கு போடுங்கள். இதிலே ஏழைகளைப் பார்த்து விட்டு விடுங்கள். பணக்காரர்கள் மேலே வழக்கே இல்லை. அதனால் வக்கீல்களுக்கு பீஸ் வருவதில்லை. (சிரிப்பு)

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசும்போது, அது 'மேலவை'. இது 'கீழவை' என்று சொன்னார்கள். அதை, 'பேரவை' என்று திருத்திக்கொண்டால் நல்லது. 'கீழவை' என்றால் உறுப்பினர்களுக்கே அது ஒரு மாதிரியாகத் தெரிகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'கீழிருந்தும் கீழல்லார் கீழல்லார்'. இதைப் 'பேரவை' என்று சொல்வது பொருத்தமாக இருக்கும்.

**திரு. பி. என். வல்லரசு:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, அகில இந்திய அரசியல் சாணக்கியனாகவும், இந்தியத் துணைக் கண்டத்தின் ஈடு இணையற்ற இராஜ தந்திரியாகவும், தமிழகத்தின் முதல்வராகவும் இந்த அவையிலே வீற்றிருக்கிற

[திரு. பி. என். வல்லரசு] [1989 பிப்ரவரி 16

டாக்டர் கலைஞர் அவர்களே, இன்றையதினம் கவர்னர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நான் சார்ந்திருக்கிற தமிழ்நாடு பார்வார்ட் பிளாக் சார்பில் கருத்து கூறுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இங்கே தமிழ் நாட்டில் வாழ்கிற ஒவ்வொரு தமிழனும், தமிழ்க் குடிமகனும் ஏற்றம் பெற வேண்டுமென்று இலட்சியத்தை ஈடேற்றுகின்ற வகையில் ஒரு 'தமிழ்க் குடிமகனை' இந்தச் சபையினுடைய தலைவராக ஏற்றம் பெறச் செய்திருக்கிற அருமைக்குரிய தமிழக முதல்வர் அவர்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் இந்த அவையிலே கவர்னர் உரைக்கு நன்றி உரையாற்றுகின்ற இந்த வேளையில், இந்த நன்றி உரையாற்று வதற்குக் காரணமாக அமைந்துள்ள எனது உசிலம்பட்டி வாக் காளர் பெருமக்களுக்கு, குறிப்பாக வரலாற்றுச் சிறப்புமிக்க உசிலம்பட்டி வாக்காளர் பெருமக்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் இப்படி வரலாற்றுச் சிறப்பு மிக்க உசிலம்பட்டி என்று சொல்கிறேன் என்றால், 1952 ஆம் ஆண்டிலிருந்து 1989 ஆம் ஆண்டுவரை பார் வார்ட் பிளாக் கட்சிக்கு மட்டும்தான் வாக்களித்து பழக்கப்பட்ட மக்கள் அந்த உசிலம்பட்டி. தொகுதி மக்கள். ஏறக்குறைய 40 ஆண்டுகாலம், இந்திய வரலாற்றில், தமிழக வரலாற்றில் பார்வார்ட் பிளாக் இயக்கத்திற்கு மட்டும் வாக்களித்த ஒரே தொகுதி உசிலம்பட்டி. தொகுதி என்ற சிறப்பு பெற்ற காரணத் தால், அங்கே வாழ்கின்ற மக்கள் வீரமும், விவேகமும் உள்ள மக்கள். அவர்கள் தங்களுடைய இதய தெய்வமாகப் போற்றிப் பாதுகாக்கும் தலைவர் பசும்பொன் முத்துராமலிங்கம், உலகத் தலைவர் நேதாஜி, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய பிறை நிலா வாகக் காட்சியளித்து, இந்த அவையிலே நீண்ட காலம் உறுப்பின ராக இருந்த திரு மூக்கையா தேவர், எங்களுடைய மாவட்டச் செயலாளர், இன்றையதினம் இங்கே அமைச்சர் பொறுப்பை ஏற் றிருக்கிற அன்புக்கும் பாசத்திற்கும் உரிய திரு. பொன் முத்து ராமலிங்கம் அவர்கள், தமிழ்நாடு பார்வார்ட் பிளாக் தலைவர் திரு. அர்ஜுனன் அம்பலம் அவர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1989 பிப்ரவரி 16] [திரு. பி. என். வல்லரசு]

இங்கே கவர்னர் உரை என்று இருந்தாலும்கூட இது கலைஞர் அவர்களுடைய உரைதான். இங்கே ஆளுநர் உரை என்று இருந் தாலும்கூட, ஆளுங் கட்சித் தலைவராக இருக்கிற தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய உரைதான் இது. இன்றையதினம் இந்த அவையிலே சில தினங்களுக்கு முன்பு முன்னாள் அமைச்சரும், இன்றைய எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவராகவும் இருக்கின்ற மாண்புமிகு திரு. திருநாவுக் கரசு அவர்கள் கவர்னர் உரை பற்றிக் குறிப்பிடுகின்றபோது, கவர்னர் உரை வர்ணனையாக, வார்த்தை ஜாலங்களாக இருக்கிற தென்று கருத்து சொன்னார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் இந்த கவர்னர் உரை என்பது வெறும் வர்ணனை அல்ல. வெறும் வார்த்தை ஜாலங்கள் அல்ல. தங்கத் தட்டில் வைர எழுத்துக்களால் எழுதப்பட்ட கருத்துப் பெட்டகம் என்றால் அது மிகையாகாது என்று எண்ணுகிறேன்.

கடந்த அரை நூற்றாண்டு காலமாக, மொழிக்காகத் தமிழ்ச் சமுதாயம் எப்படிப்பட்ட போராட்டங்களை நடத்தியதோ, எப்படிப்பட்ட ஏக்கப் பெருமூச்சுகளைக் கொண்டிருந்ததோ அந்தப் பெருமூச்சுகளுக்கெல்லாம் ஒரு நிம்மதிப் பெருமூச்சா கத்தான் இந்த கவர்னர் உரை அமைந்திருக்கிறது என்றால், அது மிகையாகாது. அது மட்டுமல்ல. தமிழ்ச் சமுதாயத்தை வாழ வைக்கின்ற ஒரு வழிகாட்டி நெறியாகவும் இந்த கவர்னர் உரை அமைந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போன்றே, இங்கே பேசிய அருமைக்குரிய முன்னாள் அமைச்சரும், இந்நாள் மாண்புமிகு உறுப்பினருமான திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்கள் "நான் இந்த கவர்னர் உரையில் தேடித் தேடிப் பார்த்தேன். அந்த உரையில் கலைஞரின் கொள்கை எதுவுமேயில்லை" என்று குறிப்பிட்டார்கள். என்னைப் பொறுத்தவரையில் இந்தக் கவர்னர் உரை என்பது அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரம்—பாரம்பரிய தமிழ்ச் சமுதாயம் சிறந்து வாழ்வதற்கான பல்வேறு திட் டங்களைக் கொண்டிருக்கிற உரை என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள், இதிலே அண்ணாவினுடைய கொள்கை

[திரு. பி. என். வல்லரசு] [1989 பிப்ரவரி 16

கலைஞர் அவர்களுடைய கொள்கை இடம் பெறவில்லை என்று சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் அவர்கள் வெளியே—இந்த அவையில் அல்ல—கடந்த காலத்தில் பேசிய பேச்சில் "எனக்கு எம்.ஜி.ஆரைத்தான் தெரியும் அண்ணாவைத் தெரியாது" என்று பட்டவர்த்தனமாகக் கூறியிருக்கிற காரணத்தால், அண்ணாவினுடைய கொள்கைகளையோ, இங்கே இருக்கிற கலைஞர் அவர்களுடைய கொள்கைகளையோ அவர்கள் பார்த்திருக்க மாட்டார்கள் என்றே கருதுகிறேன்.

தி.மு.க.வின் மாநில சுயாட்சிக் கொள்கையும், மொழிக் கொள்கையும் இந்தக் கவர்னர் உரையில் பட்டொளி வீசிப் பறப்பதை நான் காண்கிறேன். அதைப்போன்றே, இந்த அவையில் பேசிய காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர், மாண்புமிகு திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், மாநில சுயாட்சியைப்பற்றி கூறிய நேரத்தில் "அடிப்படைத் தேவைக்காக அழுகின்ற தமிழனின் வாயை அடைக்க மாநில சுயாட்சி என்னும் பூச்சாண்டியைக் காட்டியிருக்கிறார்கள்" என்று குறிப்பிட்டார். நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் மாநில சுயாட்சியால்தான் தமிழனுடைய அடிப்படைத் தேவையை, அவன் அழுகிற அழுகையை மாற்ற முடியும்.

தமிழன் அழுகிறான். அவனுடைய அடிப்படைத் தேவைகள் அதிகம் என்பதை அவர்களே ஒப்புக் கொள்கிறார்கள். அந்தத் தமிழன் அழாமல் இருக்க வேண்டுமென்றால், அந்தத் தமிழன் வாழ வேண்டுமென்றால், அந்தத் தமிழன் சிரித்து வாழ வேண்டுமென்றால், நிச்சயமாக மாநில சுயாட்சி வேண்டும். அதிக அதிகாரங்களைப் படைத்த மாநில அரசு வேண்டும். அதிக அதிகாரங்களைக் குவித்து வைத்துக் கொண்டிருக்கிற மத்திய அரசு தன்னிடமிருக்கும் பல்வேறு அதிகாரங்களை மாநில சுயாட்சி அடிப்படையில் இங்கே இருக்கிற மாநில அரசுக்குக் கொடுத்தால் தான் மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப்போல் அடிப்படைத் தேவைக்காக அழுகிற தமிழனின் வாயை அடைக்க முடியும்; தமிழன் சிரிக்க முடியும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உண்மையில் அப்படிப்பட்ட அடிப்படைத் தேவைக்காக அழுகிற தமிழன் சிரிப்பதற்கு நிச்சயமாக மாநில சுயாட்சி வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1989 பிப்ரவரி 16] [திரு. பி. என். வல்லரசு]

அதைப்போன்றுதான் இங்கே இந்த அவையில் அல்ல—வெளியே பேசிய முன்னாள் அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் என்பவர், 'கவர்னர் உரையைப் படிக்கிற நேரத்தில் என்னுடைய மெய் சிலிர்க்கிறது" என்று சொன்னார்கள் அதை நான் பாராட்டுகிறேன். கவர்னர் உரையில், எங்களுடைய கட்சியான தி.மு.க. கடந்த அரை நூற்றாண்டு காலம் எந்தக் கொள்கைக்காக, எந்த இலட்சியத்திற்காகப் போராடியதோ, அந்தக் கொள்கையை இங்கே காண முடிகிறது. அதுதான் மாநில சுயாட்சிக் கோரிக்கை. அடுத்து இங்கே இருக்கிற மொழிக் கொள்கையைப் பார்க்கிற நேரத்தில் 15 தேசிய மொழிகளுக்கும் தேசிய அந்தஸ்து கொடுக்க வேண்டும் என்று தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் கோரியிருப்பதன் மூலம் ஒரு தேசியத் தலைவராக அவர் இங்கே காட்சியளிக்கிறார். கேரளாவில் வாழ்கிறவர்களும், கருநாடகத்தில் வாழ்கிறவர்களும் மற்றும் மராட்டியத்தில் வாழ்கிறவர்களுங்கூட தங்கள் மொழி தேசிய மொழியாக ஆக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தவில்லை. ஆனால், தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் 15 தேசிய மொழிகளும் தேசிய மொழிகளாக ஆக்கப்பட வேண்டுமென்று கோரியிருப்பதன் மூலம் அவர் இன்றைக்கு இந்தியாவுக்கே வழிகாட்டுகிற ஒரு தேசியத் தலைவராகக் காட்சியளிக்கிறார்.

(மூற்பகல் 10-40)

அடுத்து கவர்னர் உரையில்: "இந்தி எந்த வகையிலும் நுழைவதை அனுமதிக்கமாட்டோம், இந்த அரசு அதைப் பார்த்துக் கொண்டிருக்காது" என்று இந்த அரசு திட்டவட்டமான கொள்கையை அறிவித்திருப்பதன் மூலம் இன்றைக்குத் தமிழ்நாட்டில் வாழ்கிற 5 கோடித் தமிழர்கள் மட்டுமல்ல உலகம் முழுவதும் வாழ்கிற எட்டுக் கோடி தமிழர்களும் நிச்சயமாக நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார்கள். தலைநிமிர்ந்து தன்மானத்தோடு வாழ இன்றைக்கு அடியெடுத்து வைத்திருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது. அன்பிற்குரிய முன்னாள் அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல இங்கே கலைஞர் அவர்களுடைய கொள்கை இல்லையென்று சொல்ல முடியாது. எங்கே பார்த்தாலும் கலைஞர் அவர்களுடைய கொள்கைதான் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எங்களைய துணிச்சலோடு மொழிக் காக அன்றையதினம் பாளையங்கோட்டை சிறையில் வீற்றிருந்தார்களோ, மொழிக்காக மொழியைக் காக்க இந்தி நுழையக்

[திரு. பி. என். வல்லரசு] [1989 பிப்ரவரி 16

கூடாது என்ற காரணத்திற்காக அரசியல் சட்டத்தின் நகலை எரித்தது எம்.எல்.ஏ., பதவிகள் எல்லாம் பறிக்கப்படுகிற நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் எத்தனை உறுதியான நிலையில் இருந்ததோ, அதுபோன்ற உறுதியைத்தான் இன்றையதினம் இந்த ஆட்சி கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தேசிய முன்னணியில் சேர்ந்துவிட்ட காரணத்தால் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய மொழிக் கொள்கையை இழந்து விட்டது என்று தேர்தல் பிரச்சார காலத்தில் சொன்னார்கள். அன்றையதினம் சொல்லப்பட்டது : திராவிட முன்னேற்றக் கழகத்தின் மொழிக் கொள்கைக்கு ஊறு ஏற்படுமானால் தேசிய முன்னணியிலிருந்து கூட அது விலகிக்கொள்ளத் தயங்காது என்ற நிலையை எடுத்துக் காட்டினார்கள். அன்றையதினம். திரு. முரசொலி மாறன் அவர்கள் தனிநபர் மசோதா கொண்டு வந்த போது அ.இ.அ.தி.மு.க.வைச் சார்ந்தவர்கள் பாராளுமன்றத்தில் ஆதரித்தார்களா என்றால் ஆதரிக்கவில்லை என்பதைத் தெளிவாகச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து தேர்தல் வாக்குறுதிகள் காப்பாற்றப்படவில்லை என்று காங்கிரஸ் கட்சியின் மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் சொன்னார்கள். மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக தமிழக அரசு ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குகிற வாக்குறுதியைக் காணோம் என்று தெரிவித்தார்கள். நான் இப்போது தெரிவித்துக்கொள்ள விரும்புவது, மிகக் குறுகிய காலத்தில் தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிற்கே வழி காட்டுகிற அளவில், தமிழகத்தில் பணியாற்றுகிற அரசு ஊழியர்களுக்கு இணையாக மத்திய அரசு ஊழியர்கள் சம்பளம் வேண்டுமென்று போராடுகிற நிலையை நிச்சயமாக ஏற்படுத்துவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். பாலைவனத்தில் பயணத்தை மேற்கொண்டிருக்கிறோம் என்று அவர்கள் சொன்னார்கள். பாலைவனத்தில் பயணம் மேற்கொண்டாலுங்கூட தமிழகத்தை ஒரு சோலைவனமாக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் இங்கே பயணத்தை ஆரம்பித்திருக்கிற காரணத்தால், நிச்சயமாக மத்திய அரசு ஊழியர்கள் வருங்காலத்தில் தமிழ்நாட்டில் பணியாற்றுகிற அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் கொடுக்கவேண்டுமென்று மத்திய அரசை எதிர்த்துப் போராடுகிற நிலையை தமிழக முதல்வர் அவர்கள் ஏற்படுத்து



1989 பிப்ரவரி 16] [திரு. பி. என். வல்லரசு]

வார்கள் என்று உறுதியாக நம்புகிறோம். அன்றையதினம் அன்னை இந்திரா அவர்கள் ஆட்சியில் இருக்கிற காலத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி கலைக்கப்பட்ட நேரத்தில், 70 கோடி ரூபாயை நாங்கள் விட்டுச் சென்றோம்; ஆனால் இன்றையதினம் நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கிற நேரத்தில் மைனஸ் எழுபது கோடி ரூபாய்தான் கஜானாவில் இருக்கிறது என்று தமிழகத் தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் சென்னை கடற்கரை பாராட்டு விழாக் கூட்டத்தில், நான்கு முதலமைச்சர்களை வைத்துக்கொண்டு, திரு. வி. பி. சிங் போன்ற தேசியத் தலைவர்களை வைத்துக்கொண்டு அங்கே சொன்னதை நாமெல்லாம் அறிவோம். அதைப்போலத்தான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் சொன்னார்கள். எங்களிடம் பல திட்டங்களை தமிழக மக்கள் எதிர் பார்க்கிறார்கள். ஆனால் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு எங்களுக்கு ஒரு வருட கால அவகாசம் வேண்டுமென்று மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொன்னார்கள். எனவே இந்த நிலையில் நான் ஒன்றை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நிச்சயமாக மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் மட்டுமல்லாமல், அவர்களை விட கூடுதலாக சம்பளம் வழங்குகிற நிலை ஏற்படும்.

இன்றையதினம் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்பதைப் பார்க்கிறபோது ஒன்று தோன்றுகிறது. ஒரு மாமியார் தன்னுடைய மகன் தனக்கு விருப்பமான பெண்ணை திருமணம் செய்து கொள்ளவில்லை என்ற காரணத்தால், இருக்கிற அரிசி பானையை காலி செய்துவிட்டு சிறப்பாக சமையலை 100, 200 பேர்களுக்கு செய்து தர வேண்டுமென்று புதிதாக வந்த மருமகளை கேட்டதைப்போல உள்ளது இங்கே உறுப்பினர்கள் கேட்பது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு மைனஸ் 400 கோடி ரூபாய் பற்றாக்குறை பட்ஜெட் ஏற்படுகிற நிலையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெளிவாக கூறியுள்ள காரணத்தால் இது போன்ற நிலைமைகளையெல்லாம் தவிர்த்து, வருங்காலத்தில் நல்ல பல திட்டங்களை நிறைவேற்ற இருக்கிறது என்பதைக் கூட்டணிக் கட்சியின் சார்பில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

144353
V2:1,31'N89
N89·2·3

[திரு. பி. என். வல்லரசு] [1989 பிப்ரவரி 16

தேர்தல் வாக்குறுதிகள் காப்பாற்றப்படவில்லை என்று தெரிவித்தவர்களுக்கு சொல்ல விரும்புகிறேன். தமிழக மேலவை மீண்டும் கொண்டு வரப்படும் என்பது தான் தேர்தல் வாக்குறுதி. உள்ளாட்சி மன்றங்களின் பதவிக்காலம் 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படுமென்பது தேர்தல் வாக்குறுதி. அதுபோன்ற பல்வேறு வாக்குறுதிகளை இந்த அரசு இன்றைக்கு நிறைவேற்றி இருக்கிறது. சட்டமன்ற மேலவையானது எப்படி கலைக்கப் பட்டது என்பதை தமிழக மக்களின் மனச்சாட்சிக்கு விட்டு விடுகிறேன். இந்த மன்றத்திலே வீற்றிருக்கக்கூடிய உறுப்பினர் களுடைய மனச்சாட்சிக்கே விட்டுவிடுகிறேன். மீண்டும் அதை விளப்ப விரும்பவில்லை. அன்றையதினம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை எண்ணத்தில் கொண்டுதான் உள்நோக்கத்தோடுதான் சட்டமேலவை அன்றையதினம் எடுக்கப்பட்டது என்பதை, தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். இந்த நிலையில் சட்ட மேலவையைக் கொண்டு வருவதாக வாக்குறுதியைக் கொடுத்தார்கள். அந்த வாக்குறுதியை நிறைவேற்றிய தமிழக அரசுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

எனது தொகுதியைப் பொறுத்தவரையில் அன்பிற்குரிய எங்களுடைய இதயத் தலைவர் இந்தச் சட்டமன்றத்தில் அதிக நாட்கள் உறுப்பினராக இருந்த பி. கே. மூக்கையாத் தேவர் அவர்கள் பிறந்த ஊரான பாப்பாபட்டி உள்ளிட்ட 58 கிராமங் களுக்கு, 10 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்து கொடுக்கவேண்டும் என்பதுதான் அந்தத் தொகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கை. எனவே 13 கோடி ரூபாய் செலவில், தற்போது ஆய்வில் இருக்கிற அந்தத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இங்கேயிருக்கின்ற அமைச்சர் அவர்களும் நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டத்தை செயல் படுத்தவேண்டும் என்பதுதான் அந்தத் தொகுதி மக்களுடைய கோரிக்கை இங்கே சட்டமன்றத்திலே அதிக நாட்கள் உறுப்பின ராக இருந்த மூக்கையாத் தேவர் அவர்களுடைய அபிலாஷைகள் ஆகும்.

அதேபோன்று அன்றையதினம் தமிழ் இனத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பீடத்தில் இருக்கிற நேரத்தில் உசிலம் பட்டி தொகுதியில் உள்ள புத்தூர் மலைக்கரும் பக்கத்தில் பெரிய நூற்பாலை வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டு, ஆய்வு



1989 பிப்ரவரி 16] [திரு. பி. என். வல்லரசு]

செய்யப்பட்டபோது, அன்றைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை இடையே இறக்கிவிட்ட காரணத்தால், 13 வருட காலமாக அந்தத் தொகுதி பாலைவனமாக காட்சி அளித்துக் கொண்டிருக் கிறது. எனவே ஆய்வில் உள்ள, மிகப் பெரிய தொழிற்சாலையாக உள்ள அந்த நூற்பாலையை அந்தத் தொகுதியில் அமைத்துத் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் இந்தச் சட்டமன்றத்தினுடைய உறுப்பினராக அங்கம் வகித்த மூத்த தலைவர் மூக்கையாத் தேவர் அவர்களு டைய பெயரில் ஒரு தொழில் நுட்பக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதிர்க் கட்சித் தலைவ ராக இருக்கின்ற நேரத்தில் ஒரு மிகப் பெரிய வாக்குறுதியைச் சொன்னார்கள். உசிலம்பட்டியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருக்கின்ற கூட்டத்தில் சிவகங்கையைத் தலைநகராகக் கொண்ட பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் என்று இருப்பதை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் என்று அறிவிப்பேன் என்ற வாக்குறுதியைக் கொடுத்தார்கள். அதை அவர்கள் நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தேவர் அவர்கள் பெயரில் 3 கல்லூரியை கலைஞர் அவர்கள் உருவாக்கித் தந்தார்கள். அந்த 3 கல்லூரிகளின் கட்டிட வளர்ச் சிக்கு அவர்கள் உறுதுணையாக இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று திருநகரில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய வீடு இருக்கிறது. அதை நினைவாலய மாக ஆக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்திலே இந்திய சுதந்திரத்திற்காக முதல் குரல் கொடுத்த பூலித்தேவன் அவர்கள் பெயரில் ஒரு மாவட்டத்தை அமைக்கவேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழக முதல்வர் அவர்கள் இட ஒதுக்கீடு பிரச்சினையை மிக விரைவிலே முடிப்பேன் என்ற நல்ல செய்தி யைக் கூறி இருக்கிறார்கள். இந்த நேரத்தில் தமிழ் நாட்டிலே வாழ்கின்ற முக்குலத்தோர் இனம் தேவர் இன மக்களுக்கு 30

[திரு. பி. என். வல்லரசு] [1989 பிப்ரவரி 16

சதவீதம் இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். தேவர் சமுதாய மக்கள், தேசியத்திற்காக, மொழிக்காக, இந்த நாட்டின் விடுதலைக்காக போராடியவர்கள் என்ற காரணத்தால், அந்த தேவர் இனம் ஒரு தேசிய இனம் என்ற காரணத்தால், அந்த மக்களுக்கு 30 சதவீத இட ஒதுக்கீட்டை, அதுவும் குறிப்பாக மிகவும் பிற்பட்ட நிலையில் உள்ள அந்த மக்களுக்கு அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கே கள்ளர் சீரமைப்பு என்ற ஒரு அமைப்பு இருக்கிறது. டி-நோட்டிபைடு என்று சொல்லப்படுகின்ற ஒரு சமுதாயத்திற்கு, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு இந்த கள்ளர் சீரமைப்பு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் மிகவும் சிறப்பாக செயல்பட்டு வந்தது. ஆனால் இந்த 13 வருட காலமாக இந்த கள்ளர் சீரமைப்பு மிகவும் நலிந்துபோன காரணத்தால், டி-நோட்டிபைடு டிரைப்ஸ் என்று கூறப்படுகின்ற அந்தக் குற்றப் பரம்பரையைச் சேர்ந்த மக்களுக்கு பல கோடி ரூபாய்ச் செலவில், கல்வித் திட்டமும், சமூக நலத் திட்டங்களையும் கொண்டு வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் பிற்பட்ட மக்களுக்கு, தேவர் இன மக்களுக்கு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதி பதவிகள் எல்லாம் கொடுக்கப்பட்டன. ஆனால் இந்த 13 வருட காலத்தில் அதற்கு ஊறு நேர்ந்துவிட்டது, தடை வந்து விட்டது. எனவே மீண்டும் பிற்பட்ட தேவர் இன சமுதாய மக்களுக்கு ஐ.பி.எஸ்., ஐ.ஏ.எஸ். மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதி பதவிகள் கொடுக்கப்பட வேண்டும். இன்றையதினம் உயர்நீதி மன்றத்தில் 3 நீதிபதி பதவிகள் காலியாக இருக்கின்றன. அவற்றில் மக்கள் தொகை அடிப்படையில், 2 கோடி தேவர் சமுதாய மக்களுக்கு பிரதிநிதித்துவமாக இரண்டு உயர்நீதிமன்ற நீதிபதி பதவிகளைத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மதுரையில் உயர்நீதிமன்றத்தினுடைய பிரிவை தமிழக அரசு ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, விடை பெறுகின்றேன். நன்றி, வணக்கம்.



1989 பிப்ரவரி 16]

(முற்பகல் 10-50)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதிப்பிற்குரிய பெருமக்களே, அடுத்து இன்றைக்குப் பேசப் போகிறவர்களின் பட்டியலில் இடம் பெறப் போகிறவர்கள் 7 பேர். எஞ்சியிருக்கின்ற நேரம் 130 மணித் துளிகள். எனவே நீங்களே அதைச் சரியாகப் பங்கிட்டு உரையாற்றினால் நான் எந்தவகையிலும் குறுக்கிடாமல் அமைதியாகக் கேட்டுக் கொண்டு இருப்பதற்கு ஒரு பெரிய வாய்ப்பு என்று கூறுகிறேன்.

**திரு. கே. ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு 1-00 மணிக்குள்ளாக இந்த நிகழ்ச்சிகளை முடிக்கவேண்டுமென்ற முறையில் கடைசியாக மிச்சம் இருக்கிற நேரத்தைச் சொல்லி, எங்களையே பங்கிடும்படியாகத் தாங்கள் கூறுகிறீர்கள். குறைந்தபட்சம் எங்களுடைய கட்சியைச் சார்ந்த 15 பேர்கள் இருக்கிற குழுப்பிலிருந்து நான் ஒரு ஆள்தான் பேச முன் வந்திருக்கிறேன். அதில் எனக்கு நீங்கள் நியாயம் வழங்குகிற மாதிரி எனக்கு இருக்கிற குறைந்தபட்ச தேவையைப் பூர்த்தி செய்கிற அளவிற்கு, அனுமதித்தால்தான் முடியும். அதே மாதிரி மற்ற உறுப்பினர்களுக்கும் நேரம் இல்லையென்று சொன்னால், இன்றைக்கு காலையில் எவ்வளவு நேரம் போய் விட்டதோ, அது முழுவதும் எங்களுடைய கணக்கிலே எழுதப் படும்படியான நிலை ஏற்படுகிறது. அது சரியாகாது என்று நான் கருதுகிறேன். அதைத் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காலையில் நேரம் போனதற்குப் பேரவைத் தலைவர் பொறுப்பு ஆக மாட்டார். எனவே உறுப்பினர்களேதான் அதையும் பங்கிட்டுக்கொள்கிறார்கள் என்பதை நீங்கள் உணரவேண்டும். இப்போது என்ன செய்ய வேண்டும் என்று தாங்கள் கருதுகிறீர்கள்?

**திரு. கே. ரமணி:** தலைவர் அவர்களே என்னிடம் இரண்டு ஆலோசனைகள் இருக்கின்றன. நான் சொல்வது. ஒன்று 1-00 மணி வந்தால், தாங்களே அறிவிப்புத் தந்து, இந்தப் பேச்சு முடியும் வரை இந்தச் சபையை நீட்டிப்போம் என்று தாங்கள் அறிவிப்புச் சொல்லலாம். இன்னொன்று, நாளைக்கு முதலமைச்சர் அவர்களுடைய பதில் இருக்கிறது. அதற்கு முன்னதாகவே பாக்கி இருப்பவர்கள் காலையில் பேசி முடிக்கு

மாறு அறிவிப்புச் செய்யலாம். அவர்களுக்கு அந்தச் சமயம் போதாமல் போனால் அவர்களுக்கு அது குறையாகப் போய் விடும். அதனால் இன்றைக்கு நீடித்து முடிப்பது நல்லது என்பது என்னுடைய கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க் கட்சியினுடைய இந்திய தேசியக் காங்கிரசினுடைய தலைவர் மதிப்பிற்குரிய திரு ஜி. கே. மூப்பனார் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களும் மட்டும் தான் நாளைக்குப் பேச இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சருடைய பதிலுரை இருக்கிறது. எனவே இன்றைக்கு வேண்டுமானால் நீங்கள் சில மணித் துளிகள் கூட்டிக்கொள்ளலாமே தவிர, நாளைக்கு அதை மாற்ற இயலாது என்பதை அன்புடன் ஒத்துக்கொண்டு நீங்கள் உரையை ஆற்றலாம்.

**திரு. எம். அப்துல் லத்தீப்:** தலைவர் அவர்களே, ஏற்கனவே நம்முடைய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவுப்படி, 21 ஆம் தேதியும் தேவைப்பட்டால் சபை நடவடிக்கைகளை நீட்டிக்கலாம் என்பதாகும். எனவே இந்தப் பொது விவாதம் என்பது மிக முக்கியமானது. அரசினுடைய கொள்கைகள் மீது முதன் முதலாக இந்த அடிப்படைப் பொறுப்பை ஏற்ற பிறகு, உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்ல ஆர்வம் உடையவர்களாக இருக்கிறார்கள். நாங்கள் எதிர் வரிசையிலே இருப்பவர்கள் கூட நேரத்தை மிகக் குறுகலாக்கி, 7 மணித் துளிகள், 10 மணித் துளிகள் என்று சொன்னால், எங்களால் நியாயம் செய்ய முடியாது. எனவே இந்த ஒரு நாள் நீட்டிப்பது என்பதை நாம் அலுவல் ஆய்வுக் குழுவிலே கூடி தீர்மானிப்பதற்கு முடிவு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதிப்புமிகு உறுப்பினர் அவர்கள் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் என்ன முடிவு எடுக்கப்பட்டது என்பதை முழுமையாக நினைத்துப் பார்க்க வேண்டும்.

16 வரைக்கும் மற்ற உறுப்பினர்கள் விவாதத்தில் பங்கு கொள்வார்கள். 17-ஆம் நாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரை. 18, 20 ஆகிய இரண்டு நாட்களிலும், தரப்பட்டிருக்கின்ற மசோதாக்கள் மீது விவாதம். தேவைப்பட்டால் 21 அன்று நீடிக்குமே தவிர, ஆளுநர் உரைக்கு நீடிப்பு என்று எந்த வரியும் இடம் பெறவில்லை. நாம் அலுவல் ஆய்வுக் குழுவில் அப்படிப் பேசவும் இல்லை என்பதை உறுப்பினருக்கு நினைவூட்டுகிறேன்.



**திரு. எம். அப்துல் லத்தீப்:** தலைவர் அவர்களே, பேசவில்லை என்பது ஒருபுறம் இருக்க, நாம் மீண்டும் கூடி, முடிவை எடுக்க வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது தேவையை அடிப்படையாகக் கொண்டு, நாம் மீண்டும் கூடி, இந்த முடிவை மாற்றுவதற்கு பேரவைத் தலைவர் அவர்கள் அருள்கூர்ந்து அனுமதிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இன்று காலையிலே நீண்ட நேரம் வீணாகிவிட்டது என்பதை அவை மிக நன்றாக அறியும். அதனால் 3, 4 பேர் உரையாற்ற வேண்டிய வாய்ப்பு அவர்களுக்குக் கெட்டிருக்கிறது. எனவே முன் வரிசையிலே உள்ள கட்சிகளின் தலைவர்களுடைய கருத்துப்படி நாங்கள் அடுத்து உடனடியாக அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி, இதை எப்படி நீட்டிக்கலாம் என்பதில் ஒரு முடிவு எடுப்பது நல்லது என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 11-30 மணியளவில் அலுவல் ஆய்வுக் குழு கூட்டம் நடைபெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து திரு. பொன் விஜயராகவன் அவர்கள் பேசலாம்.

***திரு. பொன். விஜயராகவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஆளுநர் உரையின் மீது நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீது முன் மொழியப்பட்ட திருத்தங்களை ஆதரித்து நான் சார்ந்திருக்கிற தமிழக ஜனதா கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களைக் கூற விழைகின்றேன். இந்த ஆளுநர் உரையைப் பொறுத்த வரையில் திட்டவட்டமாக அரசினுடைய கொள்கைகளைக் கூற வேண்டுமென்று ஆரம்பித்து, அதற்குப் பின்னாலே, கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை எப்படி நிறைவேற்றுவது என்கிற அடிப்படையில் நினைத்தார்களோ என்னவோ தெரியவில்லை, திட்டவட்டமாக பல கருத்துக்களை ஆளுநர் அவர்களுடைய உரையிலே தெரிவிக்க மறந்து விட்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. பொன். விஜயராகவன்] [1989 பிப்ரவரி 16

ஆளும் கட்சி தேர்தலிலே போட்டியிடுகிறபோது பல்வேறு வாக்குறுதிகளை மக்களுக்குக் கொடுத்தாலும், ஒரே நேரத்தில் ஆளுநர் உரையின் மீதோ, ஒரு கொள்கை விளக்கத்தின் மீதோ எல்லாக் காரியங்களையும் சொல்ல முடியாது என்பதையும், கொள்கை விளக்கமாக எல்லாவற்றையும் இதிலே விளக்க முடியாது என்பதையும் நான் அறிவேன் என்றாலும் கூட, முக்கியமான காரியங்களை இந்த ஆளுநருடைய உரையிலே குறிப்பிடுவதற்கு தவறிவிட்டிருக்கிறார்கள் என்ற கருத்தை நான் சொல்லாமல் இருக்க முடியாது.

இந்த உரையைப் பொறுத்த வரையில் தமிழகத்திலே இருக்கக்கூடிய பொருளாதார வளர்ச்சிக்கும், தமிழகத்தினுடைய முதுகெலும்பாக இருக்கக் கூடிய விவசாயிகளுடைய பிரச்சினை குறித்தும் ஒன்றும் சொல்லப்படவில்லை என்பதை நான் இங்கே வேதனையோடு சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தேர்தல் காலத்திலே சொல்லப்பட்ட வாக்குறுதிகளிலே, சிறு விவசாயிகளின் பழைய கூட்டுறவு கடன் பாக்கி அனைத்தையும் அறவே ரத்து செய்து விடப்படும் என்கிற கருத்தை ஆளுநர் உரையிலே நான் எதிர்பார்த்தேன். ஆனால் அது இங்கே இல்லாதது வேதனைக்கு உரியது என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகள் மின் வாரியத்திற்கு கட்டப்பட வேண்டிய வட்டி விகிதம் தள்ளுபடி செய்யப்படும் என்பதும் இன்னும் பாசன வசதிகளுக்கான பல்வேறு திட்டங்கள் தேர்தல் வாக்குறுதிகளிலே குறிப்பிடப்பட்டவை, அவை ஆளுநர் உரையிலே குறிப்பிடப்படவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டும் அல்லாமல், இன்றைக்கு தமிழகத்திலே விவசாயத்திற்கு அடுத்தபடியாக இருக்கக் கூடிய துறை நெசவுத் துறை—கைத்தறித் துறை கைத்தறி நெசவாளர்களுக்கு இன்றைக்கு மிகப் பெரிய நெருக்கடி வந்திருக்கிறது. மத்திய சர்க்கார் தாங்கள் அளித்து வந்திருக்கக்கூடிய ரிபேட்டை கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்ட பின்னாலே அதற்கு என்ன முடிவு எடுத்திருக்கிறது என்பதைப் பற்றி, தமிழக அரசின் முடிவு இதில் என்ன என்பதைப் பற்றி ஒரு வரி கூட ஆளுநருடைய உரையிலே குறிப்பிடப்படவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.



1989 பிப்ரவரி 16] [திரு. பொன். விஜயராகவன்]

தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் இந்த அரசுக்கும், முதல்வர் அவர்களுக்கும் ஒரு சில வேண்டுகோள் விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காவிரி பிரச்சினையைப் பொறுத்தவரையில், இன்றைக்கு காவிரியிலே இருக்கக் கூடிய தண்ணீர் 2 டி.எம்.சி. தண்ணீர் கர்நாடக அரசு விட்டு இருக்கிறது. இன்னும் 3 டி.எம்.சி. தண்ணீர் தர இருக்கிறது. தருவார்கள் என்ற அளவிலே பல கருத்துக்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆனால் காவிரி பிரச்சினையைப் பொறுத்த வரையில் நிரந்தரமான ஒரு தீர்வு வேண்டுமென்று தான் தமிழகத்து மக்கள் இன்றைக்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய நல்ல இணக்கமான ஒரு சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு பேச்சு வார்த்தையின் மூலமாகவே இந்தப் பிரச்சினையை தீர்த்து விட முடியும் என்று தமிழக முதல்வர் அவர்கள் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நான் அதைப் பார்த்து மிகப் பணிவோடு சொல்லிக் கொள்வேன். கடந்த காலங்களிலே ஏற்பட்ட நிலைமை, தமிழக அரசுக்கும் தமிழக மக்களுக்கும் திரும்ப ஏற்பட்டு விடக்கூடாது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-00)

திராவிட முன்னேற்றக் கழக அரசும் அன்றைக்கு இருந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருக்கும் நல்லுறவு இருந்த நேரத்திலே கூட ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது என்பதை இம்மாமன்றத்திலே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்றைக்கு காவிரிப் பிரச்சினை குறித்து தமிழக அரசினுடைய சார்பிலே சுப்ரீம் கோர்ட்டிலே ஒரு வழக்கு தொடரப்பட்டிருந்தது. அந்த வழக்கை வாபஸ் பெறுங்கள், பேசி நல்ல முடிவு எடுக்கலாம் என்று அன்றைய பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கூறியதனால் அதை நம்பி, அன்றைக்கு இந்திரா அம்மையாரோடு இருந்த உறவை நம்பி அந்த வழக்கை வாபஸ் பெற்றதன் விளைவை பல ஆண்டுகளாக அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே அதை அடிப்படையாக வைத்துக்கொண்டு பேச்சுவார்த்தைகளின் மூலமாக காவேரிப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கலாம். இணக்கமான ஒரு சூழ்நிலை, இணக்கமான ஒரு உறவு இருக்கிறது என்பதை அடிப்படையாக கொண்டாலும்கூட குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக, இத்தனை நாட்களுக்குள்ளாக இத்தனை மாதங்களுக்குள்ளாக காவேரிப் பிரச்சினையை பேசி முடிப்பதற்கான

[திரு. பொன். விஜயராகவன்] [1989 பிப்ரவரி 16

முயற்சியை மேற்கொள்ளுவோம் என்று சொல்லப்படவில்லை. அப்படி குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக ஒரு தீர்வு ஏற்படவில்லை என்று சொன்னால் தொடர்ந்து பேசிக்கொண்டே போவதால், காவேரிப் பிரச்சினை, இந்த மாநிலத்தினுடைய மக்களுடைய பிரச்சினை தீர்ந்துவிடாது என்ற அடிப்படையிலே ஒரு (Time bound programme) குறிப்பிட்ட காலவரையறைக்குள்ளாக, 6 மாதங்களுக்குள்ளாக அல்லது 3 மாதங்களுக்குள்ளாக பேச்சுவார்த்தை மூலமாக இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முயற்சி எடுப்போம், அப்படியில்லை என்று சொன்னால் இப்படி நாங்கள் போவோம் என்ற அளவில் திட்டவட்டமான ஒரு கொள்கையை இந்த அரசு கொள்ள வேண்டும் என்று இந்த மாமன்றத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நடுவர் மன்றத்திற்குப் போவதாக இருந்தாலும், உச்ச நீதி மன்றத்திற்குப் போவதாக இருந்தாலும் சரி, ஒரு முடிவோடு தெளிவான சிந்தனையோடு ஆட்சிப் பொறுப்பை நடத்துவதற்கான முயற்சியிலே இந்த அரசு ஈடுபட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

* **மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியாக இருந்த காலத்தில் காவேரி நீர்ப் பிரச்சினை குறித்து ஒரு முடிவு எடுக்கிற நேரத்திலெல்லாம், முதல்வர் கலைஞர் அவர்கள் எதிர்க்கட்சியிலே இருக்கின்ற தலைவர்களையெல்லாம் அழைத்துப் பேசி எந்தவைகைய முடிவு எடுக்கலாம் என்பதை முன் கூட்டியே அவர்களிடத்திலே கலந்தாலோசித்து இருக்கிறார்கள். இப்பவும் காவேரி நீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய நிலையிலே சுமுகமாகப் பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என்று முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அங்கத்தினர் விஜயராகவன் அவர்களுக்குச் சொல்கிறேன். நல்லபடியே நினையுங்கள். நிச்சயமாக காவேரிப் பிரச்சினையை சுமுகமான முறையிலே தீர்த்து தமிழக மக்கள் மகிழத்தக்க வகையிலே இந்த அரசு ஒரு முடிவை எடுக்கும். அப்படி விஜயராகவன் அவர்கள் சொன்னதைப்போல 'இல்லாவிட்டால் என்ன செய்வது" என்பதற்கும், அன்றைக்கும் இங்கு இருக்கின்ற மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர், பல்வேறு கட்சித் தலைவர்களைக் கலந்தாலோசித்து



1989 பிப்ரவரி 16] [திரு. துரைமுருகன்]

அதற்குப் பிறகுதான் அரசு ஒரு முடிவு எடுக்குமே தவிர ஏதோ ஒரு எதேச்சாதிகாரமான முடிவை எடுத்துவிடுவோம் என்று நம்ப வேண்டாம் என்று அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய கருத்தை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் இதற்கு முன்னாலே இதே போல நம்பித்தான், நாம் கேஸை வாபஸ் வாங்கி சிக்கிக் கொண்டோம், இப்போது உச்ச நீதி மன்றத்திலே இருக்கின்ற வழக்கிலே அங்கே உள்ள கர்நாடகா அரசாங்கம் நாங்கள் பேசித் தீர்த்துக்கொள்கிறோம் என்று அங்கே மனுசெய்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய அரசாங்கத்தின் சார்பாக நாங்கள் பேசிப் பயன் இல்லை. நாங்கள் 12 ஆண்டுக் காலமாக பேசி முடியாத காரணத்தால்தான் Tribunal வேண்டுமென்று நாங்கள் affidavit file செய்திருக்கிறோம். ஆகவே அதை நாம் வாபஸ் வாங்கக் கூடிய சூழ்நிலை வரும் என்று சொன்னால், பேசி முடிவெடுக்க வேண்டுமென்று சொன்னால் இன்னும் 10 ஆண்டுக்காலம் இந்தப் பிரச்சினை முடிவதற்கு ஆகும் என்பதற்காகச் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். எந்த ஒரு பிரச்சினையை எடுப்பதற்கு முன்னாலும் பேசுவதன் மூலமாக சுமூகமான முடிவு வருவதென்றாலும் (Tribunal) விவகாரங்களை அணுகுவதென்றாலும், எதிர்க் கட்சியில் உள்ள தலைவர்களுடைய யோசனைகளையும் நாங்கள் கேட்டுக்கொள்வோம் என்று தெரிவித்திருக்கிறேனே தவிர நாங்களாக ஒரு முடிவு எடுப்போம் என்று சொல்லவில்லை. ஏனென்றால், இது தமிழக மக்களைப் பொறுத்துள்ள பிரச்சினை.

**திரு. பொன். விஜயராகவன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனாலும் நான் சொல்ல விரும்புவது குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக ஒரு 'Time bound programme' வைத்துக்கொண்டு இவ்வளவு காலத்திற்குள்ளாக நாம் இதை முயற்சி எடுத்து செய்வது என்ற அளவிற்கு அரசாங்கம் முன்வர வேண்டும் என்பதோடு மட்டுமல்ல கடந்த காலத்திலே ஏற்பட்ட கசப்பான உணர்வுகள், கடந்த காலத்திலே நாம் ஏமாற்றப்

[திரு. பொன். விஜயராகவன்] [1989 பிப்ரவரி 16

பட்டதைப் போல ஏமாற்றப்படக் கூடாது என்பதற்காகத்தான் எச்சரிக்கையாகத்தான் இவைகளை நான் எடுத்துச் சொன்னேனே தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதை கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, தெலுங்கு கங்கையைப் பொறுத்தவரையில் சென்னை மாநகர மக்களுடைய குடிநீருக்கான தெலுங்கு கங்கையை—ஆளுநருடைய உரையிலே ஒன்றுமே இல்லாதது வருந்தத்தக்கது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியாவிலே இருக்கக் கூடிய (Metropolitan Cities) என்று சொல்லக் கூடிய பெருநகரங்களைப் பொறுத்த வரையில் சென்னை மாநகரத்திலே இருக்கின்றவர்களுக்குத்தான் தனி நபர்களுக்கு குடிநீர் என்கின்ற அளவு, per capita consumption of Drinking Water மற்ற பெருநகரங்களை விட மிகக் குறைவாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆய்வின் அடிப்படையிலே சொல்லப்படுமானால் ஒரு தனி நபருக்கு சென்னை நகரத்திலே 70 லிட்டர் தண்ணீர் தான் Per capita availability. ஆனால் அதே நேரத்தில், பாம்பே, டெல்லி, கல்கத்தா போன்ற மாநகரங்களுக்கு 200 லிட்டர்களுக்கு அதிகமான அளவுக்கு தண்ணீர் அவர்களுக்கு இருக்கிறது.

ஆக, மற்ற பெருநகரங்களை விட மூன்றில் ஒரு பங்கு தண்ணீர்தான் குறைவாக இந்த மாநகரத்து மக்களுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது என்பது மட்டுமல்ல, கிடைக்கக் கூடிய தண்ணீருடைய அந்தச் சுத்தத்தைப் பார்க்கின்ற போது, அது 'போட்டபிள் வாட்டர்' என்ற தகுதிக்குக் கூட வருமா என்கின்ற அளவிலே இருக்கின்றது என்பதை இங்கே சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். ஆகவே, அதை அடிப்படையாகக் கொண்டு. இன்றைக்கு, தமிழக அரசிற்கும், தமிழக முதல்வர் அவர்களுக்கும், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், மற்ற மாநிலங்களினுடைய முதல்வர்களுடன் இருக்கக்கூடிய இணக்கமான உறவைப் பயன்படுத்திக் கொண்டு, தெலுங்கு கங்கைத் திட்டத்தை எவ்வளவு விரைவாகச் செயல்படுத்த முடியும்—எவ்வளவு விரைவாகச் செயல்படுத்தமுடியும் என்பதிலே பல ஐயப்பாடுகள் இருக்கின்றன, பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இவைகளைப் பற்றியும் இந்த ஆளுநர் உரையிலே



1989 பிப்ரவரி 16] [திரு. பொன். **விஜயராகவன்]**

ஒன்றும் குறிப்பிடப்படவில்லை என்பதை இங்கே வேதனையோடு சுட்டிக்காட்டக் கடமைப்படுவதோடு மட்டுமல்லாமல், சென்னை மாநகர மக்களுக்கு, சென்னைப் பெருநகரத்தில் இருக்கக்கூடிய மக்களுக்கு உடனடியாக குடிதண்ணீருக்கான நிலையை இந்த அரசு ஒரு போர்க்கால நடவடிக்கையாக எடுக்க வேண்டும்.

வரக்கூடிய வறட்சி காலத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, வரக்கூடிய வெயில் காலத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, இது போன்ற ஒரு நிரந்தரமான தீர்வுக்கான காரியங்களை முனைந்து செயல்படுத்தப்படவேண்டும் என்பதை நான் இங்கே முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று. கூட்டுறவுச் சங்கங்களுடைய தேர்தல். இன்றைக்கு இந்த ஆளுநர் உரையிலே, சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி, கோவை மாநகராட்சி ஆகியவைகளுக்கு 18 வயது நிரம்பியவர்களுக்குக் கூட வாக்குரிமை வழங்காமல் உடனடியாக, வேக, வேகமாகத் தேர்தலை அறிவிப்பதற்கு முன்வந்த அரசிற்கு கூட்டுறவுச் சங்கங்களுடைய தேர்தல் விரைவில் நடத்தப்படும் என்பதான் சொல்லியிருக்கிறதேயல்லாமல், அதுவும் வேகமாக இருக்கிறது ; எப்போது நடத்தப்படும் ; என்று சொல்வதற்கு ஏன் அரசு முன்வரவில்லை என்பதையும் நான் இங்கே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாநகராட்சித் தேர்தல் தேதி அறிவிக்க முடிந்த அரசிற்கு கூட்டுறவுத் தேர்தல்களுக்கு தேதி அறிவிக்க முடியாதா என்றும் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இங்கே மிகமுக்கியமான காரியங்களாகச் சொல்லப்பட்டவை—இந்த நாட்டில் இருக்கக்கூடிய பினாமி நிலங்கள் ஒழிக்கப்படும் என்றெல்லாம் சொன்னார்கள். பினாமி நிலங்களை ஒழிப்போம் என்று சொல்லக்கூடிய கருத்துக்கள்—இங்கே இருக்கக்கூடிய மிகப் பெரிய நிலச்சுவான்தார்கள் இந்த நாட்டில் இருக்கக்கூடிய சட்டத்தையே ஏமாற்றி பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை பினாமி நிலங்களாகக் கையிலே வைத்திருக்கிறார்கள் ; அதை ஒழிப்போம் என்று சொன்ன கருத்துக்கள்கூட ஆளுநர் உரையிலே இடம்பெறவில்லை என்பதை நான் வருத்தத்தோடு சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[திரு. பொன். விஜயராகவன்] [1989 பிப்ரவரி 16

ஏறத்தாழ 30, 35 பஞ்சாலைகள் தமிழ்நாட்டிலே மூடிக் கிடக்கின்றன என்று சொல்கிறார்கள். அதனுடைய தொழிலாளர்கள் ஆண்டுக் கணக்கில் வேலையில்லாமல் இருப்பது மட்டுமல்லாமல், தமிழ்நாட்டின் உற்பத்தியினுடைய அளவு குறைகின்ற அளவிற்கும் இருப்பதைக் கணக்கில் கொண்டு மூடிக் கிடக்கின்ற பஞ்சாலைகள் பற்றியும், அந்தப் பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய வாழ்க்கைக்கு என்ன உத்தரவாதம் என்பதைப் பற்றியும் இந்த ஆளுநர் உரையில் இல்லையே என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எல்லாவற்றையும்விட மிக முக்கியமான பிரச்சினை, இன்றைக்கு தமிழக மக்கள் மத்தியிலே உள்ள, தென் தமிழ் நாட்டிலே இன்றைக்கு எல்லோரும் மிகக் கவலையோடு பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய, ஒரு 'டிபேட்டிங் கொஸ்டின்' என்று சொல்லக்கூடிய அளவிற்கு இருக்கக்கூடிய பிரச்சினை கூடங்குளத்திலே அமைய இருப்பதாகச் சொல்லப்படுகின்ற அணு மின்சார நிலையம் ஆகும். அந்த அணு மின்சார நிலையத்தைப் பொறுத்தவரையில் நான் என்னுடைய கருத்துக்களை இங்கே தெளிவாகக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைக்கு உலக நாடுகள் முழுவதும், வளர்ச்சி பெற்ற நாடுகள் முழுவதும் அணு மின்சார நிலையத்தை ஏற்றுக் கொள்வதில்லை என்பது மட்டுமல்ல; அங்கே அதற்குக் கடுமையான எதிர்ப்புகள் கிளம்பியிருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அது ரஷ்யாவாக இருந்தாலும் சரி, அமெரிக்கா ஐக்கிய நாடுகளாக இருந்தாலும் சரி, ஜெர்மனியாக இருந்தாலும் சரி, பிரான்சாக இருந்தாலும் சரி, நிறுவப்பட்ட அணு மின்சார நிலையங்கள் கூட பணியைத் துவங்க முடியாத அளவிற்கு, வேலையைச் செய்யமுடியாத அளவிற்கு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கக் கூடிய நிலையிலே இன்றைக்கு இருக்கின்றன.

ஆபத்தை விளைவிக்கக்கூடிய அணு மின்சார நிலையத்தைக் கூடங்குளத்தில் நிறுவுவதை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்பது மட்டுமல்ல, அந்த அணு மின்சார நிலையத்தை அமைய விடாமல் மாற்று முறைகளிலே மின்சாரத்தை எப்படி உற்பத்தி செய்வது என்பதில் கவனம் செலுத்தவேண்டும். கூடங்குளத்தில் அணு மின்சார நிலையம் அமைவதற்குக் கடுமையான எதிர்ப்பை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன், பல்வேறு காரணங்களுக்காக.



1989 பிப்ரவரி 16] [திரு. பொன். விஜயராகவன்]

அதனுடைய விஞ்ஞானக் கருத்துக்களுக்குள்ளேயோ, தொழில் நுட்பக் கருத்துக்களுக்குள்ளேயோ நான் செல்ல விரும்பாவிட்டாலும் அரசு அதைக் கவனமாகப் பரிசீலித்து, அதனுடைய சாதக பாதகங்களை வல்லுநர்களைக் கொண்டு உட்கார்ந்து ஆராய்ந்து மக்களுக்கு ஆபத்தை விளைவிக்கின்ற உள்நோக்கம் கொண்டிருக்கக்கூடிய அந்தக் கூடங்குளம் அணு மின்சார நிலையத்தை அமைவதை மாற்றி, மாற்றாக ஒரு யோசனையைச் சொல்ல விழைகின்றேன்.

(முற்பகல் 11-10)

இன்றைக்கு ஜெயங்கொண்டம் பகுதியில் ஏராளமான லிக்னைட் படிவங்கள் இருப்பதாக இன்றைக்கு கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. அந்த லிக்னைட்டை முழுவதுமாக தமிழக அரசு பெற்று அந்த லிக்னைட் மைனிங் பொறுப்பை மத்திய அரசு வைத்திருந்தாலும் கூட, அதை தமிழக அரசு பெற முடியுமானால் அந்த லிக்னைட் முழுவதையும் பெற்று Super Thermal Station என்று சொல்லக்கூடிய அளவுக்கு மிகப்பெரிய அனல் மின் நிலையங்களை ஆரம்பிக்கலாம். ஏற்கனவே இருக்கக்கூடிய ஏராளமான புனல் மின் திட்டங்களுக்கு மத்திய அரசுக்கு நாம் விண்ணப்பித்து இருக்கிறோம். அவைகளையெல்லாம் பெற்று மின்சாரப் பற்றாக்குறையை நாம் சமாளித்துக்கொள்ள முடியும். அணு மின்சார நிலையம் மட்டும் வேண்டாம் என்று இந்த நேரத்தில் நான் தெளிவாகக் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாட்டில் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், ரேஷன் கடைகளில் போடுகின்ற பச்சரிசிக்குப் பதிலாக தமிழ்நாடு மக்கள் அனைவரும் இன்றைக்கு புழுங்கல் அரிசி கேட்கின்றபோது மத்திய அரசு புழுங்கல் அரிசி தரவில்லை ஆகவேதான் பச்சரிசி போடுகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது ஒருவேளை நடைமுறையில் இருக்கக்கூடிய பிரச்சினையாக இருந்தாலும் எப்படியாவது பச்சரிசிக்குப் பதிலாக புழுங்கல் அரிசி போடுகின்ற நிலைமை எப்படி என்பதை ஆராய்ந்து பார்த்து புழுங்கல் அரிசி போடவேண்டும். இந்த நாட்டு மக்கள் மத்தியில் போய் மத்திய அரசு புழுங்கல் அரிசி தரவில்லை ஆகவே நாங்கள் போட முடியவில்லை என்பதை சொன்னால் நாட்டு மக்கள் அதை ஏற்றுக்

[திரு. பொன். விஜயராகவன்] [1989 பிப்ரவரி 16

கொள்ளப் போவது இல்லை. எப்படியிருந்தாலும் இந்த மாநில அரசுக்குத் தான் அந்த புழுங்கல் அரிசி போடவில்லை என்ற கெட்ட பெயர் போய்ச் சேரும். அதை ஆராய்ந்து பச்சரிசிக்குப் பதிலாக பச்சரிசி வேண்டாம் என்று சொல்பவர்களுக்கு புழுங்கல் அரிசியை ரேஷன் கடைகளில் தருவதற்கு முயற்சியை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ரேஷன் கடைகளில் அரிசியின் அளவை உயர்த்தித் தர வேண்டும் என்று நான் இந்த மாமன்றத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக பற்றாக்குறை மாவட்டமான, கேரள மாநிலத்தினுடைய எல்லையில் இருக்கக்கூடிய கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு புழுங்கல் அரிசி தரவேண்டும் என்பது மட்டும் அல்ல. ரேஷன் அரிசியை மட்டும் நம்பி வாழ்கிறவர்கள் ஏராளமானவர்கள் இருக்கின்ற காரணத்தால் புழுங்கல் அரிசியை தரவேண்டும் என்பதும், புழுங்கல் அரிசியை தருவது மட்டுமல்ல, ரேஷன் கடைகளில் கொடுக்கக்கூடிய அரிசியின் அளவை உயர்த்தித் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒன்று, இன்றைக்கு பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு ரேஷன் கார்டுகள் கொடுக்கப்படாமல் இருக்கின்றன. கடந்த அரசு மார்ச் மாதத்திற்கு முன்னால் விண்ணப்பித்து இருந்தால் மட்டும் தான் ரேஷன் கார்டுகள் வழங்கப்படும் என்ற அளவுக்கு ஒரு உத்தரவைப்போட்டு வைத்து இருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் பல்லாயிரக்கணக்கான குடும்பங்களுக்கு ரேஷன் கார்டுகள் இல்லை. ரேஷன் கார்டுகள் இல்லை என்று சொன்னால் அப்படிப்பட்டவர்கள் தங்களுடைய உரிமைகளை கோர்ட்டுகளில் கொண்டு போய் வழக்குகளில் ஜாமீன்களை பெறுவதற்குக் கூட ரேஷன் கார்டுகள் இன்றைக்கு கேட்கிறார்கள். அது மட்டும் அல்லாமல் கடந்த ஒரு ஆண்டு காலமாக ரேஷன் கார்டுகள் தராமல் அவர்கள் தங்களுடைய அன்றாட வாழ்க்கையிலே அரிசி வாங்கி சாப்பிடக்கூட முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். உடனடியாக, விரைவாக எல்லா குடும்பங்களுக்கும்; ரேஷன் கார்டுகள் இல்லாத எல்லா குடும்பங்களுக்கும் ரேஷன் கார்டுகளை அளிப்பதற்கான முயற்சிகளை உடனடியாக இந்த அரசு மேற்கொள்ளவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1989 பிப்ரவரி 16] [திரு. பொன். விஜயராகவன்]

இன்னும் ஒன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே நான் இந்த மன்றத்திலே உங்கள் மூலமாக ஒரு வேண்டுகோளாக விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தாய் தமிழகத்தோடு—கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளவர்கள் 1956-க்கு முன்னால்—அந்த மாவட்டம் தாய் தமிழகத்தோடு இணையவேண்டும் என்பதற்காக ஒருமிகப்பெரிய போராட்டம் மார்ஷல் நேசமணி அவர்கள் தலைமையில் நடத்தப்பெற்று பல உயிர்கள் பலி கொடுக்கப்பட்டு ஏராளமான தியாகிகள் தங்களுடைய உயிரையும், உடமைகளையும் இழந்த பிறகு இன்றைக்கு தாய் தமிழகத்தோடு இணைந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி இருந்தபோது அந்த தாய் தமிழகத்தோடு இணைவதற்காகப் போராடிய தியாகிகளுக்கு உதவிப் பணம் வழங்கியிருந்தார்கள். ஆனால் அந்த உதவிப் பணம் நிறுத்தப்பட்டிருக்கிறது. இன்றைக்கு மீண்டும் 141 பேர்களுக்கு உதவிப் பணம் வழங்கவேண்டும் என்பதற்காக ஒரு குறிப்பு கடந்த ஆட்சியில் எடுக்கப்பட்டு அதனுடைய முடிவு இடையில் ஆளுநர் ஆட்சி வந்த காரணத்தாலே அப்படியே நிறுத்தி வைத்திருப்பதாக நான் அறிகிறேன்.

அது கடந்த ஆட்சியில் எடுத்த முடிவு என்று எண்ணுகிறேன். அந்த முடிவை நிறைவேற்றாமல் அப்படியே Cold storage -ல் ஆளுநர் ஆட்சியில் வைத்து இருந்ததாக நான் அறிகிறேன். அதை உடனடியாகச் செயலாற்றுகின்ற வகையில் அந்த தியாகிகளுக்கு அந்த உதவிப் பணத்தை, மானியத்தை, பென்ஷனை வழங்குவதற்கு உடனடியாக உத்திரவிட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய முதலீடு இந்த மாநிலத்திலே வர வரக் குறைந்து கொண்டேயிருக்கிறது என்பதைப் பற்றி இந்த ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அது மட்டுமல்ல, மத்திய அரசு ஏற்கனவே இந்த மாநிலத்திற்காக என்று சொல்லி ஒதுக்கிய தொழிற்சாலைகளைக் கூட இங்கேயிருந்து கொண்டு போன வரலாறை நாம் மறந்து விடக்கூடாது. இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நான் உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்வேன். 1978 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்கு என்று வழங்கபபட்ட, ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த கலர்

போட்டோ தொழிற்சாலை, சென்னையிலே, அம்பத்தூரில் அந்தத் தொழிற்சாலையை நிறுவுவதற்கு இடம் பார்க்கப்பட்டபிறகு, என்ன காரணத்திற்காகவோ தெரியவில்லை, உத்தரபிரதேசத்திற்குக் கொண்டுபோகப்பட்டு விட்டது. இதுகுறித்து மீண்டும் மத்திய அரசோடு வற்புறுத்தி, இந்த மாநிலத்திற்குத் தந்ததை ஏன் கொண்டு போனீர்கள் என்று கேட்டு, அதைப் பெற வேண்டுமென்று நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, கரூர்-திண்டுக்கல் அகல ரயில் பாதைத் திட்டம், திண்டுக்கல்-தூத்துக்குடி அகல ரயில் பாதைத் திட்டம் மற்றும் சென்னைப் பெருநகரத்திற்கு அதிவேக ரயில் திட்டம் போன்றவை ஆமை வேகத்தைவிட மிகக் குறைவாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆமை வேகத்தைவிட குறைவாகப் போய்க் கொண்டிருக்கக் கூடியதை, வேகமாகச் செயல்படுத்த மத்திய அரசைக் கேட்டுக் கொள்வதற்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்பதோடு மட்டுமல்லாமல் இந்த மாநில மக்களுடைய உரிமைகளைப் பெறுவதில் எந்தவிதமான முடிவை நீங்கள் எடுத்தாலும், எந்தவிதமான முயற்சிகளை மேற்கொண்டாலும், இந்த மாநிலத்தினுடைய உரிமைகளைப் பாதுகாப்பதில், எங்களுடைய துணை இந்த அரசுக்கு நிச்சயமாக இருக்கும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்வதோடு மட்டுமல்லாமல், இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு, இந்த அரசு, எந்த விதமான தயக்கமும் காட்டாமல், எந்தவிதமான சுணக்கமும் இல்லாமல், விரைந்து குரல் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசுகளுக்கு இடையிலேயுள்ள அதிகாரம்பற்றி decentralisation of political powers '
என்று ஆளுநர் உரையிலே நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதிகாரம் பரவலாக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர, அது எந்த அளவிற்கு, மாநில அளவோடு நின்று விடுகிறதா இல்லை அதற்கும் கீழாக உள்ள, பஞ்சாயத்து லெவலில் கீழே இருக்கக்கூடிய ஊராட்சி மன்றங்கள், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அதிகாரத்தைப் பகிர்ந்து அளிப்பதற்கான முறையை நீங்கள் செயல்படுத்தப் போகிறீர்களா என்பதுபற்றித் தெளிவாக ஒன்றும் இல்லை.





இன்றைக்கு, கர்நாடக மாநிலத்திலே ஏற்படுத்தப்பட்ட பஞ்சாயத்து ராஜ் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டதற்குப் பின்னால், இந்தியா முழுவதும் ஒரு புதிய சிந்தனை ஏற்பட்டிருக்கிறது. அந்த புதிய சிந்தனையினுடைய அடிப்படையிலே, இந்த மாமன்றத்திலேகூட ஒரு 'Comprehensive Bill' ஐ ஒரு நல்ல சட்டமுன்வடிவைக் கொண்டு வந்து, பஞ்சாயத்து அளவில், மாவட்டங்களில் இருக்கக் கூடிய (District Development Council) உட்பட, எல்லாவற்றுக்கும் அதிகமாக அதிகாரத்தைப் பகிர்ந்து அளித்து, ஆங்காங்கே, அடிமட்டங்களிலே, கீழே இருக்கக்கூடிய காரியங்களைச் செயல்படுத்துவதற்கான ஒரு நல்ல அடிப்படையை, நல்ல முன்னுதாரணத்தை இந்த அரசு மேற்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்கிற ஒரு கோரிக்கை பல ஆண்டுகாலமாகவே இருந்து கொண்டிருக்கிறது. 'ராஜமன்னார் கமிஷன்' ரிப்போர்ட்டை இந்த அவையிலே சமர்ப்பித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் மத்திய அரசு கூட, மத்திய-மாநில அரசுகளுக்கான உறவுகள் எப்படி அமையவேண்டுமென்பதற்காக சர்க்காரியா தலைமையிலே ஒரு குழுவைப் போட்டு, அதனுடைய அறிக்கையைக்கூட நாடாளுமன்றத்திலே சமர்ப்பித்திருக்கிறார்கள். மிக விரிவான அறிக்கையை சமர்ப்பித்திருந்தாலும்கூட அதன்மீது முடிவு எடுப்பதற்கான நிலைமையிலே மத்திய சர்க்கார் இருந்தாலும் இன்னும் அதுகுறித்த ஒரு சர்ச்சைகூட இந்த நாட்டில் சரியாக இல்லையென்பதை நாங்கள் அறிகிறோம். இதுகுறித்தும் மாநில அரசு மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி மாநில அரசுகளுடைய பிரச்சினைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, மாநில-மத்திய அரசுகளுடைய அதிகாரங்கள், இந்த சமுதாயத்தில் இருக்கக்கூடிய, கடைகோடியிலே இருக்கக் கூடிய மக்களைக்கூட சென்று எட்டுகின்ற வகையிலே அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டுமென்ற கொள்கையை விரைவாக நடைமுறைப்படுத்தப்படுவதற்கு இந்த மாநில அரசு எடுத்துக்கொள்கிற முயற்சிகளுக்கு எங்களுடைய ஆதரவு இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக் கொள்கிறேன். 13 ஆண்டுகளுக்குப் பின்னாலே அமையப்பெற்ற இந்த அரசாங்கம் ஏராளமான கருத்துக்களைக் கொண்டிருக்கும். இந்த ஆளுநர் உரையிலே தங்களுடைய உணர்வுகளையெல்லாம்

[திரு. பொன். விஜயராகவன்] [1989 பிப்ரவரி 16

வகுத்து தந்திருப்பீர்கள். தங்களுடைய தேர்தல் அறிக்கையிலே கொடுத்தவைகளையெல்லாம், கொள்கை விளக்கங்களாக நீங்கள் கொடுத்திருப்பீர்கள் என்று எதிர்பார்த்த மக்களுக்கு ஏமாற்றம் அளிப்பதாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொண்டு, நீங்கள் அளித்த வாக்குறுதிகள் ஒவ்வொன்றையும் வெகு விரைவிலேயே இந்த உரையிலே கொள்கை விளக்கமாகச் சொல்லா விட்டாலும்கூட, தொடர்ந்து நடைபெறவிருக்கும் பட்ஜெட்டிலாவது நீங்கள் அவைகளைக் கொண்டு வருவீர்கள் என்ற நம்பிக்கையோடு அவைகளைக் கொண்டுவரவேண்டும். கொடுத்த வாக்குறுதிகளை நீங்கள் கண்டிப்பாக நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அளித்த வாய்ப்பிற்கு நன்றிகூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

(முற்பகல் 11-20)

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு எங்கள் கட்சியின் சார்பில் கொடுத்த திருத்தங்களை ஆதரித்து இந்த மன்றத்திலே ஒருசில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன். ஆளுநர் உரை என்பது அரசு தன் கொள்கையை, தன்னுடைய திட்டங்களை மக்களுக்கு அறிவிக்கக்கூடிய ஒரு அறிவிப்பாகும். இதிலே, தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்ட அத்தனை விஷயங்களும் இடம் பெறும் என்று நான் நினைக்கவில்லை என்றாலுங்கூட, இன்றைக்குத் தமிழக மக்கள் முன்னாலுள்ள—பெரும்பகுதி மக்களைப் பாதிக்கக் கூடிய, பெரும்பகுதி மக்கள் எதிர்பார்க்கக் கூடிய, நீங்கள் தேர்தல் அறிக்கையிலே சொல்லிய பல விஷயங்கள் இதிலே இடம் பெறும் என்று நான் ஆவலோடு எதிர்பார்த்திருந்தேன். அதிலே மிக முக்கியமான விஷயங்கள், பினாமி நில ஒழிப்பு, விவசாயத் தொழிலாளிகளுக்குப் பென்ஷன் விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம், மனை இல்லாதவர்கள் அனைவருக்கும் ஐந்து செண்ட் மனைப் பட்டா, மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்கு ஊதியம், எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி, நீர்ப்பாசன வசதி, அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ள நெசவாளர்களுக்கு நிவாரணம் இவை போன்ற விஷயங்களையெல்லாம் இடம்பெறும் என்று நான் எதிர் பார்த்திருந்தேன். மிக முக்கியமான வேளாண்மைப் பெருக்கத்திற்கும், தொழில் வளர்ச்சிக்கும் இதில் எந்தவிதமான திட்டமும் அறிவிக்கப்படாமல் இருக்கிறது என்பதை நான் மிக்க வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



1989 பிப்ரவரி 16] [திரு. பொன் விஜயராகவன்]

அதே நேரத்திலே, எதிர்வரிசையிலே இருப்பதன் காரணமாக, அத்தனை காரியங்களையும் நான் எதிர்த்துத்தான் பேசுவேன் என்று நீங்கள் கருதி விடக் கூடாது. இதிலே, குறிப்பாக ஆளுநர் உரையிலே சொல்லப்பட்ட முக்கியமான விஷயங்களாகிய, இன்றைக்குப் பெண்களுக்கு முப்பது சதவிகித வேலைவாய்ப்பை அளித்திருக்கக்கூடிய இந்தத் திட்டத்தை முழு மனதோடு நான் வரவேற்கிறேன். அதே மாதிரியாக மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும், மத்தியிலே குவிக்கப் பட்டிருக்கின்ற அதிகாரங்கள் மாநிலங்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டால்தான் மாநிலங்களிலுள்ள மக்களுடைய நியாயமான கோரிக்கையை நிறைவேற்ற முடியும் என்ற அந்தக் கோரிக்கையை, அந்த அறிவிப்பை முழு மனதோடு நான் வரவேற்பதோடு, அதற்காக உங்களோடு சேர்ந்து எங்களுடைய கட்சியும் அதற்கு உறுதுணையாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு மிகப் பெரிய நெருக்கடிக்கு நாடு உள்ளாகியிருக்கிறது என்று சொன்னால், அதற்கு மிக முக்கியமான காரணம், மாநிலத்திலே உள்ள அரசாங்கத்தை மட்டும் நான் குறை கூறவில்லை. மத்தியிலே உள்ள அரசாங்கம், அதிகமான அதிகாரங்களைக் கையிலே குவித்து வைத்து இருப்பதோடு மட்டுமல்லாமல், அடிப்படையாகச் செய்ய வேண்டிய பல காரியங்களைச் செய்வதற்கு மனம் இல்லாமல் தான் செய்யாததன் காரணமாக சாதாரணமாக சிறுசிறு தொழில்களெல்லாம் நசிந்து மூடக்கூடிய நிலைமையும் சிறுசிறு தொழில்களெல்லாம் நசிந்து மூடக்கூடிய நிலைமையும் இன்றைக்கு நாடு பூராவிலும் இருக்கிறது. பல பெரிய தொழிற்சாலைகள். இலட்சக்கணக்கான ஒரு இலட்சத்திற்கும் அதிகமான தொழிற்சாலைகள், இலட்சக்கணக்கான, ஒரு இலட்சத்திற்கும் அதிகமான சாலைகள், இலட்சக்கணக்கான, ஒரு இலட்சத்திற்கும் அதிகமான தொழிற்சாலைகள் இந்தியா பூராவும் மூடப்பட்டிருப்பதோடு, தமிழகத்திலே மூடப்பட்ட பஞ்சாலைகள் மூடப்பட்டு, அதிலே பணியாற்றக்கூடிய பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் 3 வருஷம், 2 வருஷம், 6 மாதங்களுக்கும் மேலாகப் பட்டினி கிடக்கக் கூடிய பரிதாபமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

[திரு. சோ. அழகர்சாமி] [1989 பிப்ரவரி 16

சமீபத்திலேகூட "ஸ்டான்டர்ட் மோட்டார் நிறுவனம்" என்று சொல்லக்கூடிய கம்பெனி—தமிழகத்திலே கார் உற்பத்தி பண்ணக் கூடிய ஒரேயொரு தொழிற்சாலையாக இருக்கக்கூடிய அந்தக் கம்பெனி பிர்லாவினுடைய ஒரு ஆதிக்கத்தின் காரணம் என்று சொல்கிறார்கள், அது என்ன ஆதிக்கமோ எனக்குத் தெரியாது. அதுகூட இன்றைக்கு மூடப்பட்டிருப்பதோடு மட்டுமல்லாமல், 3,000-க்கும் அதிகமான தொழிலாளிகள் பணிபுரியும் இந்த நிறுவனம் இப்பொழுது இந்த அரசாங்கம் வந்ததற்குப் பிறகு மூடப்பட்டிருக்கிறது. 3,000-க்கும் அதிகமான அந்தத் தொழிலாளிகள் 5 மாதங்களாகச் சம்பளமே பெறவில்லை மாதாமாதம் ஊதியம் பெறக் கூடியவர்கள், 1-ஆம் தேதி ஊதியம் வரவில்லை என்றால் கஷ்டம் என்று சொல்லக் கூடிய நிலை. இருக்கக்கூடிய இந்தக் காலத்தில் மூன்று மாதங்களாக ஊதியம் பெறாமல் எப்படி வாழ்க்கையை நடத்துவது என்பதைப்பற்றி இந்த அரசு மிகக் கவனமாகப் பரிசீலனை செய்து, உடனடியாக அந்தத் தொழிலாளிகளுக்கு நிவாரணத்திற்குரிய வகையில், அந்தத் தொழிற்சாலையைத் திறப்பதற்கான நடவடிக்கையை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தீவிரமாக அந்தக் காரியத்தில் ஈடுபட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்

இன்றைக்கு வேளாண்மைக்கு அடுத்தபடியாக, நெசவுத் தொழிலைப்பற்றி இங்கே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் சொன்னார்கள். ஆளுங்கட்சி வரிசையிலிருக்கக் கூடியவர்களெல்லாம் சொன்னார்கள். இன்றைக்கு ஒரு உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், எமனேஸ்வரம் என்று சொல்லக்கூடிய பரமக்குடி நெசவாளர் நிறைந்த பகுதி தமிழகத்திலேயே மிக அதிகமாகக் கொஞ்சம் நல்ல நிலையிலே நெசவுத் தொழில் நடக்கக் கூடிய அந்தப் பகுதியிலே உள்ள நெசவாளர்கள் கூட, நேற்று வந்து என்னைப் பார்த்தார்கள். அந்த ஒரு இடத்தில் மட்டும் ஏறக் குறைய 70 இலட்சம் 80 இலட்சம் பெறுமான துணிகள் தேக்கம் இருப்பது மட்டுமல்லாமல், அவர்களுக்குச் சேர வேண்டிய பணமும் போய்ச் சேராமல் இன்றைக்கு இந்தத் தொழில் நலிந்து கொண்டிருக்கிறது அந்தத் தொழிலை நம்பியிருக்கிற நெசவுத் தொழிலாளர்கள் மாதத்திற்கு இருபது நாட்களுக்கு வேலையில்லாமல் பட்டினி இருக்கக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. அந்தத் தொழிலைப்பற்றி நான் இந்தத் திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவர்களுக்கோ அல்லது இந்த ஆட்சிக்கோ சொல்ல வேண்டியதில்லை அந்தத்



1989 பிப்ரவரி 16] [திரு. சோ. அழகர்சாமி]

தொழில் ஆரம்பித்த காலத்திலேயிருந்து, கைத்தறித் துணிக்காக அதைத் தோளிலே போட்டு விற்ற மிகப் பெரிய அந்த இயக்கத்தை நடத்தி, அந்த நெசவாளர்களுக்காக கடுமையாகப் பாடுபட்ட இந்தத் திராவிட முன்னேற்றக் கழகம் நெசவாளர்களுடைய பிரச்சினையைப்பற்றி ஆளுநர் உரையிலே ஒரு வரி கூட சொல்லவில்லையே அது ஏன் என்பதைப்பற்றி எனக்கு விளக்கம் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரியாக இன்றைக்கு கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்கின்ற துணிகளுக்கு காலாகாலத்தில் பணம் போய்ச் சேருவதில்லை. அதற்குரிய 'ரிபேட்' டும் கிடைக்கவில்லை. சமீபத்தில் மத்திய அரசைச் சேர்ந்த தொழில் துறை அமைச்சர் ரிபேட்டை நிறுத்தப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். காலங்காலமாக இருக்கக்கூடிய, 'செய்யாத் தொழிலை சீர்தூக்கிப் பார்க்கின் நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை' என்று சொல்லக்கூடிய, நெசவாளர்களை வாழவைக்கக்கூடிய இந்தத் தொழிலுக்கு மத்திய அரசு ரிபேட்டை நிறுத்தும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை எதிர்த்து சண்டை போட்டு ரிபேட்டை. பெறவேண்டும். அது மட்டுமல்லாமல் இப்போது 30 நாள் ரிபேட் என்று இருப்பதை ஆண்டுக்கு 60 நாள் ரிபேட் வழங்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்தத் தொழிலை நம்பியிருக்கிற இலட்சக்கணக்கான மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். நம்முடைய நாட்டில் விவசாயத் தொழிலுக்கு அடுத்தபடியாக சுமார் 30 இலட்சம் பேர் இந்த நெசவுத் தொழிலை நம்பியிருக்கிறார்கள். அவர்களைப் பாதுகாக்க இந்த சர்க்கார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரியாக இந்த ஆளுநர் உரையிலே இன்னொன்றும் சொல்லப்பட்டிருக்கிறது. 'கடும் பொருளாதாரப் பிரச்சினைகள் போன்ற பல்வேறு பிரச்சினைகளை எதிர்த்து சமாளிக்க வேண்டியிருக்கிறது' என்று கூறப்பட்டிருக்கிறது. இதைக் கூறிவிட்டு, அடுத்து மேலவையை மீண்டும் அமைப்போம் என்று கூறியிருக்கிறது. இதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் மேலவை தேவையில்லை என்பது எங்களுடைய கருத்து. பல மாநிலங்களில் மேல்சபை இல்லை. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இன்னும் காலதாமதம் தான் ஏற்படுமே தவிர வேறு பயன் ஒன்றும் இல்லை. அது மட்டுமல்ல. மக்கள் மத்தியிலே நின்று வெற்றிபெற முடியாதவர்

[திரு. சோ. அழகர்சாமி] [1989 பிப்ரவரி 16

களுக்கு புறக்கடை வழியாக வந்து பதவி பெற. அவர்களுக்கு பதவி கொடுக்க இருக்கக்கூடிய ஒரு ஏற்பாடாக இது இருக்கிறது. நான் குறிப்பிடுவது தவறு என்றால் திருத்திக்கொள்கிறேன். ஆகவே, மேலவை வரக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மூடிக்கிடக்கின்ற மில்களை எல்லாம் உடனடியாகத் திறக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மதுரையிலே மகாலட்சுமி மில் மூடப்பட்டு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதைப்போல மெட்டூர் மில் பல ஆண்டுகளாக மூடிக்கிடக்கிறது. அதனால் சுமார் 2000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கின்ற முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சி மன்றங்களைப் பற்றிக் கூறுகிறபோது, நேற்றுகூட பத்திரிகையில் ஒரு தவறான செய்தி வந்திருக்கிறது. உள்ளாட்சி மன்றங்களின் ஆட்சிக்காலத்தை 5 ஆண்டுகளாக ஆக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை எங்கள் கட்சி எதிர்ப்பதாகக் கூறுவது தவறு. எங்கள் கட்சியின் சார்பிலே இதை ஆதரித்துள்ளோம்.

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்:** தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனி சரியாக நடைபெறாத காரணத்தால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையின்றித் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலுக்கு ஒப்ப தொழிற்சங்கத் தலைவர்களையும் நிர்வாகத்தையும் அழைத்து ஒன்றாகக் கூட்டாகப் பேச்சுவார்த்தை நடத்தி 16-ம் தேதியும் அது தொடர்பாக பேச்சுவார்த்தை நடைபெற இருக்கிறது. நல்ல முடிவுகள், இணக்கமான முடிவுகளை நோக்கி பேச்சுவார்த்தை சென்று கொண்டிருப்பதால் அதனுடைய விவரங்களை இப்போது சொல்ல வேண்டாம் என்று கருதுகிறேன்.

[illegible] ஆலையைப் பற்றிச் சொன்னார்கள். [illegible] நடந்த கதை [illegible] செய்த [illegible] தேசிய [illegible] ஏற்பட்டிருக்கிறது. இதற்காகப் புதிய அரசு பொறுப்பேற்றவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலுக்கு ஏற்ப நிர்வாகத்தையும் தொழிற்



1989 பிப்ரவரி 16] [திரு. சோ. அழகர்சாமி]

சங்கத் தலைவர்களையும் அழைத்து, தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறோம். எங்களுடைய முயற்சியில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையினை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. உ. ரா. வரதராசன்:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. ஸ்டாண்டர்டு மோட்டார் நிர்வாகம் இப்போது வேறு ஒரு கைக்கு மாறியிருப்பதால், அங்கே ஏற்கெனவே தொழில் தகராறு சட்டம் 12 (3) பிரிவின்கீழ் போடப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்க வேண்டிய பயன்கள் அந்தத் தொழிலாளர்களுக்கு கிடைப்பது மறுக்கப்படுகிறது. ஆகவே, ஒப்பந்தத்தை நேர்மையாக அமுல்படுத்தக்கூடிய வகையில் அந்த ஆலை நிர்வாகத்தோடு பேசும்போது கவனமாக இருக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒப்பந்தத்தின் சரத்துக்கள் மீறப்பட்டால், தொழிலாளர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். நிச்சயமாக இந்த அரசு தொழிலாளர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கும். அதே நேரத்தில் அந்தத் தொழிற்சாலையைத் திறக்கவும் வழி காண்கிறோம். இரண்டுக்கும் இணக்கமான முடிவினை இருவரையும் அழைத்துப் பேசி, சுமுகமான தீர்வு காண்போம் என்ற நம்பிக்கையினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

**திரு. சோ. அழகர்சாமி:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திற்கு நன்றி. நான் அதைத்தான் சொல்கிறேன். கடந்த கால அரசாக இருந்தாலும், இப்போதுள்ள அரசாக இருந்தாலும் சொல்கிறேன். ஒரு தொழிற்சாலை மூடப்பட்டதன் காரணமாக அந்த தொழில் முதலாளியும் பல கோடி நஷ்டம் அடைந்தார்கள் — அவர் பட்டினியோடு கஷ்டப்பட வேண்டிய நிலைமையில் இல்லை. பல்வேறு நிறுவனங்கள், பல்வேறு வங்கிகள், காப்பீட்டு கழகங்கள் மூலமாக கடனைப் பெற்று அதிலே அவர்களுடைய நிர்வாகக் கோளாறு காரணமாக மூடப்பட்டிருக்கலாம், சிக்கலாக இல்லாமல் இருக்கலாம். அனைவரும்

[திரு. பொன். விஜயராகவன்] [1989 பிப்ரவரி 16

கூட, இன்றைக்கு தொழிற்சாலைகள் மூடப்படுவதன் காரணமாக முதலாளிகள் பட்டினியோ கஷ்டமோ படப்போவதில்லை என்பது நம் எல்லோருக்கும் தெரியும். ஆனால் ஒரு நிறுவனம் மூடப்பட்டது என்று சொன்னால் அதை நம்பியிருக்கின்ற 10 பேர், 100 பேர் வேலை செய்கின்ற தொழிலாக இருந்தாலும், அதில் வேலை செய்பவர் குடும்பங்கள் என்ன செய்யும்? அவர்கள் எங்கே போய் கடன் வாங்குவார்கள். ஒரு படி அரிசி இன்றைக்கு 10 ரூபாய் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். நான் இந்த மன்றத்திலே முதன் முறையாக வருகிறபோது சொன்னார்கள். அண்ணா அவர்கள் சொன்னார்கள். எங்கள் லட்சியம் ரூபாக்கு மூன்றுபடி அரிசி, நிச்சயம் ஒரு படி அரிசி என்று சொல்லி, ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி அளித்தார்கள் சென்னை நகரத்திற்கு அப்போது.

இன்றைக்கு ஒரு படி அரிசி ரூ. 10 விலை. விவசாயக் கூலியாக இருந்தாலும் சரி, ஆலையிலே வேலை செய்கின்ற தொழிலாளியாக இருந்தாலும் சரி, அரசு அலுவலகத்தில் உள்ள தொழிலாளியாக இருந்தாலும் சரி ஒரு நாள் வேலை இல்லை என்று சொன்னால், ஒரு நாள் ஊதியம் வரவில்லை என்று சொன்னால் அவன் எப்படி வாழ்க்கை வாழ்வான். ஆக தொழிற்சாலையை மூடுகிறாயா, உங்களை சிறையிலே மூடுகிறேன் என்று தைரியமாக முதலமைச்சர் அவர்கள் கூறி நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழிற்சாலைகளை ஏன் மூட வேண்டும்? தொழிற்சாலைகளை மூடினால் தொழிலாளர்களின் வயிறு என்னவாகும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அரசு தொழிலாளிகள் வயிற்றில் அடிக்கின்ற முதலாளிகளுக்கு ஆதரவாக என்றைக்கும் இருக்காது என்பதை அனுபவரீதியாக நம்முடைய நண்பர் திரு. அழகர்சாமி அவர்கள் அறிவார்கள்.

நான் ஏற்கெனவே முதலமைச்சராக தமிழகத்திலே பொறுப்பேற்றிருந்த நேரத்திலே, கோவையிலே நடைபெற்ற ஆலைத் தொழிலாளர்கள் போராட்டத்தில் எவ்வாறு நடந்து கொண்டேன் என்பதும், முதலாளிகளுக்கு எவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டது என்பதும், தொழிலாளர்களுடைய நலன்கள் எவ்வாறு பேணப்பட்டன என்பதும் நம்முடைய நண்பர் திரு. அழகர்சாமி அவர்களுக்கு மிக நன்றாகவே தெரியும்.



1989 பிப்ரவரி 16] [திரு. சோ. அழகர்சாமி]

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு தலைவரவர்களே, அதனால்தான் நான் நம்பிக்கையுடன் கூறுகிறேன். தொழிற்சாலைகள் கடந்த ஆட்சியிலே மூடப்பட்டு இருக்கின்றன. 30-க்கும் அதிகமான பஞ்சாலைகள் தமிழகத்திலே மூடப்பட்டு இருக்கின்றன. அதிலே ஏறக்குறைய ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் குடும்பங்கள் எல்லாம் பரிதவித்துக் கொண்டிருக்கின்றன. அவர்கள் துன்பங்கள் தீர்வதற்கான உடனடி நடவடிக்கைகளை அமைச்சர்கள் எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்ததாக, இன்றைக்கு தேர்தல் அறிக்கையிலே மிக முக்கியமாகத் தரப்பட்ட விஷயங்கள், மக்களை ஏமாற்றும் மத்தாப்புத் திட்டங்களைப் போடாமல் இன்றைய நிதி நிலைமையில் எது சாத்தியமோ, மக்களுக்கு உடனடியாக செய்ய முடியுமோ அவைகளை மட்டும் தேர்தல் அறிக்கையிலே கூறி இருக்கிறோம் என்று கூறிவிட்டு, எல்லாவற்றையும் கூறவில்லை.

சிறு விவசாயிகள் பழைய கூட்டுறவு பாக்கிகளை எல்லாம் அறவே ரத்து செய்யப்படும் என்று கூறி இருக்கிறார்கள். அதே மாதிரியாக 60 வயது அடைந்த அனைத்து விவசாயத் தொழிலாளர்களுக்கும், அநாதைகள், ஆதரவற்ற விதவைகள் அனைவருக்கும், மொத்தம் இத்தனை பேர்களுக்குத்தான் என்கின்ற எண்ணிக்கை வரம்பு இல்லாமல், மாதம் ரூ. 50 உதவித்தொகை அளிக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, ஓரே ஆண்டில் அனைத்து கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்து தரப்படும் என்று கூறியிருக்கிறார்கள்.

அதே மாதிரி வீட்டு மனை இல்லாத அனைத்து கிராம மக்களுக்கும் குடும்பத்திற்கு 5 சென்ட் நிலம் பட்டா செய்து கொடுக்கப்படும் என்றும் அதேபோல மத்திய அரசு ஊழியர்களுக்கு ஈடாக மாநில அரசு ஊழியர்களுக்கும் சம்பள விகிதத்தைச் சமப்படுத்தித்தர வேண்டும் என்பது எங்களுடைய கொள்கை அதை நிறைவேற்ற முயற்சிப்போம் என்றும் அடுத்தபடியாக எல்லாவற்றிற்கும் மேலாக பினாமி நிலங்கள் ஒழிப்பு என்ற தலைப்பில் காமராஜர் ஆட்சியிலும் கழக ஆட்சியிலும் நிறைவேற்றப்பட்ட நில உச்சவரம்பு சட்டத்தை மீறி பினாமி நிலம் வைத்திருந்தால், அந்த நிலத்தை வைத்திருப்போரிடமிருந்து அந்த நிலத்தைக் கைப்பற்றி, நிலமற்ற விவசாயிகளுக்கு வழங்கும் பினாமி நில ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

[திரு சோ. அழகர்சாமி] [1989 பிப்ரவரி 16

அத்தனைக்கும் மேலாக ஒரு முக்கியமான அறிவிப்பாக வரும் என்று கருதினேன். இந்த ஆளுநர் அவர்கள் உரையிலேயே முதலாவதாக பினாமி நில ஒழிப்பு அறிவிப்பு வரும் என்று எதிர் பார்த்தேன். இது சம்பந்தமாக பல்வேறு போராட்டங்கள் நடத்தி எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் எங்கள் தோழர்கள் கோர்ட்டுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். தடையுத்தரவை பெற்று அப்பீலில் போய் வழக்குகள் நடந்துகொண்டு இருக்கின்றன.

இன்றைக்கு தமிழகத்திலே இருக்கக்கூடிய கிராமப்புற மக்களுக்கு, வறுமைக்கோட்டிற்கு கீழே இருக்கின்ற மக்களை ஓரளவுக்காவது உயர்த்தவேண்டுமென்று சொன்னால் கிராமப்புற பகுதிகளில் வாழக்கூடிய விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒரு வேளை அரை வயிறு சாப்பாடாவது கிடைக்கவேண்டும். அவர்கள் நியாயமான முறையில் சாப்பிட்டு நிம்மதியாக இருக்கவேண்டும் என்று சொன்னால் இந்த நில உச்சவரம்பு சட்டத்தைக் கறாராக நிறைவேற்றவேண்டும். 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் நிலம் என்று இருந்ததை 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று குறைத்திருக்கின்றார்கள். அதையும் கறாராக குடும்பத்திற்கு 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று அமல்படுத்தவேண்டும். பினாமி நிலங்கள் யாரிடம் இருந்தாலும் சரி, ஒவ்வொருவருக்கு ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்று அந்த பகுதியிலே உள்ள மக்களுக்கு வழங்கக்கூடிய ஒரு சரியான சட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது சம்பந்தமாக உடனடியாக ஏற்பாடு செய்து கிராமப்புற மக்களுக்கு அடித் தட்டிலே உள்ள மக்களுக்கு ஒரு ஏக்கர் நிலமாவது குறைந்த பட்சம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். ஆகவே, அவர்கள் அடிமைகளாக வாழாமல், சுதந்திரமாக வாழ அரசு வழி வகுத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

அடுத்து, நிலங்களில் சாகுபடி செய்கின்ற சாகுபடியாளர்களின் பெயர்களை இன்று வரை பதிவு செய்யவில்லை. பல்வேறு கட்சி களின் ஆட்சிகள் மாறிவிட்டன. ஆனாலும்கூட இன்னார்தான் இந்த நிலத்தில் சாகுபடி செய்கிறார் என்பதற்கு ஆதாரமாக இது வரை பெயரைப் பதிவு செய்வதற்குரிய வழிவகை செய்யப்பட வில்லை. இதுசம்பந்தமாக ஒரு சர்வகட்சி கூட்டத்தைக் கூட்டி,



1989 பிப்ரவரி 16] [திரு சோ. அழகர்சாமி]

பேசி ஒரு முடிவெடுத்து உடனடியாக யார் யார் உண்மையாக நிலங்களில் சாகுபடி செய்கிறார்களோ அவர்களுடைய பெயர் களை எல்லாம் பதிவு செய்வதற்குரிய ஏற்பாட்டினை அரசு செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மானாவாரிப் பகுதி விவசாயம் சம்பந்தமாக பல்வேறு கருத்துக்களைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் குறிப்பிட்டார்கள். சிவகாசி, சாத்தூர், கோவில்பட்டி போன்ற பகுதிகள் அதிகமாக கிணற்றுப் பாசனத்தை நம்பியிருப்பவை. அங்கே விவசாயம் செய்கிற விவசாயிகள் பெரும்பாலும் கிணற்றுப் பாசனத்தைத்தான் நம்பி வாழ்கிறார்கள் தமிழகத்திலே ஏறத்தாழ 15 லட்சம் கிணறுகள் இருக்கின்றன. இந்தப் பாசனத்தை நம்பி இன்றைய தினம் 50 லட்சம் ஏக்கர்களுக்கு மேல் விவசாய நிலங்கள் இருக்கின்றன. கோவை, சேலம் போன்ற மாவட்டங்களிலுள்ள கிணறுகளில் எல்லாம் நூறு அடி ஆழத்திற்கு மேல் தான் தண்ணீர் கிடைக்கின்ற நிலை இருக்கிறது. கிணற்றை ஆழப்படுத்த கடன் கேட்டால் அது மறுக்கப்படுவதால் இன்றையதினம் விவசாயம் செய்யப்படாமல் ஏராளமான நிலத்தைத் தரிசாக போட்டிருக்கிறார்கள். எவ் வளவோ செழிப்பாக இருந்த பயிர்கள் இன்றைக்கு அடுத்த மாநிலங்களின் அரிசியை கையேந்தி நிற்கும் நிலை ஏற்பட்டிருக் கிறது. ஒரு காலத்தில் நம் மாநிலம் வேறு மாநிலங்களுக்கு அரிசியை அனுப்பிக்கொண்டிருந்த நிலை இன்றைக்கு மாறி விட்டது. தமிழ்நாட்டில் பாடுபடும் விவசாயிகள் இருக்கிறார்கள். வளமான நிலம் இருக்கிறது. நிலத்தில் உழைக்கின்ற சக்தியும் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் அரசாங்கம்தான் விவசாயி களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய முன்வரவேண்டும்.

அடுத்து, கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தலை உடனடியாக நடத்த அரசு முன் வந்திருப்பதை நான் வரவேற்கிறேன். கூட்டுறவுச் சங்க கடன்களைப் பொருத்தவரையில் பல்வேறு இடங்களில் கடன் நிவாரணம் சரிவர கிடைக்காத நிலையும், பழைய பாக்கிகளைச் செலுத்த முடியாத நிலையும் இருப்பதால் தேர்தலில் அவர்களுக்கு ஓட்டுரிமை கிடைக்காமல் இருக்கக்கூடிய நிலை உள்ளது. கடன் பாக்கிகளை ரத்து செய்வதாக மாநில [illegible] மல்ல, வட்டி [illegible] தள்ளுபடி செய்யப்படவில்லை. ஆகவே

விவசாயிகளின் பிரதிநிதிகளையும், மற்றும் சம்பந்தப்பட்டவர்களையும் அழைத்துப் பேசி அவர்களுக்கு கடன் நிவாரணம் வழங்குவது சம்பந்தமாக சரியானதொரு ஏற்பாட்டினை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பல்வேறு கிராமங்களில் குடிதண்ணீர் கிடைக்காத நிலை இருக்கிறது. தமிழக விவசாய பெருங்குடி மக்களுக்கு தேவையான பருவமழை இந்த ஆண்டு சரியாக இல்லை. குறிப்பாக வடகிழக்குப் பருவ மழை சரியாக இல்லை. அதனால் விவசாயத்தைப் பொறுத்தவரையில் மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு பல்வேறு நிவாரண நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். குடிதண்ணீர் வசதி இல்லாத இடங்களில் எல்லாம் அதிகமாக நிதி ஒதுக்கி அவர்கள் குடி தண்ணீர் பெறுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அடுத்து, இங்கே இருக்கின்ற மாண்புமிகு சிவகாசி உறுப்பினர் கூறியதுபோல் சிவகாசி, சாத்தூர், கோவில்பட்டி போன்ற பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான ஏழையெளிய மக்கள் தீப்பெட்டி தொழிலை நம்பியிருக்கிறார்கள். அந்தத் தொழிலுக்கு இன்றைய தினம் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. தீப்பெட்டி தொழிலுக்கு அதிக வரி போட்டிருப்பதால் அதில் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதையும் அரசு பரிசீலிக்க வேண்டும். 'விம்கோ' போன்ற பெரிய தீப்பெட்டி தொழிலில் இருந்து சிறிய தீப்பெட்டி தொழில்களை அரசாங்கம் பாதுகாக்க, நிவாரணம் கொடுக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அந்த வகையில் 'விம்கோ' தீப்பெட்டி தொழிலுக்கு அதிகபடியாக வரி போடலாம். அந்த வகையில் சிறு தீப்பெட்டி தொழிலுக்கு பாதுகாப்பளிக்க வேண்டும்.

அடுத்து, விவசாய தொழிலாளர்களுக்குப் பல்வேறு விதமான ஊதியக் கமிஷன்கள் அமைக்கப்பட்டன. அவைகள் செய்த சிபாரிசுகள் எல்லாம் அரசிடம் இருக்கின்றன. அவற்றை உடனடியாக அரசு நடைமுறைப்படுத்த வேண்டும்.

**திரு. பெ. சீனிவாசன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு சிறிய விளக்கம் அளிக்க விரும்புகிறேன். ஏற்கெனவே ஒரு வரி விதிப்பில் விம்கோவுக்கு ஒரு வகையாகவும், 'A' Class Factory





களுக்கு ஒரு வகையாகவும், முழுக்க முழுக்க இந்தொழிலை குடிசைத் தொழிலாக கொண்டவைகளுக்கு ஒரு வகையாகவும் இருந்த அந்த வித்தியாசத்தை நீக்க வேண்டுமென்று விம்கோ கம்பெனி முயற்சி செய்கிறது. அந்த முயற்சியை மாண்புமிகு அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி செகதீசன் அவர்கள் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு அந்த வட்டார மக்களின் சார்பில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீண்டும் அந்த நிலையை (Status quo) maintain செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சரிடமிருந்து பதில் ஒன்றும் இல்லை.

அடுத்து, கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடக்கும் காலத்திலே அங்கேயிருக்கின்ற உறுப்பினர்களுக்கு கடன் பாக்கி இருந்தால் அவர்களும் தேர்தலில் பங்கு பெறும் வகையில் தகுந்த ஏற்பாடுகளை, சட்டத்தைத் திருத்துதல் போன்ற நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராம நிர்வாகத்தில் மாறுதல் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் என்ன மாறுதல் என்பதற்கான விளக்கம் தெளிவாக இல்லை. ஆகவேதான் இன்றைக்கு அது சம்பந்தமாக பல்வேறு சிக்கல்கள் அங்கே இருக்கின்றன. அதையும் சரியான முறையில் தீர்த்து, அந்த நிர்வாகம் செம்மையான முறையில் நடக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

அடுத்து, மது விலக்கு சம்பந்தமாக தெளிவில்லாமல் இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றைக்கு மது விலக்கா அல்லது மது இருக்கிறதா என்று சொல்ல முடியவில்லை. மது விலக்குச் சட்டம் இருந்தாலும், மது தாராளமாக எங்கும் கிடைக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும். ஆகவே மது சம்பந்தமாக என்ன கொள்கை என்பது தெரியவில்லை. உயர்ந்த மது எல்லாம் கிடைக்கிறது. கள் கிடைக்கவில்லை. மரம் ஏறும் தொழிலாளர்கள் எல்லாம் எங்களுக்கு மட்டும் இவ்வளவு கொடுமையா? வசதி படைத்தவர்கள் எல்லாம் 50 ரூபாய், 100 ரூபாய் கொடுத்து வாங்கிச் சாப்பிடுகிறார்கள், நாங்கள் சாப்பிட வேண்டுமென்றால் அதைத்தான் வாங்கிச் சாப்பிட வேண்டியிருக்கும்

கிறது என்று சொல்லுகிறார்கள். எனவே மதுவிலக்கா அல்லது மது விலக்கு இல்லையா என்பது குழப்பமாக இருக்கிறது. இதில் தெளிவானதொரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். எனவே, ஒன்று மதுவை அறவே நீக்க வேண்டும். அல்லது எல்லோரும் இஷ்டம்போல் செய்யுங்கள் என்று சொல்ல வேண்டும். அப்படியில்லாமல் இருப்பதால், இது ஊழலுக்கு ஊன்றுகோலாக, யார் யாரோ கொள்ளை அடிப்பதற்கு, அதிகாரிகள் ஊழல் செய்வதற்கு வழி வகுப்பதாக இருக்கிறது. அது சீராக இல்லை. இதற்கு வேண்டிய ஒரு சீரான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய அறிக்கையிலே மற்ற விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரையில் தொழிலில் ஐந்தாம் இடத்திலிருந்து 10 ஆம் இடத்திற்குப் போய் விட்டதாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இருக்கிற தொழில்களைத் திறந்து நடத்துவதோடு, புதிய தொழில்களையும் தொடங்க ஏற்பாடு செய்ய வேண்டும். மத்திய அரசினுடைய கொள்கையால் மாநில அரசினுடைய நிதி ஆதாரங்கள் குறைந்து கொண்டு போவது உண்மைதான், அதை நிதிக் குழுவிடம் வற்புறுத்தி, அதிகமான நிதி பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதற்கு நாங்களும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். (மணி அடிக்கப்பெற்றது) கடைசியாக முக்கியமான ஒன்று.

பினாமி நிலங்கள் சம்பந்தமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். கிராம மக்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டுமென்றால் நிலச் சீர் திருத்தச் சட்டத்தை, எந்தவிதமான விதி விலக்கும் இல்லாமல் அமுல்படுத்த வேண்டும். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் போட்ட சட்டம், அதற்குப் பின்னாலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் போட்ட உச்ச வரம்புச் சட்டம் ஆகியவற்றை விதி விலக்குகளை ரத்து செய்து, கராராக போட்ட சட்டங்களை அமுலாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக எல்லா கிராமங்களிலும் வறட்சி நிவாரணப் பணிகளைத் துவக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் முக்கியமான கோரிக்கை நீண்ட நாளாக இருக்கிறது. நல்ல தண்ணீர் இல்லாத கிராமங்களுக்கு, தாமிர





பரணியிலிருந்து தண்ணீர் கொண்டுவரும்போது, வழியில் இருக்கும் கிராமங்களுக்கு ஒவ்வொரு டேப் வேண்டுமென்று கேட்கிறார்கள். சில இடங்களில் போடப்பட்டிருக்கிறது. சில இடங்களில் மறுக்கப்பட்டிருக்கிறது. அந்த கிராமங்களின் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க அந்த ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய எட்டையாபுரத்தில் உள்ள பாரதி மில் ஏற்கெனவே ஐ.சி.டி.சி.க்கு காலாகாலத்தில் மனு அனுப்பாததால் கடன் கிடைக்காமல், அதிகமான வட்டிக்கு கடன் வாங்கி, அதிகமான பரிசுகளை வாங்கிய அந்த மில், இன்றைக்கு நஷ்டம் அடையக்கூடிய நிலையில் இருக்கிறது. அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது) ஒரே ஒரு கோரிக்கை. எங்கள் எட்டையாபுரத்தை மையமாகக் கொண்டு ஒரு தாலுக்கா அமைக்க வேண்டுமென்று சொன்னோம். ஏனென்றால், 2, 3 தாலுக்காக்களில் அதிகமான கிராமங்கள் இருக்கின்றன. பக்கத்திலுள்ள கோவில்பட்டியை ஒட்டியுள்ள கிராமங்களை சங்கரன் கோவிலோடு இணைத்திருப்பதால், இன்னொரு மாவட்டத்தில் சேருகின்றன. ஒரு பர்லாங்கிற்குள் உள்ள கிராமங்கள் பக்கத்து மாவட்டத்தில் சேர்வதால், அவர்களுடைய போக்குவரத்து வசதிகள், மற்ற வசதிகள் எல்லாம் பாதிக்கப்படுகின்றன. ஆகவே தாலுக்காக்களை சீரமைத்து, கோவில்பட்டியை ஒட்டியுள்ள கிராமங்களை கோவில்பட்டியுடன் இணைப்பதோடு எட்டையாபுரத்தை ஒரு புதிய தாலுக்காவாக ஆக்க வேண்டுமென்று இந்த அரசுக்கு கோரிக்கை வந்திருக்கிறது. அதையும் நிறைவேற்றி, நான் சொன்ன கருத்துக்களை எல்லாம் சரியானபடி செயல்படுத்தி, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

**திரு. எம். அப்துல் லத்தீப்:** மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். கணபதி அவர்கள் ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய உரைக்கு நன்றி தெரிவித்து முன்மொழிந்த தீர்மானத்திற்கு நான் ஆதரவு தெரிவித்து, ஒருசில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். தேர்தலுக்குப் பிறகு நடைபெறுகிற முதல் சட்டப் பேரவைக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் நாட்டின் இன்றைய நிர்வாகத்தில் ஏற்பட்டிருக்கிற சீர்கேடு

[திரு. சோ. அழகர்சாமி] [1989 பிப்ரவரி 16

களையும், தேக்கங்களையும், பொருளாதாரம் இன்றைக்கும் சந்தித்துக் கொண்டிருக்கிற சீர்கேடுகளையும் கருத்தில் கொண்டு, எந்த வகையில் இன்றைக்கு இருக்கிற நிதி நிலையை அடிப்படையாகக் கொண்டு, திட்டங்களை வகுத்து நிறைவேற்றினால் நம்முடைய நிதி நிலைக்கு ஏற்ப அது சாத்தியமாக இருக்கும் என்பதை முறைப்படுத்தி, இந்த அரசு வருகிற நிதி ஆண்டில் என்னென்ன திட்டங்களை நிறைவேற்ற இருக்கிறது, நிர்வாகத்தில் எப்படி செம்மையைச் சேர்க்க வேண்டுமென்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறது, தாழ்ந்துபட்ட தமிழகத்தினுடைய பொருளாதாரத்திற்கு ஏற்றம் எப்படி காணப்பட வேண்டுமென்பதற்காக முறைகளை எல்லாம் சீர் தூக்கிப் பார்த்து, கொள்கைகளை ஆளுநர் பெருமான் அவர்களுடைய பேருரையில் இடமளித்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

தமிழக மக்கள் ஒரு தெளிவான தீர்ப்பை இன்றைக்கு வழங்கியிருக்கிறார்கள். பண பலம், அதிகார பலம், எதேச்சாதிகாரப் போக்குகள்—இவைகளுக்கிடையேயும், எதிர்க் கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆளும் பொறுப்பில் அமர்த்தியதோடு மட்டுமல்லாமல், தி.மு.க தான் இன்றிருக்கிற சூழ்நிலையில், செம்மையான ஆட்சியை நாட்டுக்குத் தர முடியும். கலைஞர் முதலமைச்சராக ஏற்றம் பெற்றால்தான் நாட்டினுடைய நலிவுகள் நீங்கிப் பொலிவுகள் ஏற்படும் என்பதனை முழுமையாக உணர்ந்து, மிகத் தெளிவான தீர்ப்பை வழங்கியிருப்பதோடு, தி.மு.க. வுக்கு அறுதிப் பெரும்பான்மையை வழங்கி இருப்பது நமக்கு நிறைவை அளிக்கிறது. எனவே இந்த மன்றத்தின் வாயிலாகத்—தலைவர் அவர்களே, தங்களுடைய வாயிலாக—நான் தமிழக மக்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்தில் காணிக்கை ஆக்கிக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய தேர்தல் அறிக்கையிலே எவையெவைகள் நிறைவேற்றப்படும் என்று வாக்குறுதியை வழங்கியதோ அந்த வாக்குறுதிகளை, இவ்வளவு முனைப்போடு, விரைந்து செயல்படுத்தத் தொடங்கியிருப்பது, எல்லாத் தரப்பு மக்களாலும் இன்றைக்குப் பாராட்டப் படக்கூடிய ஒன்றாக இருக்கிறது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய தேர்தல் அறிக்கையிலே தான் ஆட்சிக்கு வந்தால், நகராட்சி நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தும் வகையிலே 3 மாநகராட்சிகளுக்கும் தேர்தல்கள் நடத்தப்படும்



1989 பிப்ரவரி 16] [திரு. எம். அப்துல் லத்தீப்]

என்று குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே, ஆட்சிப் பொறுப்பை ஏற்ற அடுத்த நிமிஷத்திலேயே 3 மாநகராட்சிகளுக்கும் தேர்தல் நடத்துவோம் என்று அறிவிப்பு செய்திருப்பதோடு மட்டுமல்லாமல், அதற்கான சட்ட முன்வடிவையும் இந்த அவையிலே அறிமுகம் செய்து அது முறையாக விவாதிக்கப்பட இருக்கிறது என்பதையும் நாம் அறிவோம். அடுத்து உள்ளாட்சி அமைப்புகளுடைய ஆயுட் காலத்தை எத்தகைய தயக்கமும் இன்றி, கடந்த காலத்தில் இருந்ததைப் போலவே, மீண்டும் 5 ஆண்டுகளாக உயர்த்த இருப்பதாக அரசு சொல்லியிருப்பது வரவேற்கக் கூடிய ஒன்று. எனவே அதனை நான் வரவேற்கிறேன்.

கடந்த 65—70 ஆண்டுகளாக இந்தியாவினுடைய சட்டமன்றங்களிலேயே மிகவும் பாரம்பரியமான இடத்தைப் பெற்றிருந்த—மிகச் சிறப்புக்குரிய இடத்தைப் பெற்றிருந்த—மா மேதைகள் அமர்ந்து நாட்டுக்குத் தேவையான நல்ல திட்டங்களை வகுத்துக் கொடுத்து, அரசியலில் ஒரு ஆரோக்கியமான நிலைமை நிலவ வேண்டுமென்பதற்காக ஆலோசனைகள் சொல்லி, தமிழக சட்டமன்றத்தினுடைய தன்மையை இந்திய பூபாகத்திலேயே உயர்த்திக் காட்டிய தமிழக சட்டமன்ற மேலவையை, என்ன காரணத்தாலோ கடந்த காலத்தில் ஆண்டவர்கள் ஒழித்தார்கள். எனவே இன்றைக்கு தமிழக சட்டமன்றத்தினுடைய இரண்டாவது அங்கமாக—இங்கே இந்த அவையில் வேகம் இருந்தாலும், விவேகம நிலவுகிற—விவேகமாக, நிதானமாக — பெருநோக்கோடு — பொது நோக்கோடு சிந்தித்துச் செயல்படுத்தும் தன்மையுடைய மேலவையை மீண்டும் உயிர்ப்பிப்பது தமிழக சட்ட மன்றத்திற்கு ஒரு அங்கம் இல்லாமல் இருப்பது என்பதை நீக்கி, அதனை மீண்டும் கொண்டு வருவோம் என்று இந்த அரசு அறிவித்த அறிவிப்பு—மேலவை மீண்டும் உயிர்ப்பிக்கப்படும், ஏற் படுத்தப்படும், அதற்கான முறையான சட்ட மன்றத் தீர்மானம் விரைவில் இடம் பெறும் என்று அறிவித்திருப்பது மனதார வர

(முற்பகல் 11-50)

வேற்கத் தக்கதாகும். அதுமட்டுமல்லாமல், தேர்தல் அறிக்கையில் குறிப்பிடாத பல நல்ல திட்டங்களை அரசு தானாக முன்வந்து ஏற்று, அதற்கான முறையான அறிவிப்பைத் தந்திருப்பது வரவேற்கக்கூடிய ஒன்று. உதாரணமாக, பல்கலைக் கழக மானியக் குழுவின் சிபாரிசின்படி ஆசிரியர்கள் சம்பள விகிதங்கள் நிர்ணயிக்க வேண்டுமென்ற அவர்களின் நீண்டநாள் கோரிக்கையை, இந்த அவை கூடுவதற்கு முன்பே, எத்தகைய ஒரு

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1989 பிப்ரவரி 16

கோரிக்கையையும் புதியதாக பொறுப்பேற்றுக்கொண்ட ஆட்சியாளர்களிடம் உரியவர்கள் எடுத்துச்சொல்வதற்கு முன்பே, அரசு பல்கலைக் கழக மானிய சம்பள விகிதங்களை ஆசிரியர்களுக்கு வழங்குவோம் என்று அறிவித்திருப்பதை ஆசிரியர்கள் சமுதாயம் இன்றைக்கு மனநிறைவோடு மட்டுமல்லாமல், நன்றியோடு வரவேற்கிறது. டாக்டர் கலைஞர் அவர்களைப் பாராட்டுகிறது. முதலமைச்சர் அவர்கள் கல்வித் துறையில் அமைதி இருக்க வேண்டும், இல்லாமை, இயலாமையைப் போக்குவோம் என்று சொல்கிற அரசு, கல்லாமையைப் போக்குகிற ஆசிரியர்களாக இருக்கக் கூடியவர்கள் மன அமைதியோடு, நிறைவோடு அவர்கள் வகுப்பறைகளுக்குச் சென்றால்தான் முறையாக பாடங்கள் நடக்கும்; ஆசிரியர்களுக்கு ஏற்படுகின்ற நிறைவு இந்தக் காலத்திற்கு ஏற்படுகிற நிறைவு மட்டுமல்ல, அது வருங்கால சந்ததியினர்களுக்கு ஏற்படுகிற நிறைவு என்பதை கருத்தில் கொண்டு, தானாக முன்வந்து இத்தகைய நல்ல அறிவிப்பை அறிவித்திருப்பதை நான் மனதார பாராட்டுகிறேன். இந்த அறிவிப்பை வரவேற்கிறேன்.

பிற்பட்டோர் நலம் காக்க இந்த அரசு தங்களை அர்பணித்துக் கொண்ட அரசு என்பதை நாடு நன்றாக அறிந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் எந்தப் பாரம்பர்யத்திற்குச் சொந்தம் கொண்டாடுகிறதோ, அந்தப் பாரம்பர்யத்தை உருவாக்கிய மூலவர்கள், திராவிடப் பாரம்பர்யத்தை உருவாக்கிய வித்தகர்கள், பிற்பட்டோர், ஆண்டாண்டு காலமாக அடக்கப்பட்டோர், சமுதாயத்தில் ஏற்பட்டுவிட்ட சில சூழ்நிலைகளின் காரணமாக பொருளாதாரத்தில், கல்வித் துறையில், சமுதாய ரீதியில் பிற்பட்ட மக்கள், அவர்களை உயர்த்துவது இன்றைக்கு நியாயத்தின்பாற்பட்டதாகும், நீதியின்பாற்பட்டதாகும், நாடு இன்றைக்கு ஏற்றிருக்கிற சமூக நீதியின்பாற்பட்டதாகும் என்ற அடிப்படையில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நேற்றைக்கு முன்தினம் சட்டமன்றத்தில், இந்த மாத இறுதிக்குள் இந்த முக்கியமான பிரச்சினை குறித்து அரசு தெளிவான முடிவெடுக்கும் என்று அறிவித்து இருப்பதை நான் மிகுந்த மனநிறைவோடு வரவேற்கிறேன். அதே நேரத்தில், இப்படி ஆய்வு செய்யும்போது மக்களுடைய எண்ணங்கள் மட்டுமல்ல, எண்ணிக்கைகளும் கருத்தில் கொள்ளப்படும் என்று நான் திடமாக நம்புகிறேன். யார், எவர் என்றெல்லாம் பாராமல் எண்ணிக்கையில் அதற்கு தீர்ப்புகள் வழங்கப்பட வேண்டும், நியாயம் வழங்கப்பட வேண்டுமென்ற காலக்கட்டத்தில் நாம் வாழ்கிறோம். ஏனவே சமுதாயத்தில் நாம்



1989 பிப்ரவரி 16] [திரு. எம். அப்துல் லத்தீப்]

விரும்பாவிட்டாலும் பல்வேறு பிரிவுகளாக இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கிற அமைப்பில் வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களை அவர்களின் எண்ணங்களின் அடிப்படையில் ஒதுக்குவதும், உதாசீனப்படுத்துவதும் கூடாது. அதே நேரத்தில் நியாயங்கள் வழங்கப்படும்போது எண்ணங்களையும் எண்ணிக்கைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். அப்படி கருத்தில் கொள்ளும்போது அரசு யதார்த்த நிலையை கருத்தில் கொண்டுதான் ஒரு முடிவை எடுக்க வேண்டும். சட்டம், சட்ட மரபுகள் நாட்டிலே இன்றைக்கு பொதுவாக பல்வேறு மக்களிடையே இருக்கிற எண்ணங்கள் இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டு அரசு ஒரு முடிவு எடுக்க முடியும் என்பதை நாங்கள் நன்றாக உணர்ந்திருக்கிறோம். எனவே பிற்பட்ட மக்களுடைய ஒரே குரலாக, அவர்களுடைய அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக இருக்கிற நம்முடைய இன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த விஷயத்தில் நிச்சயமாக நியாயம் செய்வார்கள் என்பதில் எங்களுக்கு கிஞ்சித்தும் ஐயப்பாடு இல்லை. எனவே மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய இந்த அறிவிப்பை நான் மிக மகிழ்ச்சியோடு வரவேற்று, அவர்களைப் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இன்றைக்கு மாநகராட்சி மன்றத்தினுடைய தேர்தல்களை, அரசு ஏற்கனவே ஆளுநர் பெருமானுடைய உரையிலே ஏப்ரல் மாதத்தில் நடத்தும் என்று அறிவித்து இருந்தும், பல்வேறு தரப்பட்ட மக்கள், சிறுபான்மையான இஸ்லாமிய சமுதாயத்திற்கு ரமலான் மாதம் வருகின்ற காரணத்தால், அது சிரமத்தை ஏற்படுத்தும் என்று எடுத்துச் சொல்லியவுடன், உடனடியாக அரசு, மாண்புமிகு கலைஞர் அவர்கள், அவர்களுடைய பதில் உரையில் அதைச் சொல்ல வேண்டும் என்று கூட அவர் முடிவு எடுத்திருக்கலாம். ஆனால் பதில் உரை வரையில் காத்திருக்காமல், உடனடியாக தேர்தல் தேதியை ஒத்தி வைக்கும் என்று அறிவித்தாரே, அதைத்தான் நான், அவருடைய உளப்பக்குவத்தை, அவருடைய பெருநோக்கை, அவருடைய பொது நோக்கை யார் சொல்கிறார்கள் என்பதை எல்லாம் கவனிக்காமல் எதைச் சொல்கிறார்கள், எதற்காகச் சொல்கிறார்கள் என்பதை மட்டும் சிந்தித்து ஒரு பொது நோக்கோடு செயல்படுகிற ஒரு மகத்தான தன்மை இருக்கிறதே, அதைத்தான் நான் பெரிதும் பாராட்டுகிறேன். அதைத்தான் எல்லாத் தரப்பு மக்களும், சிறுபான்மை மக்கள் மட்டுமல்ல, பெரும்பான்மை மக்களுக்கும், இன்றைக்கு நாட்டில் பொது நோக்கோடு, பெருநோக்கோடு செயல்படுகிற ஒரு பெருமகன்

எல்லா மக்களுக்கும் நிறைவை ஏற்படுத்தக்கூடிய வகையில், முனைந்து செயல்படக் கூடிய வகையில், தேக்கம் என்பது நிர்வாகத்தில் கூடாது என்பதிலே அக்கறை கொண்டு முனைந்து, செயல்படுவதிலே ஒரு இலக்கணத்தை வகுத்துக்கொண்டு இருக்கிற இந்தியாவிலே ஒரு சிறந்த நிர்வாகி என்ற பெயரைப் பெற்றிருக்கிற டாக்டர் கலைஞர் அவர்கள் உடனடியாக இந்த அறிவிப்பைச் செய்து இருப்பதை நான் எல்லாத் தரப்பு மக்களின் சார்பாகவும், குறிப்பாக சிறுபான்மை சமுதாயத்தின் சார்பாகவும் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இந்தக் குறிப்பில் மாவட்டங்களைப் பற்றி குறிப்பிடப்பட்டு இருக்கிறது. எனவே மாவட்டங்களைப் பற்றிப் பேசுகிறபோது, சமுதாயத்தில் எல்லாத் தரப்பு மக்களுடைய உணர்வுகளுக்கும் மதிப்பு தரும் வகையில் இந்த மாநிலத்தில் சில மாவட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. தெய்வத் திருமகன் என்று பாராட்டப்படுகிற முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய பெயரிலும், நம் அனைவராலும் பெருந்தலைவர் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற பெருமதிப்பிற்குரிய அமரர் காமராஜர் அவர்களுடைய பெயரிலும் இன்றைக்கு மாவட்டங்கள் ஏற்படுத்தப் பட்டு இருக்கின்றன. அண்ணா அவர்களுடைய பெயரில் மாவட்டத்தை ஏற்படுத்துவது அந்த ஆட்சியினுடைய கடமை. அதை அவர்கள் செய்திருக்கிறார்கள். அதே நேரத்தில் கடந்த காலத்தில் ஆண்டவர்கள் பெருநோக்கோடு இந்த நாட்டிலே அரசியலுக்கு கண்ணியத்தை ஏற்படுத்தி, அரசியல்வாதியாக இருந்தாலும், அரசியலிலே கூட அறத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்பட முடியும் என்பதை நிலைநாட்டி, அனைத்து மக்களாலும் இன்றைக்கு கண்ணியத்திற்குரிய ஒரு தலைவர் என்று பாராட்டப்படுகிற காயிதே மில்லத் அவர்களுடைய பெயரால் ஒரு மாவட்டம் அமைக்கப்படும் என்று ஏற்கனவே இந்த அரசு அறிவித்திருக்கிறது. அது குறிப்பில் இருக்கிறது. எனவே விருப்பு வெறுப்பின்றி, ஆட்சி எடுத்த முடிவை டாக்டர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. நாங்கள் இதைக் கோரிக்கையாக வைப்பதற்குக் கூட விரும்பவில்லை. ஏன் என்றால், கோரிக்கையாக வைத்தால் கூட இந்த அரசுக்கு அப்படி ஒரு எண்ணம் இல்லையோ, இதை நாங்கள் ஒரு கோரிக்கையாக வைத்து, ஏற்படுத்தவேண்டும் என்ற பொரு





ளாகும், ஆனால் இந்த ஆட்சி எல்லாத் தரப்பு மக்களுக்கும் நியாயமான ஒரு அணுகுமுறையை வைத்துக்கொண்டிருக்கிறது என்பதை நாங்கள் உணர்ந்தவர்கள் என்ற காரணத்தால்தான் டாக்டர் கலைஞர் அவர்களிடத்திலே அமைச்சரவையிடத்திலே நான் அவர்களுக்கு என்னுடைய விண்ணப்பமாக வைத்துக் கொள்வது, முன்கூட்டியே நன்றி தெரிவித்துக்கொள்வது 'thanks in anticipation' என்று சொல்வார்கள். அப்படி நாங்கள் முன் கூட்டியே டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். எனவே அருள்கூர்ந்து காயிதே மில்லத் அவர்கள் பெயரில் ஒரு மாவட்டத்தை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

அதே நேரத்தில் இன்றைக்கு மாநகராட்சி மன்றங்களுடைய நிதிநிலை எவ்வளவு அபாயகரமான நிலையை எட்டிக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு கலைஞர் அவர்களும், மாண்புமிகு பேராசிரியர் அவர்களும் கூட நன்றாக அறிவார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

சென்னை நகரம் இன்றைக்கு எவ்வளவு பாழ்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நாங்கள் எல்லோரும் இன்றைக்கு உணர்ந் தவர்களாக இருக்கிறோம். சென்னை நகராட்சியினுடைய ராஜ பாட்டைகளிலே செல்பவர்களுக்குத் தெரியாது. சென்னை நகரம் எவ்வளவு அலைக்கழிக்கப்பட்டிருக்கிறது என்பதை அவர் கள் உணர மாட்டார்கள். ஆனால் நாங்கள் எல்லாம் சென்னை நகர மக்களுடைய பிரதிநிதிகள் என்ற முறையில் சென்னை நகர சந்து பொந்துகளில், அவற்றின் வீதிகளில் எல்லாம் செல்லும் போது, எவ்வளவு தூரம் சென்னை நகரம் பாழ்படுத்தப்பட்டிருக் கிறது என்பதை உணர்ந்து மெத்த வேதனையடைகிறோம்.

உண்மையில் சொல்லப்போனால், நாங்கள் மக்களைச் சந்திப்பதற்கு இன்றைக்கு அஞ்சக் கூடிய நிலையில், தெரு வீதிகளில் விளக்குகள் எரியவில்லை. மலை போல் குப்பைகள், காவிரியைப் போல் ஓடுகிற சாக்கடை நீர், இவைகள் எல்லாம் சென்னை நகரத்தினுடைய தற்போதைய நிலையாக இருக்கிறது. (குறுக்கீடு) காவிரி நல்ல தண்ணீர் என்று நம்முடைய திட்சிதர் சொல்கிறார்கள். நான் காவிரியினுடைய புனிதத் தன்மையைச் சொல்லவில்லை. காவிரி புனிதமானது. காவிரியின் ஓட்டத்தைத்

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1989 பிப்ரவரி 16

நான் இத்தோடு சொன்னேனே தவிர காவிரியினுடைய புனிதத் தன்மையைச் சொல்லவில்லை என்பதை நம்முடைய தீட்சிதர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே இந்த நிலைமைகளை எல்லாம் மற்றவர்களுக்குச் சொன்னால், மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கமுடியும்.

நான் இன்னொன்றையும் சொல்லிக்கொள்கிறேன். உரிய அதிகாரிகளிடம் நான் பேசிப் பார்த்தேன். அவர்கள் சொல்கிறார்கள் கடந்த 10 ஆண்டுகளாக மாநகராட்சிக்குக் கிடைக்கக் கூடிய, அதுவும் குறிப்பாக சென்னை மாநகராட்சிக்குக் கிடைக்க வேண்டிய அரசு மானியங்கள் முறையாக வழங்கப்படவில்லை என்று அவர்கள் குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் இந்த அவையில் மானியக் கோரிக்கைகளின் வாயிலாக இங்கே ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் எங்கே சென்றது? ஏன் அவர்களுக்கு அந்த மானியங்கள் வழங்கப்படவில்லை? ஏதாவது (Diversion) என்று சொல்லக் கூடிய நிலையிலே நிதியை மாற்றுத் திட்டங்களுக்குப் பயன்படுத்தினார்களா? அப்படிப் பயன்படுத்தினார்கள் என்று சொன்னால், அது மிகப் பெரிய நிதி ஒழுங்கீனம் ஆகிறது.

It is a financial indiscipline that cannot be condoned without taking sanction from this House. Those funds have been specifically allotted for the various developmental schemes to be implemented by the local bodies. How were they diverted ? It is for the Government to find out and also to take such appropriate action as is desirable and essential.

இதை நான் இங்கே வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். கடந்த 10 ஆண்டுகளாக மாநகராட்சி மன்றத்திற்கு முறையாக மானியங்கள் வழங்கப்படவில்லை என்று சொன்னால்: அந்த மானியங்கள் எந்தெந்த மானியக் கோரிக்கைகளின் வாயிலாக, எவ்வளவு மானியங்களை நம்முடைய உள்ளாட்சிகளுக்கு இந்த அவை வழங்கியது? அப்படி வழங்கியிருக்கின்ற அந்தப் பணம் ஏன் அவைகளுக்கு மானியமாக வழங்கப்படவில்லை என்பதை அரசு ஆய்வு செய்து உரிய முறையில் நடவடிக்கை எடுத்து, இனி



1939 பிப்ரவரி 16] [திரு. எம். அப்துல் லத்தீப்]

மேலாவது செய்யப்படுகின்ற மானியங்களை (Divert) செய்வதற்கு அதிகாரிகள் தாங்களே அதிகாரங்களை எடுத்துக்கொண்டு முடிவுகளை எடுக்காதவண்ணம் நீங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

அதே நேரத்தில் இங்கே மத்திய மாநில அரசுகளுடைய அதிகாரங்களைக் குறித்து பிரச்சினை வந்தது. மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்பது எதேச்சதிகாரமாக செயல்படுவதற்கு அல்ல. யதார்த்த நிலையில், ஒரு மாநிலத்தில் அதனுடைய அதிகாரங்களை முறையாகப் பயன்படுத்தினால்தான் அந்த ஆட்சியாளர்கள் மக்கள் எதிர்பார்க்கிற திட்டங்களை நிறைவேற்றமுடியும், செயல்படுத்தமுடியும். இல்லையெனில், ஏதோ சொன்னார்களே,

It is a glorified Municipality. The State Governments are something like glorified Municipalities. There is this tendency in the part of the Government of India to treat these State Governments as glorified Municipalities. This tenlency should be curbed and we should use all our might to fight for the rights that have been accorded to this House by the Constitution and not by the Central Government. The Central Government also gets its powers only from the Constitution and we also get the powers from the Constituton. If the Central Government develops a tendency to interfere with and curb the rights and powers of the State Government, we should take the matter up with the Central Government and say them "You get the powers from the Constitution and you try to curb the Constitutional authority of the State Government and the authority of the State Legislature." Shall we then say "Get out". We must aay that the Central Government should get out. They should mend themselves. Otherwise not only this House but all the Legislative Assemblies elected by the people directly should make a warning that is incumbent under the present circumstances.

என்ற முறையிலே இன்றைக்கு நாம் பார்க்க வேண்டும் நம்முடைய மரியாதைக்குரிய உறுப்பினர் அருமை நண்பர் பாண்டியன் அவர்கள் கூட சொன்னார்கள். ஏதோ மாநில அரசுகளுக்கு அதிகாரங்கள் இன்றைக்கு இருக்கின்றன என்ற பெயரிலே தான் சொல்லப்படுகிறதே தவிர, மாநில அரசுகளுக்கு உண்மையான அதிகாரம் எதிர்காலத்தில் முறையாகப் பெறுவதற்கு—

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1989 பிப்ரவரி 16

Unitary, not unitary completely ; it is somehow or other quasi-federal set-up in our Constitution. It is quasi-federal. But, still, there are the State List, Concurrent List and Central List. The Central Government has no option, has no discretion whatsoever and they should be told in clear terms that you are duty-bound constitutionally ; it is your obligation to give such powers and authority to the State Governments as are contemplated by the Constitution of India.

என்பதை இன்றைக்கு அதிகாரத்தில் இருக்கக் கூடியவர்கள் அவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு உணர்த்திக் காட்டுவது நம்முடைய கடமை என்பதை ஆட்சியாளர்களுக்கு மட்டும் அல்ல இந்த அவைக்கே அந்தக் கடமை இருக்கிறது என்பதை நாம் மறந்து விடக் கூடாது. இந்த அவையிலே இருக்கக் கூடிய உறுப்பினர்கள் அனைவரும் இதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம் என்பதைத்தான் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று நான் மிகுந்த வேதனையோடு சொல்வது இன்றைக்கு கலெக்டர்களையெல்லாம் அழைத்து நேரிடையாக பிரதமர் அவர்களே மாநாடு நடத்துகிற ஒரு நிலைமை நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது.

What I would like to know from the highest authority, the Constitutional authority as it is termed, under what authority, the Central Government could directly summon the Collectors in the various States and hold conferences.

கலெக்டர்கள் என்பவர்கள் மாநில அரசுக்குக் கட்டுப்பட்ட அதிகாரிகள்.

Even though they belong to the All-India Services still they are the employees of the State Government. Their responsibility is directly towards the State Government. However high a person may be, whether he is the Prime Minister or the Home Minister, whoever he may be—he has no Constitutional authority to summon the Collectors of the Districts and hold discussions by-passing the State Government. This is a matter which should be taken cognisance of. I would like to draw the attention of the Hon. the Chief Minister to this.

இன்னொரு பிரச்சினை நான் சொல்ல விரும்புவது. Oft-repeated. எனக்கு இந்த நாட்டிலே ப்ரீடம் ஆப் மூவ்மெண்ட் இருக்கிறது. எனக்கும் இருக்கிறது. எல்லோருக்கும் இருக்கிறது. பிரதமர் அவர்களுக்கும் இருக்கிறது. அவர் எந்த மாநிலத்திற்கு வேண்டு



1989 பிப்ரவரி 16] [திரு. எம். அப்துல் லத்தீப்]

மானாலும் செல்லலாம், எப்போது வேண்டுமானாலும் செல்லலாம். ஆனால் 13 தடவை ஒரு மாநிலத்திற்கு வந்தது, அரசியல் பிரச்சாரங்களிலே ஈடுபட்டது, அரசியல் பிரச்சாரங்களிலே ஈடுபட்டபோது கூட அரசு கஜானாவிலேயிருந்து அவருடைய பாதுகாப்பு என்ற பெயராலே அவருக்கு செக்யூரிட்டி தர வேண்டும் என்று அரசு கஜானாவிலேயிருந்து,

for all political sojourns. It is not administrative visit. It is not an official visit. For all practical purposes, they are all political visits, made to further the cause of the party to which he belongs. How can the finances of the State be defrayed on those visits ? I would like to know this. This House is entitled to know—under what authority the finances of the State were defrayed for the various visits of the Hon. the Prime Minister, and that too, without any official commitment, without any official business, but only to address public meetings.

(பிற்பகல் 12-10)

நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, பிரதமர் அவர்கள் தமிழகத்திற்கு வந்தார்களே, எத்தனை தடவை வந்தார்கள். அரசு கஜானாவிலேயிருந்து அதற்காக எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க கூடிய கடமை நம்முடைய அரசுக்கு உண்டு என்று தெரிவித்துக் கொள்கிறேன். அது ஒரு வேண்டுகோள் மட்டும் அல்ல,

This is my demand. As a Member of this House, I feel that this Government is duty-bound to provide us with all the details and also the information about the total expenditure incurred therefor, namely, for the visits of the Prime Minister. What is the amount which was drawn from the Consolidated Fund of India ? Under what authority, the Consolidated Fund of India was utilised for the purposes of the visits of the Prime Minister. This is my pointed question to the Hon. the Chief Minister, who happens to be holding the Finance portfolio also. I hope the Government will take due cognisance of this demand.

இல்லையெனில் அவர் சார்ந்துள்ள கட்சி அதற்கு செலவழித்திருந்தால் எனக்கு ஆட்சேபணை இல்லை. அப்படி ஆட்சேபணை செய்வதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை. காங்கிரஸ் கட்சி அவருடைய விஜயங்களுக்காக பணம் செலவழித்திருந்தால் நான் அதை வரவேற்கிறேன். அவர் 13 தடவை அல்ல 130 தடவை வந்தாலும் அதை ஆட்சேபனை செய்வதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை. எனவே. . . .

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, காங்கிரஸ் கட்சி எதெதற்குச் செலவு செய்ய வேண்டுமோ அதற்கு செலவு செய்திருக்கிறது. பாரதப் பிரதமர், எந்த வகையில், எவையெவைகளுக்கு உரிமை உடையவரோ அந்த வகையில், அந்த உரிமையினைப் பெற்றிருக்கிறார்கள். மற்ற வகையிலே நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நமது முதலமைச்சரை விளக்கங்கள் கேட்டிருக்கிறார். அவை முதலமைச்சரைப் பொறுத்தது.

**திரு. எம். அப்துல லத்தீப்:** தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி அவருடைய விஜயங்களின் போது முறையாக எந்த எந்த வகைக்குச் செலவழிக்க வேண்டுமோ அந்தந்த வகைக்குச் செலவழித்திருப்பதாக அவர் கூறுகிறார். அதைத்தான் இந்த அவை தெரிந்துகொள்ள விரும்புகிறது. ஏனெனில் . . .

**திரு. குமரி அனந்தன்:** சபாநாயகர் அவர்களே, காங்கிரஸ் பேரியக்கம் எதெதற்குத் தேவைப்பட்டதோ அது அதற்கு செலவு செய்திருக்கிறது என்று சொன்னால், அந்தக் கணக்குகளையெல்லாம் மரியாதைக்குரிய உறுப்பினர்களுக்குக் கொடுக்கின்ற வகையிலே, கொடுக்க வேண்டிய தேவையிலே நாங்கள் இல்லை. அந்த வரம்பை மீறியதாக, விதிகளுக்கு மீறியதாக ஏதாவது இருந்தால் தான் நாங்கள் அதற்கு கடப்பாடுற்றவர்களாக இருக்கிறோம். எனவே, எங்கள் கணக்குகளைக் கேட்பதற்கு மாண்புமிகு அப்துல் சமத் இங்கே உரிமை பெற்றவர் என்று நான் கருதவில்லை. (குறுக்கீடு) அவர் கட்சியிலேயும், இங்கேயும் ஒரு அப்துல் சமத் இருக்கிறார், அவர் உட்பட.

**திரு. உ. ரா. வரதராசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஒழுங்குப்பிரச்சினை. காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் பாரதப் பிரதமர் 13 முறை விஜயம் செய்த போது எந்த விஜயத்திற்காவது காங்கிரஸ் கட்சி அவருடைய செலவுகளுக்குப் பொறுப்பேற்றுக்கொண்டதா என்பதைத் தெரிவித்தால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது ஒழுங்குப் பிரச்சினைக்கு உட்பட்டது அன்று. விவாதம் தொடரும்.



**திரு. எம். அப்துல் லத்தீப்:** தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் அருள் கூர்ந்து ஒரு விளக்கத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியை கணக்கு கேட்க எனக்கு உரிமை இல்லை என்று சொல்கிறார்கள். காங்கிரஸ் கட்சியினுடைய கணக்கை நான் கேட்க மாட்டேன். அந்தக் கணக்கைத் தீர்க்கக் கூடிய வேலை என்னுடைய வேலையும் அல்ல, அது மக்களுடைய வேலை என்பதை நான் மிகுந்த மரியாதையோடு அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே நான் . . .

**திரு. குமரி அனந்தன்:** தலைவர் அவர்களே, யாருடைய கணக்கு எந்த நேரத்தில் தீர்க்கப்பட வேண்டும் என்பது மக்கள் கையிலே இருக்கிறது என்பதை நாங்கள் உணர்கிறோம். சில நேரத்திலே சிலர், சிலர் போட்ட கணக்கால், சற்று மேம்பட்டு வந்துவிட்டால் அது நிரந்தரம் என்று எண்ணவேண்டியதில்லை. காங்கிரஸ் மேலாக வரும்.

**திரு. எம். அப்துல் லத்தீப்:** தலைவர் அவர்களே, நாம் அரசியலில் வருகின்ற மாறுதலை நிரந்தரம் என்று கருதுபவர்கள் அல்ல. மாறுதலை வைத்துக்கொண்டு தான் நிரந்தரம் என்று கருதக் கூடியவர்கள் மாறி, மாறி நடந்துகொள்வார்கள். அப்படி மாறி, மாறி நடந்துகொள்கின்ற காரணத்தாலே தான் சில சூழ்நிலைகள் நாட்டிலே உருவாகின்றன என்பதையும் என்னை விட காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் நன்றாக அறிந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. குமரி அனந்தன்:** சபாநாயகர் அவர்களே, நாங்கள் இருக்கிற இடத்திலெல்லாம் மாரியாக நடந்து கொண்டிருக்கிறோமே தவிர மாறி, மாறி நடந்துகொள்ளவில்லை.

**திரு. எம். அப்துல் லத்தீப்:** ஆம், 'மாரி' யாகத்தான் நீங்கள் நடந்திருக்கிறீர்கள். ஆனால் தமிழகத்தில் இப்போது சொல்லப்படுவதெல்லாம் 'மாரி' பொய்த்துவிடுகிறது— அடிக்கடி பொய்த்துவிடுகிறது என்பதுதான். எனவே தமிழகத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற அவலமே . . .

**திரு. குமரி அனந்தன்:** சபாநாயகர் அவர்களே, 'மாரி' பொய்த்ததென்றால் மக்கள் வாழ முடியாது. எனவே, ஒரு தடவை பொய்த்தாலும், மீண்டும் 'மாரி' பொய்க்காமல் இருக்க வேண்டும். அது வரவேண்டும் என்று மக்கள் விரும்புவதைப் போலவே நாங்கள் வரவேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள்.

[1989 பிப்ரவரி 16

திரு. உ. ரா வரதராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் இடையிலே ஒரு கேள்வி கேட்டபோது நீங்கள் அது ஒழுங்குப் பிரச்சனைக்குட்பட்டது அல்ல என்று தெரிவித்தீர்கள். இந்தப் பேரவை விதி எண் 94-ன் கீழே விளக்கம் பெறுவதற்காக, எந்த ஒரு உறுப்பினரும், வேறு ஒரு உறுப்பினரிடத்திலே பேரவைத் தலைவர் மூலமாக வினாவினைக் கேட்கலாம் என்று இருக்கிறது. அதன்படி தான் பிரதமருடைய விஜயத்திற்காக—13 விஜயங்களிலே இந்த காங்கிரஸ் கட்சி என்ன செலவு செய்தது என்பதை காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் விளக்க வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விளக்கம் கேட்பதையெல்லாம் நாங்கள் ஏற்றுக்கொள்வோம். இந்த அவைக்கு தொடர்பான, பொருத்தமானதை மட்டும்தான் கேட்கலாமே தவிர, காங்கிரஸ் கட்சி செலவழித்ததிலே விளக்கங்கள் கேட்பதற்கு எந்த ஒழுங்குப் பிரச்சினையும் இடம் கொடுக்கவில்லை. விதியை மீண்டும் ஒரு முறை தெளிவாகப் படித்துப் பார்க்கவும்.

திரு. உ ரா. வரதராசன் : அவையில் எழுப்பப்பட்ட காரணத்தினால் நான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்தக் கட்சித் தொடர்பாகக் கேட்பதற்கு நமக்கு எந்த உரிமையும் இல்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே. மீண்டும், மீண்டும் இந்த அவையிலே பாரதப் பிரதமர் 13 முறை இங்கே வந்துவிட்டுப் போனதாகச் சொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலே மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. 'ஏழு முறை தமிழ்நாட்டிற்கு வந்து சென்ற பிரதமரை' என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லியிருப்பதே அதிகம் உள்ளபடியே ஏழு முறை அதுவரைக்கும் வரவில்லை. அவர் ஐந்து முறை தான் வந்திருந்தார். எனவே, 13 முறை. . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தேர்தல் அறிக்கை வெளியிடும்போது ஏழாவது முறை. அதற்குப் பிறகு ஆறு முறை. (மேசையைத் தட்டும் ஒலி).



1989 பிப்ரவரி 16]

திரு. எம். அப்துல் லத்தீப் : நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்கிறேன். ஏனென்றால், மாரி பொய்த்துவிட்டால் மக்கள் மீண்டும் மாரி பொழியவேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். அவர்களுடைய எதிர்பார்ப்புதான் இப்போது தமிழகத்திலே நிறைவேறியிருக்கிறது, என்பதை அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அவர்கள் பொய்த்து விட்டார்கள். அதனால் தமிழகம் உதயசூரியனை எதிர்பார்த்து, உதயசூரியன் உதயமானதை—மாரி பொழிய வேண்டுமானால், கதிரவன் உதிக்க வேண்டும், அவனுடைய வெம்மை நாட்டுக்குத் தேவை. அதனாலேதான் மாரியே பொழிகிறது என்ற காரணத்தினால் உதயசூரியனை எதிர்பார்த்த மக்கள் இன்றைக்குப் புதிய மாரியை, ஏற்கனவே இருந்த மாரியைப் பெற்றிருக்கிறார்கள், என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் எனக்கு உதவியாகத்தான் இருந்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கை எழுதப்பட்டபோது, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் 7 தடவைதான் வந்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு குறுகிய காலத்தில் வாரத்திற்கு ஒரு முறை என்று ஆறு தடவை வந்தார்கள் என்பதைத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் இந்தப் பிரச்சினையிலே என்ன கருதுகிறது என்பது வேறு விஷயம். அது அவர்களைக் கேட்க வேண்டும். நான் கேட்க விரும்புவது, என்னுடைய சார்பாக, முஸ்லீம் லீக்கின் சார்பாக நான் கேட்கிறேன்—இந்த அவை உறுப்பினர் என்ற முறையிலே நான் கேட்கிறேன். அரசாங்க கருவூலத்திலிருந்து ஒரு சல்லிக் காசாவது எடுக்கப்பட்டிருக்குமே யானால், அதைப்பற்றிக் கேட்கக்கூடிய உரிமை இந்த அவைக்கு உண்டு. அதற்கான விளக்கங்களையும், விவரங்களையும் தரக் கூடிய கடமை இந்த அரசிற்கு உண்டு. எனவே, இந்த விஜயங்களுக்காக எவ்வளவு பணம் அரசு கருவூலத்திலிருந்து செலவிடப் பட்டது? எப்படி செலவிடப்பட்டது? Under what Authority. . .

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1989 பிப்ரவரி 16

என்ன ஜி.ஓ. போடப்பட்டது, போட்டவர்கள் யார் என்ற விவரங்களையெல்லாம் நாட்டுக்குத் தெரிவிக்கவேண்டிய கடமை இந்த அரசிற்கு இருக்கிறது என்ற காரணத்தினால் அதை நான் வற்புறுத்தி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லக்கூடிய கடப்பாடுடையவனாக இருக்கிறேன், அதைத் தான் நான் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக, நீர்த் தேக்கங்களைப் பற்றி—மாரியைப் பற்றிச் சொன்னார்கள். பெருகிற மாரியிலே இருக்கிற நீரையெல்லாம் விட்டுவிடக்கூடாது. பிடித்து வைக்கவேண்டும் என்பதிலே நாங்கள் அக்கறையுள்ளவர்கள். எனவே, அதைக் குறித்தும் அருமை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் பல திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள். அவர்களுக்கு நான் நன்றி சொல்கிறேன். விரைந்து செயல்படுவதிலே முனைந்து இருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்கள் என்னுடைய பாராட்டுதலைப் பெறக்கூடியவர்கள்.

எனவே, பல காலமாக, கடந்த ஆட்சியாளர்கள் இருந்தபோது எங்களுடைய பகுதியிலே புல்லூர் அணைக்கட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்டம். வெள்ளைக்கண் ராவுத்தன் வெள்ளம் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டம். அரசுக் குறிப்பிலே நீங்கள் பார்க்கலாம். அதற்கு அடையாள நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டிருக்கிறது.

புல்லூர் அணைக்கட்டு, கட்டப்படாவிட்டால் எங்களுடைய பாலாறு பாழ் ஆறு ஆகும்: வடாற்காடு மாவட்டமே பாலைவனமாக மாறும்; சொல்லப்படும் அணைத் தொடரும் என்ற காரணத்தினால் நான் உங்களைக் கேட்டுக்கொள்வது. அணைக்கட்டை, தயவுசெய்து, ஏற்றுக்கொண்டதன்படி புல்லூர் வேற்றுங்கள். வெள்ளைக்கண் அணைக்கட்டு மிகச் சிறப்புக்குரிய திட்டம். எனவே, அதையும் நீங்கள் நிறைவேற்ற வேண்டும்.

ஆலங்காயம் பெரிய ஏரி—மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கு நினைவிலே இருக்கும் என்று நினைக்கிறேன். பெரிய ஏரி என்று பேசுவதை இந்த அவையே கேட்டு, நான் எப்போதெல்லாம் இரண்டு விஷயங்களை அவர்கள் சொல்வார்கள். என்ன ஜவ்வாது மலையைப் பற்றிப் பேசப்



1989 பிப்ரவரி 16] [திரு. எம். அப்துல் லத்தீப்]

போகிறாயா என்று கேட்பார்கள். பெரிய ஏரி, ஆலங்காயம் என்று கேட்பார்கள். அதுவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டம். ராவுத்தன் வெள்ளம் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டம். . .

மாண்புமிகு திரு. துரைமுருகன்: அங்கத்தினரைத் தேர்ந்தெடுத்தது சேப்பாக்கம் தொகுதியா. வாணியம்பாடி தொகுதியா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப்: சென்னை நகரைப் பற்றித் தான் இவ்வளவு நேரம் நான் பேசிக் கொண்டிருந்தேன். இப்போது நான் சேப்பாக்கம் தொகுதிக்கு மட்டும் உரியவன் என்ற நிலையில பணியாற்றவில்லை. தமிழ்நாடு முழுவதற்காகவும் பணியாற்றுகிறேன்.

(பிற்பகல் 12-20)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மண் வாசனை.

திரு. எம். அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன தான் இருந்தாலும் பிறந்த மண் அல்லவா, ஆகவே, வட ஆற்காடு மாவட்டத்திற்காக நான் கேட்கிறேன், என்னுடைய பகுதிக்கு நான் கேட்கவில்லை. ஆண்டியப்பனூர் திட்டத்தை நீங்கள் ஏற்கனவே அறிவித்து இருக்கிறீர்கள், உங்களை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். அருள் கூர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதை கவனத்தில் வைத்துக் கொண்டு புல்லூர் அணைக்கட்டு, வெள்ளைக்கண் அணைக்கட்டு, ஆலங்காயம் பெரிய ஏரி. ராவுத்தர் பள்ளம், இதிலே அத்தனைத் திட்டங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டங்கள். அடையாள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கிடப்பில் போடப்பட்ட திட்டங்கள். எனவே இந்தத் திட்டங்களை நிறை வேற்றித் தரவேண்டும் என்று வட ஆற்காடு மாவட்டம், செங்கற்பட்டு மாவட்டம், தென் ஆற்காடு மாவட்டத்தின் சார்பாக நான் இந்த அரசை மிக வற்புறுத்திக் கேட்டுக்கொண்டு இந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முழு மனதுடன் ஆதரித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

### 4. அறிவிப்பு.

#### பேரவை அலுவல் நேரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை உறுப்பினர்களுக்கு ஓர் அறிவிப்பு. இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவின் தீர்மானத்தின்படி பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் பிற்பகல் 1.30 மணி வரை நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாளை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜி. கருப்பையா மூப்பனார் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் செல்வி ஜெ. ஜெயலலிதா ஆகியோரின் **உரைகளும்** மாண்புமிகு தமிழக முதல்வரின் பதிலுரையும் இடம் பெறும்.

### 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி.

* திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கவர்னர் அறிக்கையிலே முன் மொழிந்ததை நானும் வரவேற்கும் பணியிலே சுருக்கமாகச் சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.

என்னை இந்த மாமன்றத்திற்கு அனுப்பிய ஸ்ரீரங்கம் தொகுதி மக்களுக்கும், என்னுடைய தோழமைக் கட்சியாக இருந்த தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் எந்த விதமான இன பாகுபாடும் இல்லாமல் என்னையும் ஆதரித்து என்னைப் போன்றே எங்கள் கட்சியில் வன்னிய சமூகத்தைச் சேர்ந்த பூவராகன், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த செங்கம் சேட்டு, மதிப்பிற்குரிய என்னைப் போன்றே இங்கே வந்துள்ள விஜயேந்திரையா இவர்களை எல்லாம் எந்தவிதமான இன பாகுபாடும் இல்லாமல் ஆதரித்து எங்களைக் கொண்டு வந்தார்களே அவர்களுக்கு முதலில் நான் வணக்கத்தைத் தெரிவித்து, எங்களுக்கு இந்த தொகுதிகளை வாரிக் கொடுத்த எங்கள் கட்சிக்காரர்களான ஜனதா தளம் வி. பி. சிங், உபேந்திரா போன்றவர்களுக்கும் முதலில் வணக்கத்தைத் தெரிவித்து துவக்குகிறேன்.



இப்போது நான் இங்கே பேசுவதற்கு முன்னால்

* *

இப்போது நான் சொல்வதற்கும் கவர்னர் உரைக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், இது மிகவும் முக்கியமானது என்பதற்காகச் சொல்கிறேன். திருச்சியில் சென்ற வெள்ளிக்கிழமை நடு இரவு 2 மணி அளவில் காவல் துறையினர் தங்களுடைய அலுவல்களைச் செய்யும்போது சமூகவிரோதிகள்—எங்கும் சமூகவிரோதிகள் அதிகமாக இருக்கிறார்கள்—ஆங்கிலத்தில் ரவுடிகள் என்று சொல்வார்கள், சிந்தாமணியைச் சேர்ந்த ராஜேந்திரன் என்பவனைப் பிடிக்கப் போகும்போது அவர் பல குற்றங்களில் சம்பந்தப்பட்டவர். முதலில் கற்பழிப்பு என்பது, ஆங்கிலத்தில் ரேப் என்று சொல்வார்கள், அதிலே பல குற்றங்களைச் செய்தவர், சாராய வியாபாரம், அதிலே சம்பாதிப்பது, அது மட்டுமல்லாமல் பலவிதமான மனங்களை பயமுறுத்துவது, வழியில் பெண்கள் எல்லாம் போகமுடியாதபடி செய்வது, அதை கேட்கும்போதே பயமாக இருக்கிறது. நாம் பேப்பரில் பார்த்து இருக்கிறோம் இங்கே ஏதோ சங்கர். சங்கர் என்று. ஆனால் திருச்சியில் நான் அவ்வளவு பக்கத்தில் இருக்கும் போது இவ்வளவு பெரிய சம்பவங்கள் நடந்து கொண்டு இருந்திருக்கின்றன. ஆனால் நம்முடைய காதில் இப்போதுதான் விழுகிறது. அவர்களை எப்படியாவது இந்தக் குற்றங்களைச் செய்து கொண்டிருக்கிறவரைப் பிடிக்கவேண்டும். இல்லை என்றால், வெளியே போகிற பெண்கள் எல்லாம் பயப்படத் தான் செய்வார்கள்.

அங்கே லீலா என்ற லாட்ஜ் ஒன்று இருக்கிறது. காவேரி கரையில் இப்போது புதிதாக கட்டியிருக்கிறார்கள். யார் கடன் தந்தார் என்று தெரியவில்லை, எப்படித் தந்தான் என்று தெரிய வில்லை. மலையாளத்திலிருந்து வந்தவன். அந்த லாட்ஜில்தான் அதிகமான சம்பவங்கள் நடக்கின்றன என்று சொல்கிறார்கள். ஆக நடுநிசி 2 மணிக்கு அந்த காவல்துறையினர் காவேரியினுடைய மத்தியில் 3-வது கணவாய் மணலில் பிடிக்கப் போகிறார்கள்; யார் வருகிறார்கள் என்று தெரியாமல், 4, 5 பேர்கள் சேர்ந்து விச்சரிவாளால் காவல் துறையினரை, அத்தனை பேரையும் வெட்டி விட்டார்கள். ஹெட் கான்ஸ்டபிளிலிருந்து இன்ஸ்பெக்டர்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

4 அறிவிப்பு.

வரைக்கும் எல்லோருக்கும் அரிவாள் வெட்டு. உயிர் பிழைத்தால் போதும் என்று தப்பித் தவறி கையிலே இருக்கிற ரிவால்வரை எடுத்து சுட்டிருக்கிறார். ஒரே இருட்டு. கார்ப்பரேஷன் லைட்டோ, முனிசிபாலிட்டி லைட்டோ எதுவும் எரியவில்லை. சில இடங்களில்தான் லைட்டுகள் இருக்கின்றன. அதுகூட எரிய வில்லை. அந்த ரௌடி இறந்து விட்டான். மற்ற குற்றவாளிக ளெல்லாம் அடிபட்டு, சிலபேர் ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள் சில பேர் காவல் துறையினரிடம் இருக்கிறார்கள். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அருள்கூர்ந்து உறுப்பினர் அவர்கள் ஒரு மரபைக் கடைப்பிடிக்க வேண்டும். நான் அறையில் பேசுவதை அம்பலத்தில் பேசுவது என்று சொன்னால் அது முறை யாகாது. பிறகு அறை அம்பலம் ஆகிவிடும். அம்பலம் அறை ஆகிவிடும். (சிரிப்பு) எனவே நீங்கள் பேசுகிற செய்தியை நேரடி யாகப் பேசிவிட்டால் பிரச்சினை இருக்காது. நான் அப்படிக் கொடுத்தேன்; இப்படி மறுக்கப்பட்டது என்று சொன்னால் இது அவை மரபை மீறியதாகும் என்பதைப் பெரியவர்களுக்கு உணர்த்த விரும்புகிறேன். ** என்ற வரிகள் மட்டும் நீக்கப்படு கின்றன.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறாக இருந்தால் அவைக்குறிப்பிலிருந்து நீக்கும்படியாக நான் கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)

அடுத்தபடியாக, இந்த கவர்னர் உரையென்பது ஆளுங்கட்சி யினுடைய கொள்கையை அப்படியே விளக்குவது. அந்தக் கவர்னர் எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி, அதனால் இவர் நன்மை பெற்றாலும் சரி, நன்மை பெறாவிட்டா லும் சரி, கவலையில்லை. நம்முடைய சர்க்கார் என்ன கொள்கையை வைத்திருக்கிறது? என்பதைப் பிரதிபலிக்கின்ற அளவிலே ஆளுநர் அவர்கள் உரையில் எல்லாவற்றையும் சொல்லி யிருக்கிறார்கள். தேர்தல் அறிக்கையென்று ஒன்று உண்டு. அந்தத் தேர்தல் அறிக்கைகளிலே எல்லா கட்சிகளும் பசியாவரம் கொடுக்கிறோம், மணலைக் கயிறாக திரிக்கிறோம், வானத்தை வில்லாக வளைப்போம் எங்களுக்கு ஓட்டு போடுங்கள்' என்றுதான் கேட்கிறார்கள். அடிக்கிறேன், உதைக்கிறேன் என்று கேட்டால்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



எவனும் ஓட்டுப் போட மாட்டான் (சிரிப்பு) எல்லா கட்சிகளும் அந்த மாதிரித் தேர்தல் அறிக்கைகளை விடுகிறார்கள். ஆனால் எங்கள் கலைஞர் இருக்கிறாரே, அவர் இந்த முறை ரொம்ப ஜாக் கிரதையாகத் தேர்தல் அறிக்கையை விட்டிருக்கிறார்கள். தேர்தல் வாக்குறுதிகளை அள்ளியள்ளி வீசவில்லை. ஏழுதிக் காற்றில் பறக்க விடவில்லை. எது செய்ய முடியுமென்று அப்போதே அவருக்குத் தெரியும் போல் இருக்கிறது.

திருச்சிராப்பள்ளி கூட்டத்தில், இரவு இரண்டு மணி அளவில் அவர் ஒரு கருத்தைச் சொன்னார். அரைகுறையாக இருக்கிற எங்களுக்கெல்லாம் ஓட்டுப்போடுங்கள் என்று கேட்காமல் ஏதேதோ சொல்கிறாரே என்று நினைத்துக் கொண்டிருந்தோம். கலைஞர் அவர்கள் சொன்னார்கள். நான் ஒரு கலசம்; அந்தக் கலசத்தை வெறுமனே கீழே வைத்தால் அதற்கு சாங்கித்யம் ஏற் படாது. அந்தக் கலசத்தைத் தூக்கி கோபுரத்தின் மேலே வைக்க வேண்டும். கோபுரம் கட்டுவதாக இருந்தால் அதற்கு சிமெண்ட், கல் போன்ற பலவிதமான உபகரணங்கள் எல்லாம் வேண்டியிருக் கிறது. பின்பு கலசத்தைத் தூக்கி வைத்து எங்களைப் போன்ற ஐயர்கள் பத்து பேர்களை கூப்பிட்டு அதற்கு தண்ணீர் ஊற்றிய பிறகு, அதற்கு சாங்கித்யம் ஏற்படும். அதைப் போல நீங்களும் 150 எம்.எல்.ஏக்களை தேர்ந்தெடுத்து, 150 பேர்களுக்கு என்னைத் தூக்கி வைத்து அபிசேகம் பண்ணினால் தான் எனக்கும் ஒரு வேகம் ஏற்பட்டு நானும் முதலமைச்சர் ஆகலாம் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஸ்ரீரங்கம் கோயிலை நினைத்துத் தான் அவர் அப்படிச் சொல்கிறார் என்று நானும் நினைத்தேன். இன்றைக்கு அங்கு தான் மிக உயரமான ராஜகோபுரம் இருக் கிறது. அதற்குப் பிறகு, 2 நாட்களுக்குப் பின்னாலே, Hindu இங்கிலீஷ் பத்திரிகையைப் பார்த்ததும் 170 வரைக்கும் அந்தக் கல் ஏறிவிடும் என்று அபிப்ராயம் ஏற்பட்டது. அன்று அவர் சொன்ன அந்தக் கருத்தை ரங்கநாத பெருமாள் அப்படியே ஏற்றுக் கொண்டார் என்றுதான் நான் நினைக்கிறேன். அந்தக் கூட்டணி 170 இடங்களில் ஜெயித்தது. கூட்டணியுடன் சேர்ந்து, 171 கல்லுக்கு மேலே இவரை கும்பமாக கலசமாக வைத்து, எம்.எல்.ஏ-க்கள் எல்லாம் பதவி ஏற்ற அந்தக் காட்சி இருந்ததே, அது சரியான காட்சி, சில பேர் சொன்னார்கள். திவ்வியமான காட்சியென்று. 7 கட்சி கூட்டணியிலே சேர்ந்துவிட்டார். அவர் எங்கோ பதுங்கிவிட்டார் என்றெல்லாம் நேற்று பேசினார்கள். அந்த ஏழு கட்சி பேரணியை நீங்கள் பார்த்திருந்தால் தெரியும்.

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்] [1989 பிப்ரவரி 16

அந்தக் கும்பலைப் பார்த்ததால் எனக்கு ஏற்பட்ட கண்வலி இன்னும் அடங்கவில்லை. அவ்வளவு கும்பலைப் பார்த்தேன். 25 இலட்சம் பேர்கொண்ட கும்பல் எவனால் என்றைக்குப் பார்க்க முடியும்? இவர் எங்கே பதுங்கினார்? இந்தப் பக்கம் அஸ்ஸாம் முதல்வர் மகந்தாவும், அந்தப் பக்கம் தேவிலாலும், கர்நாடகாவிலேயிருந்தும், ஆந்திராவிலேயிருந்தும் வந்த பல முதல் மந்திரிகள் நடுவிலே, பெரிய தலைவர்கள் நடுவிலே, ஆளத் தகுந்த ராஜபுத்திரன் வி. பி. சிங் நடுவிலே இவர் இருந்தார் அவர் கையை இப்படித் தூக்குகிறார். பகுகுணா பக்கத்திலே நிற்கிறார், சந்திரசேகர், அஜீத் சிங் அனைவரும் நிற்கிறார்கள். இவரும் முன்னால்தான் நின்றார். எங்கேயும் பதுங்கவில்லை. 3.00 மணிக்கு ஆரம்பமாகும் ஊர்வலம், 2½ மணிக்கே ஆரம்பித்து விட்டது. பதுங்கியவர்கள் யார் என்பதைப் பார்க்க வேண்டும். கடற்கரையில் இரண்டரை மணி வரைக்கும் உட்கார்ந்திருந்தேன். எங்கள் வயசுக்குத் தூக்கம் வந்து விட்டது. அப்பொழுதும் கலைஞர் எழுந்து பேசிய பாட்டை காணோம். என். டி. ராமராவ் பேசிக்கொண்டிருந்தார். பதுங்கினார் என்று பேசுகிறார்கள்; எங்கே, எதற்காகப் பதுங்க வேண்டும்? யாருக்காகப் பதுங்க வேண்டும்? யாரிடத்திலேயிருந்தாவது ஏதாவது திருடி விட்டாரா? பதுங்கினார்கள் ஏழு கட்சிக் கூட்டணியிருந்தது என்று சொல்கிறார்கள். ஏன் இன்றைக்கு ஏழு கட்சி கூட்டணி என்பது நமக்கு மட்டும், தமிழகத்தில் மட்டுமா இருக்கிறது? டெல்லியிலும் இருக்கிறது, இந்தியா பூராவும் அந்தக் கூட்டணி என்பது பரவியிருக்கிறது. அது எப்பொழுது பரவிற்று, எதற்காகப் பரவிற்று என்று கேட்டால், எல்லோரும் கூட்டணி வைத்துக் கொள்கிறார்கள்; எல்லாக் கட்சிகளும் வைத்துக் கொள்கிறார்கள். ஆனால் அதையெல்லாம் சொல்கிறார்களா? அதெல்லாம் கிடந்து விட்டுப் போகட்டும்.

(பிற்பகல் 12-30)

நாட்டிலே எம். ஜி. ஆர். இறந்து போய்விட்டார். இதெல்லாம் அதனால்தானே ஏற்பட்டது. அவர் உயிரோடு இருந்திருந்தால் இந்த ஒரு வருஷம், கடைசி வரைக்கும் நிச்சயமாக இருந்திருக்கும். இறந்து போனால் என்ன? அன்றைக்கு நான் மெட்ராசிலே என் பேத்தி வீட்டிலே இருந்தேன். ஐந்து மணிக்கெல்லாம் போய் வேண்டுமென்கிற சாமான்களையெல்லாம், கடையைத் திறந்து கையிலே இருக்கின்ற பணத்திற்கு என்னென்ன சாமான்கள் வாங்க முடியுமோ மூன்று நாளைக்கு வாங்கிக் கொண்டு வந்து



1989 பிப்ரவரி 16] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

விட்டேன். இல்லையென்றால் வெளியே போக முடியாது. அதுவும் என்னைப் போன்றவர்கள் வெளியே போவது என்பது சாமான்யமான காரியம் இல்லை. காலையிலே பார்க்கிறேன். கலைஞருடைய சிலை — ஏன் அவருக்குச் சிலை வைக்கக் கூடாதா? சிலை வைக்கத் தகுதி இல்லையா? அவர் தமிழர் இல்லையா? இந்த நாட்டை அவர் ஆளவில்லையா? ஆளத் தகுதி இல்லையா? அவர் விரும்பிக் கேட்டாரா? அந்தச் சிலையைத் தனக்கு வேண்டுமென்று. தமிழ் நாட்டிலே இருக்கும் அத்தனை ஜனங்களும் அவருக்குச் சிலை வைக்க வேண்டுமென்று விரும்பினார்கள். சிலையை வைத்துவிட்டார்கள். ஆனால் தடுக்கவில்லை, தடுக்கப் பார்த்தார்கள். எனக்குச் சிலை வேண்டாமென்று சொல்லிப் பார்த்தார்கள். எல்லோருடைய விருப்பத்தின் பேரிலேயும் அதை வைத்தாகி விட்டது.

ஏன் எம்.ஜி.ஆர். இறந்தால் என்ன? சிலையைப் போய் உடைக்க வேண்டுமா போபர்ஸ் குண்டால்கூட அதை உடைக்க முடியாது. (சிரிப்பு) ஆமாம், ஸ்வீடனிலேயிருந்து வாங்கிக் கொண்டு வந்த போபர்ஸ் பீரங்கி இருக்கிறதே, அதை வைத்தால்கூட அதை உடைக்க முடியாது. அப்படிப்பட்ட ஒரு பெரிய சிலையை, எத்தனை கடப்பாறைகளை வைத்து உடைத்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. சரி. உடை. ஐயா, அந்தச் சிலையை உடைத்ததால், எம்.ஜி.ஆர். உயிரோடு வந்து விட்டார் என்று சொன்னால், நான் கூட உடைப்பதற்குக் கடப்பாறையை எடுத்துக் கொள்கிறேன். இந்தச் சிலையை உடைத்தால் அவர் எம். ஜி. ஆர். நிச்சயமாக வந்து விடுவாரா? இங்கே இருக்கின்ற கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள கடைகளிலே கொள்ளையடித்தால் எம்.ஜி.ஆர். உயிரோடு வந்து விடுவாரா? இல்லை, தீட்சிதர் மொட்டை அடித்துக்கொண்டால் உயிரோடு வந்து விடுவாரா? அப்படி என்றால் எல்லோரும் அந்தக் காரியத்தை நடத்தி விடலாம். அவர் உயிரோடு வருவதற்கு யார் யார் என்னென்ன தியாகங்களைப் பண்ண வேண்டுமோ அதை எல்லாக் கட்சிகளும் சேர்ந்து பண்ணக்கூடத் தயாராக இருக்கும். இருந்தாலும், இது நியாயம் என்று நினைக்கிறீர்களா? அன்றைக் கிருந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? முச்சந்திகளெல்லாம் சிலைகள் இருக்கின்றன. இன்னும் முச்சந்திகளைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். மூன்று முச்சந்திகள் வந்தால் யார் எந்தச் சிலையை முன்னாலே வைப்பது என்று பந்தயம் நாட்டிலே — அதுவும் தமிழ் நாட்டிலே நடக்கிறதா இல்லையா? அதை உடைத்ததற்கு, யார் உடைத்தார்கள், எப்படி உடைத்

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்] [1989 பிப்ரவரி 16

தார்கள் என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதா? ஒரு தலைவர், முதலமைச்சராக வந்திருக்கிறார்கள், முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள், ஒரு கட்சியினுடைய பெருந்தலைவர், தமிழுக்காக வாழ்கின்ற தலைவர், இங்கே இருக்கின்ற தமிழர்களுக்கு மட்டுமல்ல, கடல் கடந்த தமிழர்களுக்காகவெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறார்களா இல்லையா? உதட்டிலே மட்டும் பேசவில்லை, உள்ளத்தோடு பேசிக்கொண்டிருக்கிறார். அதை உடைத்தார்கள். கேள்வி இல்லை. எம். ஜி. ஆர். இறந்து போய்விட்டார் என்பதை வைத்துக்கொண்டு பல கடைகளை லூட் பண்ணியிருக்கிறார்கள். 3,000 ரூபாய் புடவை, 4,000 ரூபாய் புடவை, 7,000 ரூபாய் புடவைகளெல்லாம் வெளியிலே வருகிறது, ஏதாவது நடவடிக்கை உண்டா? இதுதானா லா அண்ட் ஆர்டர்? இப்பொழுது நாம் வந்து ஒரு வாரம்தான் ஆகிறது. எனவே, இதைப்பற்றிச் சொல்லவில்லை. இதற்கு முன்னாலே இருந்த அரசு, எந்த அரசாக இருந்தாலும் சரி, அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. லா அண்ட் ஆர்டர்—சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது எதற்காக?

நீங்களெல்லாம் ஆட்சிக்கு வருகிறீர்கள், சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க வேண்டும் முதலிலே. நாட்டிலே உள்ள நலிந்தவர்களுக்கு, கஷ்டப்படுகின்றவர்களுக்கு ஒழுங்கான முறையில் சட்டத்தைக் கொண்டு அதிலிருந்து மீட்பதற்குத்தானே வருகிறீர்கள்? ஆனால், பராமரிக்க வில்லையே. இதையெல்லாம் எதற்காகச் சொல்ல வருகிறேன் என்றால், இனிமேலாவது இப்படி நடக்கக் கூடாது. யாராவது ஒரு தலைவர் இறந்தவுடன் ஊரையே கொள்ளையடிப்பதா? ஒரு தலைவர் இறந்தவுடன் இரயிலை நிறுத்துவதா? சிலையை உடைப்பதா? சிலையை உடைப்பது என்று ஆரம்பித்தால் என்ன ஆவது? ஏதோ, கலைஞராக இருப்பதால் போசாமல் இருக்கிறார்கள். என்ன நடத்திருக்கும் மற்றவர்களாக இருந்திருந்தால்? இனிமேல் அப்படி நடக்காமல் இருப்பதற்குப் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த அவையிலே, இந்த கவர்னர் உரையிலே பேச வாய்ப்பு கொடுத்தார்கள் எங்கள் சபாநாயகர் அவர்கள். அவர்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகு, பல திட்டங்களை (Election Manifesto) சொல்லியிருக்கிறார்கள். நகராட்சியைப் பற்றிச் சொல்ல வேண்டும். அன்றைக்குப் பேசினார்கள், பல கட்சிகளெல்லாம், வேறு மாதிரியாக இருந்திருந்தால் தேர்தலிலே ஏன் முடியுமா என்று. அது வேறு விஷயம். ஜனங்களுடைய அபிப்பிராயம். 18



1989 பிப்ரவரி 16] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

வயதிலே என்று தேர்தல் நடந்தது. நான் வெகு வருஷம் இருந்திருக்கிறேன் நகராட்சியிலே. ஒரு வருஷம், இரண்டு வருஷம் அல்ல, படிப்பு இருக்கிறதோ இல்லையோ, எல்லாவற்றையும் ஆண்டு விட்டேன், ஸ்ரீரங்கத்தில் 16 வருஷம். கலைஞர் வந்திருக்கிறார்கள், அவரைக் கூப்பிட்டு, எல்லாக் கட்சித் தலைவர்களையும் கூப்பிட்டு, நூற்றாண்டு விழா நடத்தியது எங்கள் நகராட்சி. 125 வருடங்களுக்கு மேலாகிறது. முதன்முதலிலே எல்லாம் படித்த மக்கள் இருந்த இடம். இன்றைக்கு ஐ. ஏ. எஸ். என்று பொறுக்கினால் அத்தனை ஐ. ஏ. எஸ். இருக்கிறார்கள். அப்பொழுது ரொம்பக் கெட்டிக்காரத்தனமாக — முனிசிபாலிட்டியாகவே இருந்தது, வெறும் பஞ்சாயத்து அல்ல—அந்தத் தேர்தல் நடந்து மூன்று வருடங்கள் ஆகிவிட்டது. ஏன் சொல்கிறேன் என்றால், இன்னும் இரண்டு வருஷம் நீட்டிப்பு கொடுக்கப் போகிறார்கள். ஏனென்றால் சேர்மனாக இருப்பவர்களுக்கு உள்ள கஷ்டம், பணக் கஷ்டம் என்றால், வரி வாங்குவது என்றால் சாமான்யமா? ஜனங்கள் கொடுக்கிறார்களா? எவ்வளவு கஷ்டப்பட்டுக் கொடுக்கிறார்கள். கொடுப்பவன்கூட, கையிலே பணத்தை வைத்திருப்பவன் கூட, சரியாகக் கொடுப்பதில்லை. எனவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றக் காலம் போதாது. ஏற்கனவே ஐந்து வருடங்களாக இருந்தது, 1959 ஆம் வருஷத் தேர்தலிலே, அப்பொழுது நான் நின்றேன். நகராட்சியிலே பணியாற்றும் ஒரு பாக்கியம் கிடைத்தது. ஏதோவொரு காரணத்தால் அப்பொழுது ஆறு வருஷத்திற்கு மேலே கூட நீடித்தது என்று நினைக்கிறேன்.

விதியைத் திருத்தி 5 ஆண்டு காலம் பதவி வகிக்கலாம் என்று சொன்னால் என்ன மோசம் போய்விடப்போகிறது? தமிழ் நாட்டில் இருப்பவர்கள் தானே ஆளுகிறார்கள்? தமிழன்தானே ஆளுகிறான்? வேறு மாநிலத்திலுள்ளவர்களா இங்கே வந்துவிடப் போகிறார்கள்? அல்லது வெளிநாட்டிலிருந்தா வந்துவிடப் போகிறார்கள்? இல்லையே! அன்றைக்கு 18 வயது வந்தவர்கள்தான் ஓட்டுப் போட்டார்கள். இருந்தாலும் ஏன் குறைத்தார்கள் இரண்டு ஆண்டு காலத்தை? என்ன காரணம் குறைப்பதற்கு? மொத்தம் இருந்த 98 முனிசிபாலிட்டிகளில் 67 தி.மு.க. வுக்கு வந்துவிட்டது. இதுதான் ஏற்பட்ட குறை; வேறு ஒன்றுமில்லை. அதற்காகத்தான் இரண்டு வருஷம் குறைத்து விட்டார்கள். 1984 ஆம் வருஷத்திலே 18 வயது வந்தவர்கள் ஓட்டுப்போட்டதிலே தான் 67 முனிசிப்பாலிட்டி தி.மு.க. வுக்கு கிடைத்தது. அதனால்

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்] [1989 பிப்ரவரி 16

பதவிக்காலம் 3 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. அப்படிக் குறைத்தது தவறு. குறைக்கப்பட்ட ஆயுள் காலத்தை மீண்டும் உயர்த்திக் கொடுப்பதிலே எந்த விதமான தவறும் கிடையாது. இரண்டு வருஷம் கூட்டுவதினால் குறை ஒன்றும் இல்லை ; எனவே, பதவி காலத்தை இரண்டு வருஷம் கூட்டிக் கொடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டு ஆண்டுகள் உயர்த்திக்கொள்வதால் தவறு நடக்கும் என்று கருதினால் அதைப் பார்த்துக்கொள்ள கமிஷனர் இருக்கிறார். கோவில் டிரஸ்டிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு மேலே கமிஷனர் இருக்கிறார். தவறு நடந்தால் அவர் பார்த்துக் கொள்கிறார். அதைப்போலத்தான் முனிசிபாலிட்டியிலே தவறு நடப்பதாக இருந்தால் கமிஷனர் பார்த்துக் கொள்வார். நடவடிக்கை எடுக்க அவருக்கு அதிகாரம் இருக்கிறது. அப்படி இருக்கும்போது ஏன் இந்தச் சட்டத்தை எதிர்க்கிறார்கள் என்று தெரியவில்லை. 5 வருஷம் இருந்தால்தான் ஓரளவுக்கு காரியங்களைச் செய்ய முடியும். வீட்டுவாடகை 5,000 ரூபாய் வாங்கினால் 500 ரூபாய்தான் வாங்கினேன் என்று சொல்கிறார். இதை எல்லாம யார் கண்டுபிடித்து சொல்வது, நடவடிக்கை எடுப்பது? ஒவ்வொன்றுக்கும் கமிஷனர் போய்க்கொண்டிருக்க மாட்டார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால்தான், தலைவரால்தான் இதை எல்லாம் எடுத்துக்காட்ட முடியும். அப்போதுதான் நடவடிக்கை எடுக்க முடியும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவருக்கு முன்னால் நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் இருந்தது ; அவருக்கு பொறுப்பும் இருந்தது. பின்னாலே அது பறிக்கப்பட்டது. அதற்கு என்ன காரணம்? ஆளும் கட்சிக்கு அதிகமான முனிசிபாலிட்டிகள் கிடைக்கும் என்று எதிர் பார்த்தார்கள். ஆனால் எதிர்கட்சிக்கு அதிகமாகப் போய்விட்டன. உடனே அதிகாரத்தைப் பறிப்பதும் பதவிக் காலத்தைக் குறைப்பதும் சரியல்ல. பறிக்கப்பட்ட அதிகாரத்தை மீண்டும் கொடுக்கிறார்கள் இப்போது. அதிகாரத்தையும் கொடுத்து, பதவியையும் கொடுத்து நல்லதைச் செய்யச் சொல்கிறார்கள் அதை ஏன் எதிர்க்க வேண்டும்?

அது மட்டுமல்ல. மேல்சபை பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். நான் மேல்சபை உறுப்பினராக இருந்தபோது கலைஞர் பல வசதிகளை செய்து கொடுத்திருக்கிறார். எங்களுடைய திருச்சி நகரசபைக்கு பல இலட்சம் ரூபாய் செலவில் பல காரியங்களைச் செய்



1989 பிப்ரவரி 16] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

திருக்கிறார்கள். கலைஞர் ஆட்சியிலேதான் அப்போது அமைச்சராக இருந்த அன்பில் தர்மலிங்கம் அவர்கள் நேரடியாகவே வந்து அந்த நகரசபைக்குச் செய்ய வேண்டிய பல வேலைகளைச் செய்திருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் Expansion of water supply அதற்கு பல இலட்சம் ரூபாய் செலவிட்டார்கள். அன்பில் தர்மலிங்கம் அவர்கள் நேரடியாக வந்து 'பைப்' இறக்கி, வேண்டிய காரியங்களைச் செய்தார்கள். அதை எல்லாம் மறக்க முடியாது. ஏதாவது குறை என்றால் மந்திரியே வந்துவிடுவார்.

சுமார் 37 வருஷத்திற்கு முன்னால், அப்போது ஆந்திரா எல்லாம் சேர்ந்திருந்தபோது திருச்சி ஒரு பெரிய Pilgrim centre, tourist centre அகில இந்தியாவிலிருந்தும் மக்கள் அங்கே வருவார்கள். அப்போது பி. டி. இராஜன் தான் பொறுப்பிலே இருந்தார். தண்ணீர் திட்டத்திற்கு நிறைய உதவி செய்தார். அதற்குப் பின்னாலே கலைஞர் வந்த பிறகு, தண்ணீர் வழங்கும் திட்டத்தை விரிவுபடுத்தினார். கிட்டத்தட்ட 80 சதவீதம் அளவுக்கு தண்ணீர் பிரச்சினை கலைஞர் காலத்திலே தீர்ந்துவிட்டது. இன்னும் 10 சதவீதம் அல்லது 20 சதவீதம் பாக்கி இருக்கிறது. அதையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநகராட்சித் தேர்தலில் ஓட்டுப்போடுவது பற்றிச் சொன்னார்கள். 18 வயது வந்தவர்கள் எல்லாம் ஓட்டுப்போட ஏற்பாடு செய்த பிறகு தேர்தல் நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். 9 வருஷத்திற்கு முன்னால் 18 வயது வந்தவர்களுக்கு ஓட்டுரிமை கொடுக்க வேண்டுமென்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். 1984 லிலே 18 வயது வந்தவர்கள் எல்லாம் ஓட்டு போட்டிருக்கிறார்கள், மாநகராட்சி தவிர மற்ற உள்ளாட்சி மன்றங்களுக்கு அப்போது தேர்தல் நடத்தினார்கள். அப்போதே மாநகராட்சிகளுக்குப் தேர்தல் நடத்தியிருக்கலாம். எல்லா அரசியல் கட்சிகளும் சேர்ந்து அதற்கு ஏற்பாடு செய்திருக்கலாம். ஆனால் விட்டு விட்டார்கள். ஏன் விட்டார்கள்? அவர்களுக்கு மனது இல்லை. அப்போது மனமில்லாமல் இருந்துவிட்டு, இப்போது பேசுகிறார்கள்.

இந்த மாநகராட்சிகளுக்கு தேர்தல் நடத்தி பல வருஷங்கள் ஆகிவிட்டன. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாததால் பல தவறுகள் நடைபெறுகின்றன. கேட்க யாரும் இல்லை. பிரதிநிதிகள் இருந்து சுட்டிக்காட்டும்போதே, போராடும் போதே அதிகாரிகள் பல தவறுகளைச் செய்கிறார்கள்; வேலை நடக்கவில்லை. அப்படி இருக்கும்போது மக்கள் பிரதிநிதிகள் இல்லாதபோது எப்படி நிர்வாகம் இருக்கும்? அதனால் விரைவிலே தேர்தலை நடத்த வேண்டும் என்று அரசாங்கம் முடிவு செய்கிறது. அதிலே தவறு இல்லை. உடனடியாக மாநகராட்சித் தேர்தலை நடத்தித் தருவதில் கவலைப்பட ஒன்றும் இல்லை. ஓட்டுப்போடுகிறவர்களுக்கு 18 வயது என்பதற்குப் பதிலாக 21 வயது என்று இருந்தால் என்ன ஆகி விடப்போகிறது? எனக்கு 75 வயதாகிறது. நான் உறுப்பினராக இருக்கிறேன். இங்கே அமைச்சராக இருக்கிற நேரு அவர் களுக்கு 40 வயதாகிறது. அவர் அமைச்சர், நான் உறுப்பினர். அவர் உள்ளே இருக்கிறார். நான் வெளியிலே இருக்கிறேன். அதனால் என்ன குறை வந்துவிட்டது?

(பிற்பகல் 12-40)

ஆகவே மாநகராட்சித் தேர்தலை விரைவாக நடத்துவது பற்றி ஆட்சேபனை பண்ணக்கூடாது. ஏன் தடுக்க வேண்டும்? தடுத்தால் அது முறையல்ல.

அடுத்து மேல்சபை, எவ்வளவு நல்ல சபை தெரியுமா? திரு. ராமசாமி முதலியார், திரு. லட்சுமணசாமி முதலியார். திரு. பாலசுப்பிரமணியன் ஆகியோரெல்லாம் இருந்த சபை அது. திரு. தாமோதரன் அவர்கள் பேசினால் நாள் முழுவதும் கேட்டுக் கொண்டிருக்கலாம். பெரிய தமிழிலும் பேசுவார், சின்னத் தமிழிலும் பேசுவார். எல்லோருக்கும் புரியக்கூடிய முறையிலும் பேசுவார். 'இன்டர்னேஷனல் சப்ஜக்டை' எல்லாம் 'கோட்' பண்ணிப் பேசுவார். அப்படிப்பட்டவர்கள் எல்லாம் இருந்த சபை அது. அதற்காக இந்தச் சபையை நான் குறை சொல்ல வில்லை. எத்தனையோ பேர்களால் தேர்தலில் நிற்க முடியாது. தேர்தலுக்குப் பணம் செலவழிக்க முடியாது. வாய்ப்பு கொடுக்க முடியாது. ஏதோ எனக்கு வாய்ப்பு கிடைத்தது, கலைஞர் ஆதரித்தார், வந்துவிட்டேன். எனவே எத்தனையோ பேர்களால் சபைக்கு வர முடியாமல் தனது கருத்துக்களைச் சொல்ல முடியாமல் வெளியே தேங்கிக் கிடக்கிறார்கள். அவர்களை எல்லாம் என்ன பண்ணுவது? ஆகவே அந்தச் சபையைக்





கலைக்க வேண்டிய தேவையில்லை. ஏதோ மனக் கசப்பினால், கட்சி வித்தியாசத்தால், மாறுபட்ட அபிப்பிராயத்தால் கலைத்தார்கள். கலைத்திருக்க வேண்டியது இல்லை. மேலேயும் அதை அங்கீகரித்திருக்க வேண்டியதில்லை.

இங்கேதான் தீர்மானம் போடுகிறார்கள் என்றால் உடனடியாகப் பாராளுமன்றத்திலும் அதை அங்கீகரித்திருக்க வேண்டுமா? இப்போது தேர்தலில் காங்கிரஸ் கட்சியினர் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் மேல் சபையைக் கொண்டு வருகிறோம் என்று சொன்னார்கள். அப்படியானால் அன்றைக்கே கலைத்திருக்க வேண்டியதில்லையே. எப்படிப்பட்ட புனிதமான சபை அது? நல்ல சபை.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கலைப்பதற்கு காங்கிரஸ் கட்சி காரணமாக இருக்கவில்லை என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சட்டசபையிலே போடுகிற திட்டங்கள், சட்டங்களுக்கெல்லாம் உடனே மேலே கையொழுத்துப் போட்டு ஆர்டர் போட்டு விடுவார்களா? நான் கேட்கிறேன். ரொம்பநாள் தமிழகத்திலே இருந்தது என்று சொல்லியிருக்கலாம் அல்லவா? உங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லியிருக்கலாம் அல்லவா? அதைக்கூடக் காணோம். கலைஞர் வந்து விட்டார், பக்கத்தில் இன்னொருவர் வந்துவிட்டார்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மேலவையைக் கலைக்கும் தீர்மானம் வந்தபோது நானும் இந்த அவையில் இருந்தேன். காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரையில் அதைப் பலமாக எதிர்த்துப் பேசிவிட்டு பிறகு ஓட்டெடுப்பில் கலந்துகொள்ளாமல் இருந்தது. கலந்துகொண்டிருந்தால் அன்றைக்குத் தோல்வியைத் தான் சந்தித்திருக்க வேண்டும். காரணம் இன்றைக்கு நீங்கள் எப்படி அதிக மெஜாரிட்டியோடு இருக்கிறீர்களோ அதுபோல் அன்றைக்கு அவர்கள் அதிக மெஜாரிட்டியிலே இருந்தார்கள். எனவே ஓட்டெடுப்பில் கலந்துகொள்ளாமல் வெளியே சென்றோம் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : பேரவைத் தலைவர் அவர்களே, திருமதி பொன்னம்மாள் அவர்கள் ரொம்ப 'சீனியர்' அவர்களும் நாங்களும் ஒன்றாக இருந்த பேர்வழிகள்... (சிரிப்பு) ஒன்றாக என்றால் ஒரே கட்சியிலே இருந்தவர்கள். அவர்கள், மேலே அபிப்பிராயம் சொல்லியிருக்கலாம் அல்லவா? அதன்மூலம் அதை நிறுத்தி வைத்திருக்கலாம் அல்லவா? அதாவது எங்கள் கட்சி போராடிக் கொண்டிருக்கிறது, எனவே மேல் சபையை நிறுத்தி வைக்கவேண்டும் என்று சொல்லியிருக்கலாம் அல்லவா?

இப்போது தங்கள் கட்சிக்காரர்களுக்கு, தோற்றவர்களுக்கு, சீட்டு கிடைக்காதவர்களுக்கெல்லாம் சீட்டு கொடுப்பதற்காகக் கொண்டு வருகிறார்கள் என்று சொல்கிறார்கள். ஏன் கொடுக்கக் கூடாது? தோற்றவர்கள் போய்க் கையெழுத்துப் போட்டால் செல்லாதா? அவர்கள் சபையில் உட்கார்ந்தால் அந்த சீட் ஏற்காதா? இப்படி எல்லாம் சொல்லி அந்தச் சபையைக் கொண்டு வரக்கூடாது என்று சொல்கிறார்கள். அந்தச் சபையைப் பொறுத்தவரையில் எங்கள் கட்சி 'கிராஜுவேட் கான்ஸ்டிட்யூயன்சி'யிலே நிற்கிறது. அப்போது திரு. எல். கணேசன் அவர்களும் அதிலே நிற்கிறார். அப்போது நான் போய்ப் பார்த்தேன். நான் எல்லா கல்லூரிகளுக்கும், மேல்நிலைப் பள்ளிகளுக்கும் தொடர்பான ஸ்தாபனங்களிலேயும் இருக்கிறேன். திருச்சிராப்பள்ளியிலே. ஆனால் என்னுடைய படிப்பு 'ஃபோர்த் ஃபார்ம்' தான். கல்லூரியிலும் மற்றும் கல்வி ஸ்தாபனங்களிலும் நான் இருக்கிறேன். எனவே தேர்தலிலே பல இடங்களிலும் சென்று பார்க்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அப்படிப் பார்த்த போது 2,000 ஓட்டிலே ஆயிரத்து சொச்சம் ஓட்டுகள் திரு. கணேசனுக்கு விழுந்திருக்கிறது. அப்போதே நான் பார்த்தேன். ஏதாவது பங்கம் ஏற்படும் என்று நினைத்தேன். அப்போது மாற்றுக் கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலேயுள்ள வேட்பாளர் தஞ்சாவூரிலே பெரிய வக்கீல். தேர்தலை நான் வேடிக்கையாகப் பார்க்க சென்றேன். அப்போது புதுக்கோட்டை, திருச்சி, தஞ்சாவூர் ஆகிய இடங்களைப் பொறுத்தவரையில் கிராஜுவேட் கான்ஸ்டிட்யூயன்சி தேர்தல் நடந்தது. நான் போய்ப் பார்த்தேன். நாமென்ன ஓட்டா போடப் போகிறோம் போய்ப் பார்ப்போம் என்று போய்ப் பார்த்தேன். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றைச் சொல்வதற்கு நான் கலைஞர் அவர்களிடத்திலே கேட்டுக்



கொள்கிறேன். கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது 'ஃப்ரீ எஜுகேஷன்' ஓரளவுக்குக் கொடுத்தார்கள். இதற்குக் காரணம் நாம் எங்கேயும் கண்டு பிடிக்க முடியவில்லை. நாம் படிக்கமுடியாமல் இருக்கிறோமா? நாம் படிக்கவைக்கவில்லையா? இப்போதாவது டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக வந்திருக்கிறார்கள். தமிழகத்திலே மறுபடியும் ஒரு புரட்சி. கல்வி கண்ணைத் திறக்கின்ற அளவில் ஃப்ரீ எஜுகேஷன் கொடுத்து இருக்கின்றார்கள். டிகிரி கோர்ஸ் வரைக்கும் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறார்கள். அதற்கு செலவும் அதிகமாகும். இதை நன்கு பரிசீலனை செய்துதான் சொல்லி இருக்கின்றார்கள். டிகிரி கோர்ஸ் எல்லோருக்கும் கொடுக்கலாம். நான் என்ன நினைக்கிறேன் என்றால், இன்னும் ஐந்து வருடங்கள் இருக்கின்றன. இப்போதே எல்லா திட்டத்தையும் அறிவித்து விட்டால் எப்படி? பாக்கி இருக்க வேண்டும் அல்லவா? அதைச் செய்யவில்லை, இதைச் செய்யவில்லை, ஏன் இப்போதே அறிவிக்க வில்லை என்று கேட்கமுடியாது. அவை இன்றோடு முடியப் போகிறதா? நாம் எல்லாம் எழுந்து போய்விடப் போகிறோமா? இல்லை.

நீதிமன்றங்களில் எல்லாம் உள்ள மதுவிலக்குக் குற்றங்களைப் பற்றிச் சொல்கிறேன். எத்தனை லட்சம் வழக்குகள் இருக்கின்றன என்று பார்த்தால் நமக்கு பயமாக இருக்கிறது. மதுவிலக்கை நினைக்கும்போது அபாயகரமாகவே இருக்கிறது. எங்கள் கட்சி யில் உள்ள கொள்கை அது. காந்திய கொள்கையிலே நான் தீவிர மாக உள்ளவன். அந்த குடியை யார் கற்றுக் கொடுக்கிறார்கள் என்று தெரியவில்லை. எந்த வாத்தியார் கற்றுக் கொடுக்கின்றார். காலேஜில் படிக்க வைக்கிறோம். பிரைவேட் டியூஷன் வைத்து சொல்லிக்கொடுக்கிறோம். ஆனால் ஒரு பையனுக்கும் படிப்பு ஏறமாட்டேன் என்கிறது அது ஏன் என்று தெரியவில்லை? ஆனால் இந்த மதுவை மட்டும் எவன் சொல்லிக்கொடுக்கிறான் என்று தெரியவில்லை. நாட்டில் பல காய்ச்சிக்கொண்டே இருக்கிறான். இன்று 2 லட்சம் குற்றங்கள் இருக்கின்றன என்கிறார்கள். இப்படி இரண்டு லட்சம் குற்றங்கள் இருக்கின்றன என்றால், எத்தனை லட்சம் பேர்கள் காய்ச்சுவார்கள், எத்தனை கோடி பேர்கள் குடிப்பார்கள் என்று பார்க்கவேண்டும். அதைத் தடுக்கவேண்டும். அதற்கு என்று கடுமையான ஒரு சட்டத்தைப் போடவேண்டும். முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும் எப்படித் தடுப்பது என்று. அதை விட்டுவிடப்போவது

இல்லை. இப்படியே போய்க்கொண்டிருந்தால் எப்படி நாளுக்குநாள் ரொம்ப நன்றாகக் காய்ச்சுகிறார்கள் என்று சொல்கின்றார்கள். சர்க்கார் சாராயத்தைவிட கள்ளச் சாராயத்தைத் தான் சிலபேர்கள் விரும்பிக் குடிக்கிறார்கள். அதைத் தடுக்க முடியுமா?

பதனிக்கு மரத்தில் 2, 4 இடங்களில் பானையில் கட்டுகின்றான் என்றால் அதிலே கள்ளுக்கு 3 இடங்களில் பானை கட்டுகிறான். இதைப்பற்றி என்னிடமே வந்து குற்றம் சொல்கிறான்.

**திரு. வே. தங்கபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சாராயம் பற்றிய விஷயங்களை எல்லாம் அற்புதமாகச் சொல்கின்றார்கள். ஏதாவது அனுபவ ஞானமா அல்லது கேள்வி ஞானமா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. தங்கபாண்டியன் அவர்கள் கேட்கிறார். நாங்கள் எல்லாம் மேலவையில் இருந்தவர்கள். நான் கேட்கிறேன். இந்த திட்டங்கள் போட்டது எல்லாம் அனுபவத்திலேதான் போட்டிருக்கின்றார்களா? அது எல்லாம் தானாகவே தெரிந்து கொள்வதுதான். 2 லட்சம் பேர்கள் இருக்கின்றார்கள் என்று தெரிகிறது. இதை அனுபவத்திலேதான் சொல்லவேண்டுமா? இது தானாகவே தெரிய வேண்டாமா? (சிரிப்பு). நான் உங்களை எல்லாம் ஒன்று கேட்கிறேன் பிள்ளை பெறுவதற்கு யாராவது பள்ளிக்கூடம் போகச்சொல்லி அங்கே சொல்லிக் கொடுக்கிறார்களா? வாத்தியார் ஒருவரைக் கூப்பிட்டு, ஐயா, பிள்ளை பெறுவதற்கு என் பையனுக்குத் தெரியவில்லை. என் பெண்ணுக்குத் தெரியவில்லை. கற்றுக்கொடுங்கள் என்று சொல்கிறோமா? இல்லையே; கோபித்துக் கொள்ளக்கூடாது. மகளிர் எல்லாம் இருக்கிறீர்கள். (சிரிப்பு) இது எல்லாம் சொல்லியா நாட்டிலே நடக்கிறது. நாம் பார்த்துக்கொண்டு தானே இருக்கிறோம். அதிலே என்னுடைய வேலை என்ன இருக்கிறது என்று கேட்டுக் கொள்கிறேன். யாரோ சம்பாதிக்க வைத்திருக்கின்றார்கள். பித்ரார்ஜித சொத்து இருக்கிறது. சம்பாதிக்க வைத்துவிட்டுப் போய் இருக்கிறார்கள். செலவு செய்துகொண்டு சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம். எதையும் சத்தியமாக எடுத்துச்சொல் கிறேன். கருத்துக்களை எடுத்துப் பேசுகிறேன் 2 இலட்சம்





பேர்கள் இருக்கிறார்கள். (குறுக்கீடு) 6 லட்சம் பேர்கள் என்று
சொல்கின்றார்கள். நீங்கள் பூராவாக வாசித்திருக்கின்றீர்கள்.
நீங்கள் எல்லோரும் குறிப்பு வைத்திருக்கிறீர்கள். நான் குறிப்
பெல்லாம் வைத்திருக்கிறேனா, ஒரு குறிப்பும் என்னிடம் கிடை
யாது. பதநீர் காய்ச்சுவதற்கு லைசென்ஸ் கொடுக்கின்றார்கள்.
அவர்கள் என்ன பண்ணுகிறார்கள் என்று தெரியவில்லை.
எப்படியோ கள், கள்ள சாராயத்தை வியாபாரத்திற்குக் கொண்டு
வந்து விடுகிறார்கள். அங்கே மரத்தடியிலேயே வெகு பேர்கள்
சென்று சாப்பிடுகிறார்கள். அவர்களைக் கேட்டால் ஒரு
மருந்துக் கள் சாப்பிட்டால் தான் உடம்புக்கு நல்லது என்று
டாக்டர் சொல்கிறார் என்கிறார்கள். 'ஏன்டா அங்கே
போனாய்?' என்று கேட்டால், 'டாக்டர் சொல்லியிருக்கிறார்'
எனகிறான். கையிலேயும் வாங்கிக்கொண்டு வருகிறார்கள்,
வீட்டில் குழந்தைகளுக்கும் கொடுக்க வேண்டும் என்று.

படிக்காதவர்களை விட படித்தவர்கள் இதில வேகமாக இருக்
கின்றார்கள். இதை ஒழிப்பதற்கு ஏதாவது ஒரு நல்ல
திட்டத்தை கொண்டு வர வேண்டும். அதற்கான யோசனை செய்ய
வேண்டும். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்ய
வேண்டும். பண்டம் ஒரு பக்கம் இருக்கும். பழி ஒரு பக்கம்
இருக்கும் என்று சொல்வார்கள். லட்சம் பேர்கள் குடித்துக்
கொண்டிருக்கிறார்கள் என்கிறார்கள். இதைத் தடுக்க வேண்டும்.
கலைஞர் அவர்களுக்கு என்னை விட அனுபவம் இருக்கிறது.
இந்த நிதி ஆண்டில் இல்லையென்றாலும் அடுத்த நிதி ஆண்டு
அறிக்கையின் போது செய்யவேண்டும். இந்த ஆண்டு போனா
லும் போகட்டும். அடுத்த நிதிநிலை அறிக்கையின்போது நானே
கூட யோசித்து யோசனை சொல்லிவிடுகிறேன்.

இத்தனை பேர்கள் மறுபடியும் கேஸ் போட்டு. வக்கீல்களுக்கு
பணம் செலவிட்டு வீணாகப் போவதைவிட, இவர்கள் ஆட்சிக்கு
வந்ததற்குப் பிறகு அவர்களை விடுதலை செய்யலாம். சிலர்
ஆட்சிக்கு வந்தால் கொலை செய்தவர்களைக் கூட விட்டுவிடுகின்
றார்கள். எப்படி தப்பு பண்ணி இருந்தாலும் அந்த கைதிகளை
விடுதலை பண்ணுங்கள். இனிமேல் நல்ல குணமுள்ளவனாக
இருக்கவேண்டும். கள் குடிக்க போகக்கூடாது. காபி சாப்
பிடுங்கள். இந்த கள் விற்பது போன்ற காரியங்களில் ஈடுபடா
தீர்கள் என்று புத்தி சொல்லி விடுதலை கொடுங்கள். அப்படி

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்] [1989 பிப்ரவரி 16

விடுதலை பண்ணினால் ரொம்ப சந்தோஷம். அதற்கும் மேலே
சாக்காருடைய உரிமை இருக்கிறது. நான் இதிலே சொல்வதற்கு
(பிற்பகல் 12-50)
ஒன்றுமில்லை. நானும் 36 வருடங்களாக ஸ்டோர் நிர்வாகத்தில்
பொறுப்பில் இருந்திருக்கிறேன். இங்கே ஒரு விஷயத்தைக் குறிப்
பிட விரும்புகிறேன். கூட்டுறவுச் சங்க ரேசன் கடைகளைப்
பொறுத்தவரையில் நிறைய ரேசன் கார்டுகள் இருக்கின்றன.
அந்த ரேசன் கார்டுகளை சிலர் அடகு வைத்து பணம் பெறுகிறா
கள். சொத்துக்களை அடகு வைத்து பணம் பெறுவதுமாதிரி ரேசன்
கார்டுகளை அடகு வைக்கின்ற நிலைமை இருக்கிறது. கடைக்காரர்
களும் அவ்வாறு வாங்கிக் கொள்கிறார்கள். நாம் பங்கீட்டு முறை
யில் ஏழையெளியவர்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கி
னால், அவர்கள் 10 கார்டு, 5 கார்டு என்று கடைக்காரர்களிடம்
போக்கியம் அல்லது அடகு வைக்கின்ற நிலைமை இருக்கிறது.
சொத்துக்களை விற்பது மாதிரி ரேசன் கார்டுகளை விற்கின்ற
நிலைமை இருக்கிறது. இந்நிலைமையை தவிர்க்க இதிலுள்ள
குறைகளைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, பச்சை அரிசி சோறு சாப்பிடுவது பற்றி இங்கே
மாண்புமிகு உணவு அமைச்சர் சொன்னார். பச்சை அரிசி சாப்
பாட்டை பொதுவாக யாரும் அதிகமாக சாப்பிடுவதில்லை.
எங்களைப் போன்ற ஐயர்கள் தான் அதிகமாக சாப்பிடுகிறார்கள்.
அதுவும் விருப்பத்தின் காரணமாக அல்ல. பழக்கத்தின் காரண
மாகத்தான் அவ்வாறு சாப்பிடுகிறோம்.

இன்னொரு சமாச்சாரம். என் கட்சியின் சார்பில் சிலருக்கு
பேச வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆகவே மற்ற உறுப்பினர்கள்
சம்பந்தப்பட்ட தொகுதி பிரச்சினைகளையும் நானே சொல்லக்
கடமைப்பட்டுள்ளேன். அந்த வகையில் குப்புறத்து நீர் தேக்கத்
திட்டத்தை உடனடியாக செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். ஏற்கெனவே போடப்பட்ட திட்டமாதலால்
இனியும் காலம் தாழ்த்தாமல், நான் எங்கள் கட்சியின் சட்டமன்ற
கட்சித் தலைவர் என்ற முறையில் செங்கம் உறுப்பினர் திரு சேட்டு
சார்பில் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல் என் சொந்த தொகுதி
யைப் பற்றியும் அரசாங்கம் கொஞ்சம் கவனிக்க வேண்டும்.
இந்த ஆண்டு பருவமழை வேறு பொய்த்து விட்டது. அந்தக்
காலத்தில் இம்மாதிரி மழை பொய்த்தது கிடையாது. ஆனால்
இப்பொழுதெல்லாம் மழை பொய்ப்பது சகஜமாகிவிட்டது. வருண
பகவான் கீழே வந்து மழைபொழிய இந்தக் காலத்தில்



1989 பிப்ரவரி 16] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

பயப்படுகிறார். (சிரிப்பு) 'பெட் டேம்' கட்டுவதென்றால் இந்தக் காலத்தில் கோடிக்கணக்கான ரூபாய் செலவாகும். நல்லமாதிரி பருவமழை பெய்ததென்றால் இதன்மூலம் பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் 'பெட் டேம்' கட்டப் படாத காலத்தில் பெரு மழையால், பெரு வெள்ளத்தால் மக்கள் எல்லாம் நனைந்து போன காலம் ஒன்று உண்டு. ஆனால் இப் போதோ இந்த அணைகளில் தண்ணீர் இல்லாததால் விவசாய நிலங்கள் எல்லாம் காய்ந்த நிலைமையில் காணப்படுகின்றன. எங்கள் பகுதியில் திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் அமைச்ச ராக இருந்தக் காலத்தில் சில காரியங்கள் ரொம்ப நன்றாக நடந் தன. உதாரணத்திற்கு ஸ்ரீரங்கம் நாட்டு வாய்க்கால், திண்டுக் கரை வாய்க்கால் ஆகிய இரண்டையும் குறிப்பிடலாம் இன் றைக்கு அங்கே மழை பொய்த்து விட்டபடியால் 27 கிராமங்களுக் குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த அணைகளை சரிபார்க்க கோடிக்கணக்கில் செலவாகாது. சில லட்ச ரூபாய்கள் போதும். மேலும் இதுசம்பந்தப்பட்ட வேலைகளை சீப் என்ஜினியர் மட்டத் திலேயே தீர்த்து விடலாம்.

திரு. சௌந்தரராஜன் அவர்கள் அமைச்சராக இருந்தக் காலத் தில் ஸ்ரீரங்கம் தொகுதி எம்.எல்.ஏ., என்ற முறையில் ஸ்ரீரங்கம் நாட்டு வாய்க்காலில் கல் கட்டி வைத்திருக்கிறார். ஆனால் இன்னும் 'கண்ணு' அதாவது தண்ணீர் திறந்தால் போகின்ற வழி இன்னும் வரவில்லை. இதற்கு பெரிய எஸ்டிமேட் தேவையில்லை. சிறிய குறைகளை மேம்பாடு பண்ணினால் போதும். சில லட்சம் ரூபாய் போதும். அதுபோல திண்டுக்கரை வாய்க்கால் திட்டத் தைப் பொறுத்தவரையிலும்கூட மேம்பாட்டுக்கு சில லட்சக் கணக்கில் பணம் போதும். ஆனால் அதன்மூலம் பல லட்சக் கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்க வாய்ப் பிருக்கிறது. இன்னும் இந்த ஆளுநர் உரையில் பல்வேறு குறை கள் இருக்கின்றன. இருப்பினும், வருகின்ற நிதி நிலை அறிக் கையில் குறைகள் இல்லாதவாறு நல்லபடியாக அது தயாரிக்கப் பட வேண்டுமென்று சொல்லி, அதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு ஸ்ரீரங்கத்தில் குடிகொண்டிருக்கின்ற ஸ்ரீரங்கநாதர் நல்ல ஆரோக்கியத்தையும், திடகாத்திரத்தையும், நீர்க்காயுளையும் தரவேண்டுமென்று கேட்டு இத்துடன் விடைபெறுகிறேன்.

[1989 பிப்ரவரி 16

* திரு. கே. ரமணி : மதிப்புமிக்க தலைவர் அவர்களே, தமிழக மக்களும், குறிப்பாக என் தொகுதி பெருமக்களும், இத்தேர்தலில் பண பலம், அதிகார பலம், ஜாதி மத சக்திகளின் பிளவு ஆகிய அனைத்து தாக்குதல்களையும் முறியடித்து நான்காவது முறையாக அதிக வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெறச் செய்து, என்னைத் தேர்ந்தெடுத்து இந்த மாமன்றத்திற்கு அனுப்பியுள்ளதற்காக எனது நன்றியினை முதலில் அந்த மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தேர்தல் தமிழகத்தில் ஒரு நல்ல அரசியல் மாற்றத்தை ஆரம்பித்து வைத்திருக்கிறது. ஒரு நல்ல அரசியல் மாற்றத்தை உருவாக்கியுள்ளது. பாரதப் பிரதமர் அவர்கள் எத்தனை தரம் வந்து போனார் என்கிற எண்ணிக்கைப் பற்றிய பிரச்சினைக்குள் நான் போகவில்லை. ஆனால் அவர் பலதரம் தமிழகத்தில் வந்து, மக்களைச் சந்தித்து, சுற்றுப்பயணம் மேற்கொண்டு பிரச்சாரம் செய்து, அவர்களுடைய சக்தியை முழுமையாக செலவு செய்திருக்கிறார்கள். ஆயினும் மக்கள் அவர்களுடைய தீர்ப்பை உறுதியுடன் நமக்குத் தந்துள்ளார்கள். இதுவரை நடைபெறாத அளவிற்கு, கூட்டணியில் பெருங்கட்சியாக உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தனிப் பெரும் மெஜாரிட்டி கொடுத்து, உறுதியான அரசை அமைக்கப் பணித்துள்ள தமிழக மக்களின் அரசியல் உணர்விற்கு மறுபடியும் என் பாராட்டையும், நன்றியையும் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தலைவரவர்களே, ஆளுநர் அவர்கள் தந்துள்ள இந்த உரை அமைச்சரவையினால் தரப்படுகிற உரைதான். இந்த அமைச்சரவை அதனுடைய திட்டங்களையும், கொள்கைகளையும் சுருக்கமாக வரையறுத்து, அவைமுன் வைத்துள்ளது. பாக்கி இருக்கிற விஷயங்களெல்லாம் வரக்கூடிய பட்ஜெட் விவாதங்களிலே வரும். இங்கே நடைபெறுகிற விமர்சனங்களிலும், விவாதங்களிலும் உண்மையான விவரங்களைப் பார்ப்பதற்கு நாம் தவறக்கூடாது. அப்படித் தவறினால் நாம் ஓர் அடிப்படையிலிருந்து நழுவி, வேறு இடத்திற்குச் செல்லக்கூடிய அபாயம் இருக்கிறது. இதில் எந்தவிதமான உப்பும், சப்பும் இல்லையாது, இந்த உரை வெறும் பிரயோசனம் இல்லாத உரையாக இருக்கிறது, மக்களுக்கு இருக்கும்படியான பல்வேறு பிரச்சினைகள் இதில் குறிப்பிடப்படவில்லை என்று பல மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறைபட்டுப் பேசி இருக்கிறார்கள். இந்த அரசாங்கம் என்ன செய்ய



1989 பிப்ரவரி 16] [திரு. கே. ரமணி]

வேண்டுமென்பதைப் பற்றியும், எதையெதை எல்லாம் விளக்கமாகக் கொடுக்க வேண்டுமென்பதைப் பற்றியும் பூரணமாக இந்த ஓர் அறிக்கையிலேயே சொல்லி முடித்துவிட முடியாது. இந்த கவர்னர் அறிக்கையிலேயே அப்படிச் செய்ய முடியாது. ஆகவே இதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நாம் ஆராய்ந்து எடுத்துக் கொள்ள வேண்டும். அதனுடைய நன்மை, தீமைகளை நாம் ஆராய்ந்து, விமர்சித்து, ஆலோசனைகளையும் சொல்ல வேண்டும். தவறுகளையும் சுட்டிக் காட்ட வேண்டும். ஒட்டுமொத்தமாக எடுத்துக்கொண்டு, இந்த அறிக்கை வரவேற்கத்தக்கதா அல்லது நிராகரிக்கத்தக்கதா என்று வரையறுத்து, நம் சொந்தக் கண்ணோட்டத்தில்தான் சொல்ல வேண்டியிருக்கிறது.

மாநில சுயாட்சியோடு கூடிய முழுமையான கூட்டாட்சி முறை
யில் நாட்டின் ஒற்றுமையைக் கட்டிக் காக்கவும், அதற்கு அரசியல்
சட்டத்தைத் திருத்தவும், ஒத்த கருத்துள்ள அனைத்து அமைப்பு
களுடன் சேர்ந்து இவ்வரசு முயலும் என்று சொல்லப்பட்டிருக்
கிறது. 15 தேசிய மொழிகளுக்கும் சம அந்தஸ்து. அதனுடைய
ஆட்சி புரியும் தன்மைகளுக்கேற்ப கிடைக்க ஆவன செய்வது
என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஊராட்சி மன்றங்கள்,
ஒன்றியங்கள், நகராட்சிகள் ஆகியவற்றின் உறுப்பினர்களின்
பதவிக்காலம் 5 ஆண்டுகளாக இருந்தது எற்கெனவே பறிக்கப்
பட்டிருக்கிறது. அந்த பறிக்கப்பட்ட அதிகாரங்கள் உள்ளாட்சி
மன்றங்களுக்கு திரும்பக் கொடுக்கப்படுகிறது. 3 மாநகராட்சி
களுக்கு உடனடியாகத் தேர்தல்கள் நடத்தப்படும் என்று சொல்லப்
பட்டிருக்கிறது. என்னுடைய கோவை மாநகராட்சியில் அது
உண்டானதிலிருந்து இன்றையவரை தேர்தல் என்ற நாமதேயமே
இல்லை. கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை துரிதமாக நடத்து
வோம் என்று கூறப்பட்டிருக்கிறது. இதே மன்றத்திலே,
கூட்டுறவுச் சட்டத்தை, நீண்ட விவாதத்திற்குப் பிறகு நிறை
வேற்றியும்கூட, அந்தச் சட்டம் இன்னும் அமுலுக்குக் கொண்டு
வரப்படவில்லை. ஆகவே கூட்டுறவுத் தேர்தல்களை உடனே
நடத்துவதற்கும், சத்துணவுப் பணியாளர்களை நிரந்தரப்படுத்
துவதற்கும், தேங்கிக் கிடக்கின்ற 6 இலட்சம் மது விலக்கு சம்பந்த
மான வழக்குகளைத் துரிதமாக முடிப்பதற்கு சட்டத் திருத்தம்
கொண்டுவருவதற்கும், சாராய உற்பத்தியாளர்கள் கொள்ளை
கொள்ளையாக லாபம் அடிப்பதை தடுத்து, அரசு வருமானத்தைப்
பெருக்குவதற்கும், தமிழ்நாட்டுக்கு மத்திய அரசு குறைவாக

அரிசி தந்துள்ளதை மாற்றி, தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய 80,000 டன் அரிசியைப் பெற தொடர்ந்து வற்புறுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று கூறப்பட்டிருக்கிறது. மேலும், அரசை மலைபோல் நம்பியுள்ள மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற அடுத்த ஆண்டுத் திட்டங்களுக்கு முன்னுரிமைகளைப் பிரதிபலித்து நிறைவேற்றக்கூடியதாக இருப்பதற்கும், பெண்களின் வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதற்கும், ஆரம்பப் பள்ளிகளில் முதல் 2 வகுப்புகளில் ஆசிரியைகளுக்கே வேலைகளைக் கொடுப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அரசின் வருவாயைப் பெருக்க, ஏழைகளின் மீது சுமை ஏற்றாமல்—ஏழைகளின் மீது சுமை ஏற்றாமல், என்பதை நான் திரும்ப வற்புறுத்திச் சொல்கிறேன்—நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பொது நிதி ஒவ்வொரு காசும் பொது மக்களின் நலன்களுக்காகவே செலவு செய்யப்படுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 1-00)

மேலும் அரசின் திட்டங்கள் நன்கு செயல்பட, பயன்கள் உரியவர்களைச் சென்றடைய, அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், மற்றும் உள்ளாட்சி அலுவலர்களின் ஒத்துழைப்பை என்றென்றும் இந்த அரசு பெறுவதற்கான அம்சங்கள் இந்த அறிக்கையிலே அடங்கி இருக்கின்றன. இவையெல்லாம் வரவேற்கத் தக்கதல்லவா? எந்தக் கொள்கைக் கண்ணோட்டத்திலேயிருந்து பார்த்தாலும், இவையெல்லாம் வரவேற்கத் தக்கவையல்லவா? இவைகள் நிராகரிக்கத் தக்கவையா? இவைகள் வரவேற்கத் தக்கவை என்பதும், இதில் சொல்லப்பட்ட அம்சங்கள் நிறைவேற்றப்படுவதற்கு இந்த அரசு தொடர்ந்து முயற்சிக்க வேண்டுமென்பதும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்தாகும். ஆகவே, இதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், எந்தக் குறையும் இல்லாத ஒரு தஸ்தாவேஜாக இந்த உரை இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. சில குறைகள் இருக்கின்றன அந்தக் குறைபாடுகளையும் நான் சொல்கிறேன்.

தொழிலாளர் வர்க்கத்திற்காகக் கையாளப்பட வேண்டிய ஒரு சிறந்த தொழிலாளர் கொள்கை பற்றி இந்த டாக்குமெண்டில் சரியாகச் சொல்லப்படவில்லை. விவசாயிகளின் கடன் பிரச்சினைகள்—இன்றைக்கு எல்லாவற்றிற்கும் மேலாக நாட்டில்



இருக்கும் பட்டினித் தரித்திரம், வேலையில்லாத் திண்டாட்டம், வாங்கும் சக்தி இழப்பைத் தடுப்பது ஆகியவற்றிற்காக ஒரு விரிவான நிலச் சீர்திருத்தச் சட்டத்தை அமுலாக்கி, கிராமப்புற மக்களுக்கு நிலத்தைப் பங்கிட்டுக் கொடுக்காமல்—நிலக் குவியலைக் குறைக்காமல்—இது சாத்தியமில்லை. அந்த அம்சத்தை இந்த அறிக்கையிலே நான் பார்க்க இயலாத நிலைதான் இருக்கிறது.

கல்விக் கூடங்களில் நடக்கும்படியான அநீதி. ஏழை மக்கள் மீது அடக்குமுறைகள் இன்னும் தொடர்கின்றன. எங்கும் பரவி வளர்ந்துள்ள பயங்கரமான ஊழல். இன்றைக்கும் அதனுடைய சக்தி, குறையாமல் அது தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கிறது. இந்த அம்சங்களெல்லாம் இந்த அறிக்கையிலே ஓரளவாவது இடம் பெற்றிருந்தால் அது நியாயமற்ற விமர்சனங்களுக்கு இடம் கொடுத்திருக்காது. ஆகவே சில விமர்சனங்கள் வந்திருக்கின்றன. இந்த அறிக்கையிலே அவைகளும் இடம் பெற்றிருக்க வேண்டும். அது இந்த அறிக்கையின் குறையாகும்.

இப்போது நடந்து முடிந்திருக்கிற தேர்தல் இருக்கிறதே, அந்தத் தேர்தலினுடைய முக்கியத்துவத்தை நாம் உணர வேண்டும். ஜனங்கள் நம்மை இங்கே அனுப்பி வைத்திருக்கிறார்கள். அவர்கள்தான் ஓட்டுப் போட்டு அனுப்பி வைத்திருக்கிறார்கள். அதிகாரம் என்பது அவர்கள் கையிலே. அந்த அதிகார உணர்வுதான் நம்மை இங்கே கொண்டு வந்து உட்கார வைத்திருக்கிறது. அதுதான் இந்த அரசை உருவாக்கியிருக்கிறது. நடந்து முடிந்த தேர்தலிலே தி.மு.க.—மார்க்சிஸ்ட்—ஜனதா தளம் கூட்டாக மக்களைத் தமிழகத்திலே திரட்டி பெற்றுள்ள மகத்தான வெற்றி இது. கடுமையாகப் போராடித்தான் இந்த வெற்றியைப் பெற முடிந்தது. 232 ஸ்தானங்களுக்குத் தேர்தல் நடக்க வேண்டிய இடத்தில் 3,000-க்கும் மேற்பட்டவர்கள் போட்டியிட்டார்கள். 3,000-க்கும் மேற்பட்டவர்கள் தேர்தலிலே திட்டமிட்டு போட்டியிட்டார்கள் எப்படி இந்தப் போட்டி நடந்தது? எந்த ஒரு பிரஜையும்—ஓட்டுள்ள எந்த ஒரு மனிதனும்—தேர்தலிலே தேர்ந்தெடுக்கப்படுவதற்கும், தேர்ந்தெடுப்பதற்கும் இன்றைய அரசியல் சட்டத்தில் உரிமை இருக்கிறது என்பது உண்மை. அதற்காக, 232 ஸ்தானங்களுக்கு 3,000-க்கும் மேற்பட்டவர்கள் எப்படி போட்டிப் போடுகிறார்கள் என்று யோசித்துப் பார்க்க வேண்டும். எப்படி இது ஏற்பட்டது? ஓட்டர் மகா ஜனங்களைப் பிளவுபடுத்தி, இந்தக் கூட்டணியைத்

தோற்கடிக்க வேண்டும் என்றும், தி.மு.க. தனிப் பெரும் மெஜாரிட்டியாக வந்து ஆட்சி அமைக்கக் கூடாது என்றும் ஒரு தந்திரம் ஏற்படுத்தி, அப்படிப்பட்ட நிலைமையை திட்டமிட்டு தடுக்க கோடி கோடியாகப் பணம் செலவழித்தார்கள். ஆம்; கோடி கோடியாகப் பணம் செலவழித்தார்கள். அப்படிப்பட்ட முறையில் நிறுத்தி வைக்கப்பட்ட போட்டிகள்தான் அவை. அநேகமாக ஜனங்கள் மத்தியில் கேட்டால் தெரியும். அதை மக்கள் ரொம்பவும் கவனமாகப் பார்த்திருக்கிறார்கள். அப்படி நிறுத்தி வைக்கப்பட்ட போட்டிகளைக் கண்டு மக்கள் ஏமாறவில்லை. அப்படிப் போட்டியிட்டவர்களையெல்லாம் மக்கள் தோற்கடித்து அவர்களுக்கு பாடம் கற்பித்திருக்கிறார்கள். அவர்கள் பாடம் கற்றுக் கொண்டார்களா இல்லையா என்பது நமக்குத் தெரியாது. ஆனால் ஜனங்கள் அந்தத் தோல்வியை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படிச் சாத்தியமாயிற்று? மக்களின் சொந்த அனுபவத்திலிருந்து இது சாத்தியமாயிற்று? மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இதை அப்படித்தான் பார்க்கிறது அவர்களுடைய சொந்த அனுபவம் இது.

பல ஆண்டுகளாக மக்கள் இந்திய நாடு சுதந்திரம் பெற்ற கடந்த 41 ஆண்டுகளுக்கு மேலாகவும்—அதற்கு முன்னால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்த நாட்டை ஆண்டு வந்த காலத்திலும் அவர்கள் பட்ட தொல்லைகள், துயரங்கள், கொடுமைகள்—சுதந்திரம் வேண்டும் என்று அவர்கள் போராடிய போராட்டங்களின்போது அவர்கள் சிந்திய ரத்தம் ஆகியவைதான் அனுபவமாக அமைந்தது. அதிலேயிருந்து தொடர்கிறது. இந்த 40, 41 ஆண்டுக்காலம் முழுமைக்கும் அவர்கள் அனுபவம் இருக்கிறது. அந்த அனுபவத்தையும் மீறி கடந்த 10 ஆண்டுக்காலமாக ஒரு ஆட்சியில் அவர்கள் மேலும் அனுபவித்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அந்த மக்கள் இந்தத் தேர்தலில் தனிப்பட்ட மனிதருடைய வசீகரத்தினால், மயக்கத்தினால் ஓட்டுப் போடவில்லை அல்லது தேர்தல் அலைகள் என்று வருமே, அதனாலும் போடவில்லை. அந்த மக்கள் தந்துள்ள இந்த வெற்றியை இப்படிப்பட்ட நிலைமைகளிலிருந்து அவர்கள் தரவில்லை. அவர்கள் இந்த அணியின் சார்பில்—இங்கே இருக்கிற அணி மட்டுமல்ல, இந்திய நாடு முழுவதும் இப்படிப்பட்ட ஒரு வளர்ச்சிப் போக்கு இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, தேசிய முன்னணி, இடதுசாரி அணி, இப்படிப்பட்ட அணிகளும், அதைச் சார்ந்த எல்லாக் கட்சிகளும், அவற்றின் ஆதரவாளர்களும், தமிழ் நாட்டில் உள்ள ஒரு





அணியை, அதுவும் ஒரு பலமான அரசு அமைக்கக்கூடிய சக்தியுள்ள ஒரே கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தை தேர்வு செய்திருப்பது தமிழ் நாட்டில் இருக்கிற யதார்த்த நிலைமையாகும். அதை உணர வேண்டும். இந்த யதார்த்த நிலையில் பார்த்தால் மற்ற கட்சிகளுக்கு அரசு அமைக்கக்கூடிய சக்தி இல்லை என்பது புரியலாம். எங்கள் கட்சியால் அரசு அமைக்க முடியுமென்று நாங்கள் நினைக்க முடியுமா? அந்த சக்தி திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தான் இருக்கிறது. அந்த உண்மைகளை தமிழக மக்களிடத்தில் எடுத்துக் கூறி, அவர்களுடைய சொந்த அனுபவத்தினால் மக்கள் அவற்றை ஏற்றுக்கொண்டார்கள். அந்த இரண்டும் சேர்ந்து ஏற்பட்ட ஒரு சேர்மானம், மக்களின் உணர்வை வளர்த்து, மாற்றியது, புதிய அரசாட்சியை உருவாக்கினார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் தனிப்பெரும் மெஜாரிட்டி பெற்று அவர்கள் அரசாட்சி அமைத்தார்கள். அதுதான் இன்றைய யதார்த்தமான நிலை. மக்களுடைய தீர்ப்பு அந்த முறையில் வந்தது என்று நம்புகிறோம். எந்த அலையாலும் இதனை சாதிக்கவில்லை. சொந்த அனுபவமும் அதிலே அவர்களுக்கு கிடைத்த அரசியல் ஞானமும்தான் காரணம் அவர்கள் தங்கள் சொந்த வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் பட்டிருக்கிற துன்பங்களும், அவர்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்ற நிலைமையும் இந்த வெற்றியை உருவாக்கியது.

வேலையின்மை, விலையேற்றம், பட்டினி, ஆலைகள் மூடல், சிறுதொழில் நாசம், விவசாய சீரழிவு, கடும் தொழில் நெருக்கடி, கள்ள மார்க்கெட், நாட்டு மக்களின் பாதுகாப்பற்ற நிலை, ஜனநாயகம் நொறுக்கப்பட்ட நிலை, நாட்டு ஒற்றுமைக்கே ஆபத்து இவைகள் எல்லாம் ஒன்று சேர்ந்தன. சுதந்திர இந்தியா ஏற்பட வேண்டுமென்ற காலத்தில் "ஆயிரம் உண்டிங்கு ஜாதி அதில் அன்னியர் வந்துப் புகல் என்ன நீதி" என்று பாரதியார் நம் ரத்த நாளத்தில் உணர்வை ஏற்றினாரே, அன்றைக்கிருந்த அந்த ஒற்றுமை இன்றைக்கு நம் நாட்டில் இல்லை. ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலையில் இவ்வளவு துன்பங்களுக்கும், கஷ்டங்களுக்கும், மத்தியில் மக்கள் அனுபவிக்கிற தொல்லைகள் தான் அடிப்படை காரணமாகும். ஜனநாயகம் நொறுக்கப்படுகிறது. நாட்டின் ஒற்றுமைக்கே ஆபத்து வருகிறது. இதனால் பாதிக்கப்பட்ட மக்களின் அனுபவம் அவர்களின் கண்களைத் திறந்துள்ளது. நம் நாட்டிற்கே ஆபத்து வரும், வாழ்விற்கே ஆபத்து வரும். இந்தப்

[திரு. கே. ரமணி] [1989 பிப்ரவரி 16

பட்டினியும், தரித்திரமும் 41 ஆண்டுக்கால சுதந்திர இந்தியாவின் காங்கிரஸ் அரசாட்சியால் தீர்க்கமுடியாது என்பது இன்றைக்கு பகிரங்கமான உண்மையாக மாறிவிட்டது. ஆகவே, மாற்று அணி தேவை, மாற்று ஆட்சித் தேவை. பரிபூர்ணக்கொள்கை மாற்றம் தேவை. அடிப்படையான திட்டங்கள் மாற்றப்பட வேண்டும். ஏன், அரசியல் சட்டத்திலேயே பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வந்தாக வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலை உள்ளது. இதனை நான் சொன்ன மாதிரி மக்கள் தொகுத்துச் சொல்லாவிட்டாலும், அவர்களுடைய உள்ளத்தில் இருக்கிற கருத்துக்கள் அவை. அதுதான் பிரதிபலித்துள்ளது. இதெல்லாம் அவர்கள் அனுபவித்தறிந்த உண்மை. கடந்த சில ஆண்டுக்காலமாக நடைபெற்றுள்ள மாபெரும் போராட்டங்கள்—பொருமங்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள போராடித்தான் தங்களைக் காப்பாற்றிக்கொண்டிருக்கிறார்கள்—நாடு தழுவிய தொழிலாளர் போராட்டங்கள், நாடு தழுவிய பந்த் போராட்டம், மார்ச் 15 ஆம் தேதி இந்தியாவில் இமயத்திலிருந்து குமரி வரைக்கும் நடந்திருக்கிற, கோடிக்கணக்கான மக்கள் பங்கேற்ற பந்த் போராட்டங்கள்—அவற்றில் மக்கள் முழுமையாக பங்கேற்றார்கள், அரசியல் கட்சிகள் தலைமை தாங்கியிருக்கிறார்கள். விவசாயிகளின் போராட்டங்கள், அரசு ஊழியர் போராட்டங்கள், மாணவர்கள்-வாலிபர் போராட்டங்கள், சர்வாதிகாரத்தை எதிர்த்து, அடக்குமுறையை எதிர்த்து, ஆட்சி மாற்றத்திற்குரிய போராட்டங்களாக அவை மலர்ந்தன. அந்த நிலை தான் தமிழ் நாட்டிலேயும் வந்திருக்கிறது. எனவே தான் தமிழ் நாட்டில் இந்த ஆட்சி மாற்றம், இந்திய நாட்டில் ஏற்பட வேண்டிய ஒரு ஆட்சி மாற்றத்திற்கான கதவைத் திறந்துள்ள போராட்டம் என்கிறோம்.

(பிற்பகல் 1-10)

நமது பாரதப் பிரதமர் அவர்கள் சும்மா வரவில்லை. அவர் இதைத் தெரிந்துதான் வந்தார். வருகிறார், தமிழ் நாட்டுக்கு. இந்த நிலைமையை மாற்ற முடியுமா என்று பார்ப்பதற்கு. அப்படிப்பட்ட போராட்டங்கள் இவைகள் தான் இந்த மக்களுடைய கண்ணைத் திறந்தது. மாநில அரசுக்கு மக்களுக்கு அதிகாரம் இல்லாத நிலை. மாநில அரசுகள் என்று நாம் சொன்னால், பலருக்கு அது கஷ்டமாக இருக்கும். மாநில அரசுகள் அதிகாரம் என்பது எப்படி வைக்கப்பட்டிருக்கின்றன? முனிசிபாலிட்டிக்கு சமம் என்று சொல்லலாமா? என்னைக் கேட்டால் அதைக்கூடச் சொல்ல முடியாது. அதைவிட குறைவான



1989 பிப்ரவரி 16] [திரு. கே. ரமணி]

நிலைமையில் மாநிலங்கள் கையேந்தி நிற்க வேண்டிய நிலைமையில் இருக்கின்றன. நமது அரசாங்கத்திற்கு 400 கோடி ரூபாய். இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமானால் பற்றாக்குறையாகப் போகிறது, திட்டத்தை ஏன் குறைக்க வேண்டும், அதிலே 200 கோடி ரூபாயாவது மத்திய அரசு தரவேண்டும் என்று நமது மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இது என்ன மாநில அரசா? இல்லை மாநில சுயாட்சியா? என்ன இது? யார் எஜமானர்கள்? யார் கைநீட்டுபவர்கள்? இதை நாம் சிந்திக்க வேண்டாமா? ஆகவேதான் சொல்கிறோம். அப்படிப்பட்ட முறையிலே மாநில சுயாட்சி என்பது ஒரு முக்கியமான அம்சம். அது சும்மா வரவில்லை. இந்திய நாட்டில் இருக்கும்படியான அசமத்துவமான வளர்ச்சி. அந்த வளர்ச்சி இருக்கும்போது இப்படிப்பட்ட நிலைமைகள் உருவாகத்தான் செய்யும். இதைச் சரி செய்வதற்கு, அதற்குத் தகுந்த முறையில் பொருளாதார சமூக மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு இருக்கும்படியான ஒரு போராட்டம்தான் இந்த 80 கோடி மக்கள் இந்திய நாட்டிலே நடத்துகிற போராட்டம். தமிழகம் மட்டுமல்ல, மற்ற மாநிலங்களிலேயும் என்னென்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆகவே இந்திய நாடு முழுவதும் இந்த வளர்ச்சிப் போக்குடன் மத்திய அரசின் தவறான கொள்கையால் ஏற்பட்டு வந்திருக்கும்படியான ஒரு நிலை. இதை நாங்கள் சொல்லும்போது எனது மதிப்பிற்குரிய காங்கிரஸ் நண்பர்களுக்கு மனதிலே வேதனை ஏற்படலாம். ஏன் என்றால், நம்மை இப்படி விமர்சிக்கிறார்களே, என்பதால். நானும் 14 வயதிலேயிருந்து காங்கிரஸ்காரனாக இருந்தவன்; காங்கிரஸ் கட்சியிலேயிருந்து நாங்களும் போராடியிருக்கிறோம். எங்களுடைய கட்சியைச் சேர்ந்த ஒவ்வொரு தலைவரும், ஒவ்வொரு ஊழியரும் காங்கிரஸ் கட்சியிலே இருந்து போராடியிருக்கிறோம். நாட்டினுடைய சரித்திரம் இங்கிருக்கிற எல்லோருக்கும் சம்பந்தப்பட்ட ஒன்று. அதனால்தான் கூறுகிறோம். இந்த 41 வருட காலத்தில் இப்படிப்பட்ட அவல நிலையைத் தீர்ப்பதற்கான சகல அதிகாரம் படைத்துள்ள ஒரு பாராளுமன்றம், ஒரு அரசு; இதற்குத் தீர்வைக் காண முடியாதா? செய்ய முடியாதா? செய்ய முடியும். அப்படிப்பட்ட கொள்கை இருக்க வேண்டும். அடிப்படைத் திட்டம் இருக்க வேண்டும். அது இல்லை என்று சொன்னால் இப்படிப்பட்ட நிலைதான் ஏற்படும். அதைத்தான் நாங்கள் [illegible]கிறோம்.

[திரு. கே. ரமணி] [1989 பிப்ரவரி 16

ஆகவே இன்றைக்கு மக்கள் என்ன பாதையிலே புறப்பட்டு இருக்கிறார்கள் என்றால், அதற்கு ஒரு மாற்றான பாதையில், நாட்டிலே உருவாகும்படியான தேசிய முன்னணி, இடதுசாரி அணி, நம்முடைய தமிழ்நாட்டிலே ஏற்பட்டிருக்கும்படியான திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பலமான அரசும் உள்ளிட்ட, அப்படிப்பட்ட ஒரு அணி, ஒரு மாற்றுத் திட்டத்தோடு, ஒரு மாற்றுக் கொள்கையோடு இந்த நாட்டிலே ஆட்சிக்கு வர வேண்டும், இங்கு மட்டுமல்ல, இந்திய நாடு முழுவதும் அப்படிப் பட்ட ஒரு ஆட்சி, பாராளுமன்றத்திலே அப்படிப்பட்ட மாற்றம் வரவேண்டும். 80 கோடி மக்களுடைய வாழ்க்கைக்கான போராட்டமே தவிர, அது பதவி வேட்டையல்ல, சந்தர்ப்பவாதமல்ல. 'Opportunism' அது அல்ல, ஒரு கொள்கையின்பால் நாம் செல்லக்கூடிய விஷயம். மத்திய அரசு மாநிலங்களுக்கும் மக்களுக்கும் நியாயம் வழங்கவில்லை. அதனால்தான் இந்த நிலைமை ஏற்படுகிறது. மாநிலங்கள் பலவீனப்பட்டால் பலமான மத்திய அரசு இருக்க முடியாது. மாநிலங்களுடைய பலம்தான் மத்திய அரசைப் பலப்படுத்தும். மத்திய அரசுக்கு அந்த பலம் உண்டாக வேண்டுமானால், மாநிலங்களைப் பலப்படுத்தக்கூடிய ஒவ்வொரு அசைவுக்கும் மத்திய அரசு ஆதரவு அளிக்கவேண்டும். அதற்கு வேண்டிய உதவி அளிக்கவேண்டும். அது இல்லை என்றால் வெறும் வாய்ச்சொல். அது அல்லாமல், மாநிலங்களுடைய சுயாட்சி என்பது நடக்காது.

சர்க்காரியா கமிஷன் முடிவுகள், அதுகூட பூர்ணத்துவம் பெற்ற சகலத்தையும் நமக்கு அள்ளித் தரக்கூடிய தீர்ப்பு அல்ல. அந்தத் தீர்ப்பு கூட கிடப்பிலேதான் இருக்கிறதே தவிர, அதைக்கூட பரிசீலித்து, அமலுக்குக் கொண்டு வருவதற்கான நிலைமை இல்லை. இதையும் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. சர்க்காரியா கமிஷன் முடிவுகளை அமல்படுத்த எந்த நடவடிக்கையுமில்லை.

தொழில் வளர்ச்சி என்று நாம் எடுத்துக்கொண்டால், இதிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. நேற்றையதினம் எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர் டபிள்யூ. ஆர். அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். எப்படி தமிழ்நாட்டில் இருக்கும்படியான தொழில் வளர்ச்சி குன்றிப் போயிருக்கிறது என்று. ஏன் நாம்



1989 பிப்ரவரி 16] [திரு. கே. ரமணி]

பின்னுக்குத் தள்ளப்படவேண்டும்? எத்தனை நீர் மின்சாரத்
திட்டங்கள். போன அரசு இருந்த காலத்தில், அந்தக் கமிட்டியிலே
இருந்து பேசும்போது நான் பார்த்தேன். 13 திட்டங்கள்
கொடுத்ததும், அங்கே கிடப்பிலே போடப்பட்டு இருக்கிறது.

அதேபோன்று வேறு பல திட்டங்களை இங்கே சொல்ல
முடியும். நீர்ப்பாசனத் திட்டங்கள் பல நிறைவேற்றப்படாத
நிலை ஏற்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமைகள் வந்தால்
எப்படி இங்கே தொழில் வளர்ச்சி ஏற்படும்? தொழிற்சாலைகள்
நூற்றுக்கணக்கில் அல்ல. தமிழ்நாட்டில் சிறிய தொழில்கள்,
இஞ்சினீயரிங் தொழிற்சாலைகள். ஃபௌண்டரீஸ், இவைகள்
எல்லாம் ஆயிரக்கணக்கில் பூட்டப்பட்டிருக்கின்றன. பஞ்சாலை
கள் பூட்டப்பட்டிருக்கின்றன. 40-க்கும் மேற்பட்ட பஞ்சாலைகள்
பூட்டப்பட்டு, 5 ஆண்டுகளுக்கு மேற்பட்டும் கூட பூட்டப்பட்டிருக்
கின்றன. இனிமேல் அதைப் போய் திறந்தால், அதில் இருக்கின்ற
இயந்திரங்கள் கெட்டுப் போயிருக்கும். அதை அடிக்கடி சுத்தம்
செய்து, எண்ணெய் போட்டு இயக்கினால்தான் பயன்படுத்த
முடியும். இல்லையென்றால் காயலான் கடைக்குப் போக வேண்டி
வரும். அப்படிப்பட்ட நிலைமைகள் உருவாகிவிடும். இது மத்திய
சர்க்காருக்குத் தெரியாதா? ஏன் அந்த Industrial Development Act
அதைச் சார்ந்த நடவடிக்கைகள் அத்தனையையும். எடுக்கின்ற
சட்டத்தை கையில் வைத்திருக்கின்ற மத்திய சர்க்கார் அதற்கு
உண்டான நிதி வசதிகளைப் பெருக்க வேண்டாமா? அவர்கள்
அதைச் செய்ய முன்வர வேண்டாமா? அப்படிப்பட்ட நடவடிக்
கைகள் இல்லை. அதனால் தான் தொழில் வளர்ச்சியில் எல்லாம்
நாம் பின் தள்ளப்பட்டிருக்கக் கூடிய நிலை.

அதைப்போன்று பஞ்சும், நூலும் ஏற்றுமதி. பல்லாயிரக்கணக்
கான கைத்தறி நெசவாளர்கள், பட்டினி கிடக்கிறார்கள். அவர்கள்
சிறைச்சாலைக்குச் சென்றார்கள், 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட
விசைத் தறியாளர்கள் இன்றைக்கு நூல் கிடைக்காமல், நெசவுத்
தொழில் பண்ண முடியாமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.
அப்படியானால் எத்தனை இலட்சக்கணக்கான மக்களின் குடும்
பங்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை உணர
வேண்டும். மத்திய சர்க்காருடைய பஞ்சாலை சம்பந்தமாக (Textile
Policy) கைத்தறி, விசைத்தறி, பஞ்சாலைகள் இந்த மூன்றும்
சேர்ந்த ஒரு (Integrated Policy) இணைக்கப்பட்டிருக்கின்ற
கொள்கையா மத்திய அரசினுடையது? அப்படிப்பட்ட கொள்கை
யல்ல. அதனுடைய விளைவு இந்தத் தொழிலில் கொஞ்சம் சக்தி

யுள்ள, பெரு மூலதனம் போட்டு நடத்தக் கூடிய முதலாளிகள்தான் இருக்கிறார்கள். மற்றவர்கள் அழிகிறார்கள். ஏழைகளின் தொழில் நாசமாகிறது. லட்சோபலட்சக் கணக்கில் தொழிலாளர்கள் வேலையற்றுப் போய் இருக்கிறார்கள். இப்படி கைத்தறித் தொழிலாளர்களும், மற்றவர்களும் கஷ்டத்திற்கு ஆளாகின்றார்கள். இது பற்றி முன்பிருந்த அரசாங்கத்தினிடம் நாங்கள் பேசினோம். இதே கோட்டையிலே பேசினோம். அப்போது நான் சொன்னேன், மூடிக் கிடக்கின்ற தொழிற்சாலைகளை எல்லாம் திறப்பதற்கு எங்களைப் பொறுத்தவரையில் எங்களுடைய ஆலோசனை என்னவென்று கேட்டால், அதனுடைய நிர்வாகத்தை—அந்த (Management)-ஐ—மட்டும் அரசு எடுத்து நடத்தலாம். ஏனென்றால் இந்த அரசே அத்தனைக்கும் மூலதனம் போடுவதற்குப் பணம் இல்லை. அதைத் தேசியமயமாக்க நம்மால் முடியாது.

1967 ஆம் வருஷத்தில் முதன் முதலில் தமிழ்நாட்டில் இது போன்ற பரிபூரணமான ஆட்சி மாற்றம் வருகின்ற காலத்தில், அண்ணா அவர்கள் தலைமை தாங்கி, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகமும் சேர்ந்த போராட்டம் தான் அன்றைக்கு அந்த ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். அன்றைக்கு கோவை மாவட்டத்தில் பூட்டிக் கிடந்த மில்கள் 22. நாங்கள் கேட்டது ஒன்றே ஒன்றுதான். அதை தேசியமயமாக்கும் அதிகாரம் மத்திய சர்க்காருக்குத்தான். அன்றைக்கு அதற்காக நாங்கள் போராடினோம். எந்தத் துன்பங்களையும் அனுபவிக்கத் தயார். ஆனால் உங்களுடைய அரசாங்கம் வந்ததற்குப் பிறகு அதனுடைய நிர்வாகத்தை எடுத்து நடத்துங்கள். நாங்கள் அங்கே மத்திய சர்க்காரோடு போராடும்போது இந்த அரசு அன்றைக்கு ஆதரவு தந்தது. அண்ணா ஏற்றுக் கொண்டார். அன்றைக்கு நிர்வாகத்தை எடுத்ததனால்தான் 10 மில்கள் இன்றைக்கு தேசியமயமாக்கப்பட்டு, கோவை மாவட்டத்தில் இருக்கின்றன. பாண்டிச்சேரியில் ஒன்று இருக்கிறது. அப்படி 14, 15 மில்கள் இன்றைக்கு தேசியமயமாக்கப்பட்டதற்குக் காரணம் அது. அப்போதுதான் துயர் துடைப்புச் சட்டம் என்ற சட்டத்தை உருவாக்கினார்கள். அப்போது நான் இந்த அவையில் இல்லை. நான் பாராளுமன்றத்தில் இருந்தேன். எதற்காகச் சொல்கிறோம் என்று சொன்னால், தொழில் வளர்ச்சி என்பது ஒரு மத்திய சர்க்கார், ரூ. 50,000, ரூ. 60,000 கோடியை மக்களிடத்திலே வரி வசூலிக்கும்படியான நிலையிலே குவிந்திருக்கின்ற அந்த நிதிக் களஞ்சியத்திலிருந்து மாநிலங்களுக்கு என்று அந்த நிதியை ஒதுக்காமல்,



தொழில் வளர்ச்சிக்கு என்று அந்த நிதியை ஒதுக்காமல், மாநிலத்திற்கான நிதியை ஒதுக்காமல், எப்படி மாநிலங்களில் தொழில் வளர முடியும்? அதை மாநிலமே வசூலித்துக் கொள்ளவேண்டும் என்று சொன்னால் எப்படி காரியங்கள் நடக்கும்?

கிராமப்புறங்களில் வேலையின்மையால் கோடிக்கணக்கில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அன்றைக்கு அவர்களுடைய உண்மையான கணக்கு இருக்காது. மத்திய சர்க்காருக்கு இருக்கிறதா? நம்மிடம் இருக்க முடியாது. கிராமப்புறங்களிலே மொத்தமுள்ள வேலை இல்லாமையை, நாங்கள் எங்களுடைய சொந்த முறையிலே சில படித்த ஆராய்ச்சியாளர்களைக் கொண்டு பரிசீலனை செய்யும்போது 7 கோடிக்கும் மேற்பட்டவர்கள் கிராமப்புறத்திலே Un-employed-ஆக இருக்கிறார்கள் என்று தெரிகிறது.

(பிற்பகல் 1-30)

மூன்று கோடி பேர்களுக்கு மேல் கையெழுத்து போடத் தெரிந்தவர்கள் எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சில் பதிவு செய்தும், வேலையற்றவர்களாக இருக்கிறார்கள். மூடியிருக்கிற தொழிற்சாலைகளிலுள்ள தொழிலாளர்கள் எல்லாம் இந்தக் கணக்கில் வாரது. மொத்தம் பத்து கோடி வரலாம் இது என்ன பொருளாதாரமா, சமுதாயமா, என்ன கதை இது? இந்தச் சீரழிவினால் வாங்கும் சக்தியை இழந்த மக்கள் நிலை எப்படி நன்றாக இருக்க முடியும்? இதற்கு அடிப்படையான காரணம் என்ன? இதற்காக என்ன செய்திருக்க வேண்டும்? கவர்னர் உரையில் உள்ள அடிப்படை விஷயங்களைத்தான் நாங்கள் தொட்டுப் பேசுகிறோம். எங்கள் தொகுதியில் அங்கே அது வேண்டும், இங்கே இது வேண்டும் என்று சொல்லவில்லை. அதற்குச் சந்தர்ப்பம் வரும், அப்போது பேசுவோம்.

அடுத்தபடியாக, மத்திய சர்க்கார் செய்திருக்கும்படியான பெரும் தவறு என்னவென்றால், அவர்களே சொன்னது, ஆரம்பத்திலேயே நிலச் சீர்திருத்தம் செய்திருந்தால் நாலு கோடி ஏக்கர் நிலம் மிச்சம் கிடைத்திருக்கும், விநியோகத்திற்காக என்று சொன்னார்கள். ஆனால் கொஞ்ச காலத்திற்குப் பிறகு நாற்பது லட்சம் ஏக்கர் கிடைக்கும் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு அதுகூடச் சொல்வதற்கு வழி இல்லை. நாட்டில் முழுமையாக நிலச் சீர்திருத்தம் செய்திருந்தால் மக்களுக்கு,

நிலம் இல்லாதவர்களுக்கு நிலப்பிரபுக்களுடைய நிலத்தைப் பெற்று கொடுத்திருக்க முடியும். தற்போது உள்ள உற்பத்தி முறையை மாற்றி, நவீன உற்பத்தி முறையைக் கொண்டு வருவதற்கு நிலச் சீர்திருத்தச் சட்டத்தை ஏன் பாராளுமன்றம் உருவாக்கியிருக்கக் கூடாது? இது மாநில சர்க்கார் அதிகாரத்தில் தலையீடா? இங்கே எம். ஜி. ஆர். அவர்களின் அரசாங்கம் இருந்த போது இந்த நிலம் கிடைக்கும்படியான சட்டத்தை உருவாக்கி அனுப்பினோம். அந்தச் சட்டம் எங்கே போனது என்பது தெரியாது. ஆகவே அப்படிப்பட்ட நிலச் சீர்திருத்தம் நடக்கவில்லை. கிராமப்புற மக்கள் எத்தனையோ பேருக்கு நிலம் கிடைக்கவும். அதன் மூலம் அவர்கள் கையில் காசு பணம் வரவும், கூலிக்காரனின் கூலி உயரவும் வழி ஏற்படும். தொழிற்சாலைகள் மூடப்படக் கூடாது. தொழிற்சாலைகள் திறந்திருந்தால்தான் தொழிலாளர்கள் கைக்கு வருமானம் வரும். அப்போதுதான் அவர்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்குவார்கள்; தொழில் வளரும். மேலும் நாலு கால் பாய்ச்சலில் வேகமாக தொழில் வளரும். ஆனால் அது மாதிரி எதுவும் காணப்படவில்லை. இந்தக் கண்ணோட்டத்தில் நாம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் போகிறோமோ என்பது தெரியவில்லை. காங்கிரஸ் கட்சி நண்பர்கள் இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். நாங்கள் ஏதோ விரோதத்தில் சொல்லவில்லை. கோடிக்கணக்கான மக்களுடைய எதிர்காலத்தைப்பற்றித்தான் பேசுகிறோம். சோஷலிசம் பற்றிப் பேசுகிறோம். அது எதற்காகப் பேசுகிறோம், மக்களுடைய நலனை கருத்தில் கொண்டு இந்தப் பிரச்சினையையெல்லாம் ஆராய வேண்டும். அம்மாதிரி செய்யாததன் விளைவாகத்தான் இன்றைய தினம் பட்டினியும் தரித்திரமும் தாண்டவமாடுகிறது. வறுமைக் கோட்டிற்குக் கீழே எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள் என்பதுதான் இன்றுள்ள ஒரு பெரிய தர்க்கம். பட்டினி கோட்டிலிருந்து அந்த மக்களைக் காப்பாற்றுவதற்கு என்ன திட்டம் இருக்கிறது? இன்னும் சொல்லப் போனால் அதிலே தமிழ்நாடு தான் முன்னால் இருக்கிறது என்பது எனக்குத் தெரிந்த வரையிலுள்ள கருத்து.

ஆகவே, தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு முடிவு கட்ட வேண்டிய பொறுப்பு, இந்த நாட்டு மக்களுக்கும், இன்றைக்கு மாறி வரக்கூடிய பாதையில் செல்கின்ற நம் எல்லோருக்கும், ஏன்? மத்திய அரசுக்கும் இருக்கிறது. அவர்கள் இதி-



லிருந்து தப்பி வெளியே போய்விட முடியாது. ஆகவே இப்படிப்பட்ட மாற்றத்திற்காகத்தான் இந்தப் போராட்டம். இந்த அனுபவங்கள் எல்லாம் மக்கள் மத்தியில் ஏற்பட்டு அதனால் அந்த மக்களுக்கு எல்லாம் உணர்வு ஏற்பட்டு, அதையெல்லாம் கிரகித்து வைத்துத்தான் தேர்தலில் இந்த அரசை அமைத்திருக்கிறார்கள் என்பதை நாம் மறந்து விட முடியாது.

அடுத்தபடியாக, இட ஒதுக்கீடு சம்பந்தமான பிரச்சினை பற்றி ஒரு சில விஷயங்கள். நாங்கள் இந்த விஷயத்தில் என்ன நினைக்கிறோம் என்றால், சாதி அடிப்படையை மட்டும் வைத்து இட ஒதுக்கீட்டைச் செய்து, இந்த வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினையை முடிக்க முடியாது. ஆனால் ஏற்கெனவே இருக்கக் கூடிய இட ஒதுக்கீட்டை விடக் கூடாது. அது தொடர வேண்டும். ஆனால் புதிய புதிய சாதி அடிப்படையில் ஒதுக்கீடுகள் செய்ய வரும்போது 'மண்டல் கமிஷன்' கூறியதை நாம் மனதில் எடுத்துக் கொள்ளவேண்டும். இந்தப் பிரச்சினையில் எல்லா அரசியல் கட்சிகளோடும் கலந்து பேசி, விவாதம் பண்ணி, ஒரு சுமுகமான முடிவு வருவதற்கு இந்த அரசு அதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டும் என்பது எங்களுடைய வேண்டுகோளாகும். அடுத்தது முற்போக்கான தொழிலாளர் கொள்கையைக் கையாள வேண்டும். அதில் இந்த அரசுக்கு எதிர்ப்பு ஒன்றும் இருக்காது. ஆனால் நாம் செய்ய வேண்டிய ஒரு கடமை என்னவென்றால், பல காரியங்கள் இன்று நடைபெறாமல் நின்று கொண்டிருக்கின்றன. அது சம்பந்தமாக நாங்கள் முன்பிருந்த அரசிடம் அன்றைய தினம் கோட்டையில் பேசி, மூடிய பஞ்சாலை நிர்வாகத்திடம் பேசி அதை அரசு எடுக்கவும், அதற்கு வேண்டிய பணத்தை மத்திய அரசு தரவும் சொன்னோம். ஆனால் தரவில்லை. அதற்காகப் போராடவும் தயார்; வாதாடவும் தயார். பாராளுமன்றத்திலே உள்ள எங்களுடைய உறுப்பினர்கள் அதற்காக வாதாடுவார்கள் என்று சொல்லியும் அவர்கள் செய்யவில்லை. அதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டும்.

முற்போக்கான தொழிலாளர் கொள்கை என்றெல்லாம் நாம் பேசுகின்றோம். ஆனால் இன்றைக்கு தொழிலாளர் சம்பந்தப்பட்ட முத்தரப்பு கமிட்டிகள் எல்லாம் சரியாக, ஒழுங்காக செயல்படுவதில்லை. சட்டங்கள் பல சரிவர அமுலாகாத நிலை இருக்கிறது. குறிப்பாக, 480 நாட்கள் வேலை செய்தால் நிரந்தரமாக்கப்படும் என்று சட்டம் ஒழுங்காக அமல்படுத்தப்படுவதில்லை.

மேலும், கைநெசவாளர்கள் பாதுகாப்புச் சட்டமும் இதே அவையில் உருவாக்கப்பட்ட ஒரு நல்ல சட்டம். அது இன்றும் அமலாகாத நிலையில் இருக்கிறது. சம வேலைக்கு சம ஊதியம் என்ற ஒரு நல்ல சட்டம் இருந்தும், அதிலே பெண்கள் ரொம்பவும் சட்டப் பாதுகாப்பின்றி பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி தனி கேட்டகிரி என்று அவர்களை மாற்றி, அவர்களுக்கு அந்த அனுகூலம் கிடைக்காமல் செய்கிறார்கள். அவையெல்லாம் பார்த்து மாற்றப்பட வேண்டும். தொழிற்சாலை சட்டத்திலேயே உள்ள பாதுகாப்பு அளிக்காமல் பெண்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தொழிற்சாலை சட்டம் பல இடங்களில் இன்றைக்கு ஒழுங்கான முறையில் அமலாக்கப்படுவது கிடையாது. இப்படி எல்லாவற்றிற்கும் முதலாளி வர்க்கத்தினுடைய ஆதரவை நாட வேண்டியிருக்கிறது. இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான தொழிலாளர்கள் சங்கங்களில், சேர்ந்து வளர்ந்து வரக்கூடிய இந்திய நாட்டில், தொழிற்சங்கத்தை அங்கீகரிப்பதற்கு ஒரு சட்டம் இல்லை. அந்தச் சட்டம் இல்லாதது, உண்மையிலேயே, மத்திய சர்க்காரே அவமானப்பட வேண்டிய ஒரு விஷயம். அவர்கள் உருவாக்க வேண்டிய ஒரு சட்டம் அது. அப்படிப்பட்ட சட்டம் இன்றைக்கு இந்த நாட்டில் இல்லை. ஆகவே, தொழிலாளர்கள் விரும்பக்கூடிய ரகசிய ஓட்டு போட்டு, —ஒரு கம்பெனியில் இருக்கக்கூடிய தொழிற்சங்க உறுப்பினர்கள் ஓட்டு மட்டும் அல்ல; அங்கே இருக்கக்கூடிய அனைத்துத் தொழிலாளர்களுக்கும் பொறுப்பு என்றால், சங்கத்தில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், அத்தனை தொழிலாளர்களும் சேர்ந்து, எந்தச் சங்கத்தை அங்கீகரிக்கிறார்களோ, அதை அவர்கள் ஓட்டுப் போட்டு தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சொல்கிறேன். இது ஒரு ஜனநாயக முறை அல்லவா? அப்படிப்பட்ட ஒரு முறையைக் கையாள வேண்டும். அதையே எதிர்ப்பது என்பது சரியல்ல. அதையெல்லாம் இந்த அரசு கவனிக்க வேண்டியிருக்கிறது.

மத்திய அரசினுடைய புதிய தொழில் உறவுக் கொள்கை வருகிறது. அந்தச் சட்டமானது வரையறுக்கப்பட்டு வருகிறது. அதை காங்கிரஸ் அல்லாத மற்ற அரசாங்கங்கள் அத்தனை பேரும் எதிர்க்கிறார்கள். நமது அரசாங்கமும் அப்படிப்பட்ட ஒரு சட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைக்கக் கூடாது. மற்ற அரசாங்கங்களோடு சேர்ந்து, அந்தச் சட்டத்திலே தேவையான





மாற்றங்களைக் கொண்டு வந்து, ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டுமென்பது எங்களது வேண்டுகோள். அரசு மேற்கொண்டு காரியங்களையெல்லாம் துரிதமாகப் பரிசீலித்து, தேவையானதைச் செய்ய வேண்டியிருக்கிறது. முற்போக்கான தொழிலாளர் கொள்கைக்காக அடிப்படையை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. அதோடு, நாங்களும் பூரணமாக ஒத்துழைக்கத் தயார். உங்களுடைய சங்கங்களிலே உள்ள சக பணியாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பல உரிமைகள் கொடுக்கப்படவில்லை; அதைக் கொடுக்கிறோம் என்று சொல்லியும்கூட அது மறுக்கப்பட்டிருக்கிறது. அவற்றைக் கொடுக்க வேண்டும்.

மேல்சபை சம்பந்தப்பட்ட வரையில், எங்களுடைய நிலையை இந்த மன்றத்திலேயே நாங்கள் முன்பே சொல்லியிருக்கிறோம். அதே நிலைதான் இன்றைக்கும் எங்களுக்கு.

சத்துணவு ஊழியர்களுடைய சர்வீசை நிரந்தரமாக்குவது என்பது ஒரு நல்ல நடவடிக்கை, பயந்து கொண்டே இருந்தார்கள், 2 இலட்சம் ஆண்களும் 25 ஆயிரம் பெண்களும். இன்றைக்கு அவர்களது சர்வீசுக்கு உத்தரவாதம் கொடுத்தது நல்ல அம்சமே. ஆனால் அவர்கள் கேட்பது, அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்பது. ஏன் அதைக் கேட்கிறார்கள் என்றால், பல நேரம் காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 3 மணி வரையிலும் அவர்கள் உழைத்துவிட்டு, மிச்சம் இருக்கக்கூடிய நேரத்தில் அவர்கள் வேறு எங்கும் சம்பாதிக்க முடியாது. இன்றைக்கு எம்.ஏ. படித்தவர்கள், பி.ஏ. படித்தவர்கள், ஆர்கனைசர்களாக வேலை செய்கிறார்கள். அவர்களது மாத சம்பளம் ரூ. 170. ஒரு ஆயாவுக்கு ஒரு வேளை சாப்பாடு. தினம் இரண்டு ரூபாய் கூலி. அப்படிப்பட்ட அம்சம் இருக்கிறது. அவர்களின் சம்பளம் உயர வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) 2 நிமிடங்களில் நான் முடித்து விடுகிறேன். தலைவர் அவர்களே, சத்துணவு ஊழியர்களுக்கு செய்திருக்கும்படியான இந்த ஏற்பாட்டை நாங்கள் வரவேற்கிறோம். அதே நேரத்தில், அடிப்படை வாழ்க்கை முன்னேற்றத்திற்கு என்ன செய்யலாம் என்பதை அருள்கூர்ந்து கவனிக்க வேண்டியிருக்கிறது. அவர்களுடைய ஸ்தாபனங்களோடு பேசி ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்களுடைய கோரிக்கையைத்தான் நான் உங்களுக்கு எடுத்துச் சொன்னேன்.

[திரு. கே. ரமணி] [1989 பிப்ரவரி 16

அதே மாதிரி அரசு ஊழியர்கள்; இங்கே செக்ரட்டேரியட் அசோசியேஷன் சார்பிலே அளித்த வரவேற்பில் நமது முதல் அமைச்சர் அவர்கள் பேசியபோது, போராட்ட காலத்தில் ஊழியர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை ரத்து செய்யப்பட்டது, என்று அறிவித்தார்கள். அதற்கு அவர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருக்கிறது. அவர்களுடைய கோரிக்கை என்ன என்பது அரசுக்குத் தெரியும். மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு இணையான சம்பளம் அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்காக ஒரு சம்பளக் கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்த சம்பளக் கமிஷன் தீர்ப்பு வந்தால், அவர்களை வைத்துக் கொண்டு பேசி, ஒரு முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். பழி வாங்கும் நடவடிக்கைகள் பல நடந்திருக்கின்றன. அவை அத்தனையும் பரிசீலித்து ரத்து செய்யப்பட வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

மாநகராட்சித் தேர்தல்களில் 18 வயதானவர்களுக்கு ஓட்டுரிமைக் கொடுத்துச் செய்ய வேண்டுமென்பது எங்களது கருத்து. ஆனால், அதற்கு அவகாசம் போதாது என்ற நிலை இருக்கிறது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்கட்டும்.

தொழிற் சங்கங்கள், மாணவர் சங்கங்கள், விவசாயச் சங்கங்கள், வாலிபர் சங்கங்கள், போன்றவை நாட்டினுடைய மக்கள் காரியங்களுக்காக போராட்டங்கள் நடத்தியபோது, அந்தப் போராட்டங்கள் நடத்தியவர்கள் மீது ஏராளமான வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன; அரசு ஊழியர்கள் மேல் போடப்பட்டுள்ளது; சத்துணவு ஊழியர்கள் மேல் போடப்பட்டுள்ளது. அந்த வழக்குகளை எல்லாம் பரிசீலித்து, வாபஸ் பெற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-30)

இந்த சத்துணவுச் சங்கத்தினுடைய மாநிலத் தலைவர் உள்ளார். (மணியடிக்கப் பெற்றது) முடித்து விடுகிறேன். அந்தத் தலைவரை டிஸ்மிஸ் செய்திருக்கிறார்கள். என்பதையும் நான் எடுத்துச் சொல்லிக் கொண்டு, இந்த அரசை பாதுகாப்பதற்கே எதிர்காலத்தில் போராட வேண்டியிருக்கும் என்பது



1989 பிப்ரவரி 16] [திரு. கே. ரமணி]

எங்களுடைய கருத்து. நமக்கு எவ்வளவு மெஜாரிட்டி பலம் இருந்தாலும் இந்தியாவிலே நடந்து வரக்கூடிய சர்வாதிகார ஆட்சி சூழ்நிலை சாதாரணமானது அல்ல. அந்தப் போராட்டத்திற்கும் நாம் தயாராவோம். மக்கள் நமக்கு கொடுத்திருக்கும் படியான அதிகாரம் இருக்கிறதே அதை பாதுகாப்பதற்கு, இந்தத் தேர்தலில் வெற்றி தந்த மக்களே இந்த அரசைப் பாதுகாப்பதற்கும் நம்மோடு சேர்ந்து நின்று அவர்களும் போராடுவார்கள் என்ற நம்பிக்கையோடு, இந்த அரசு தன்னுடைய கடமைகளைச் செய்து முன்னேறட்டும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (17—2—1989) காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

1. தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நில உரிமைப் பதிவேடு வழங்கல் விதிகளை வகுப்பது குறித்து வருவாய்த் துறையின் 1987 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 10 ஆம் நாளிட்ட 1083 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நில உரிமைப் பதிவேடு வழங்கல் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 4/1986) 16 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

ஏதுவுமில்லை.

D
V2.11,31'N89
N89.2.3
144353

LIST OF AGENTS FOR THE SALE OF
TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

## IN MADRAS CITY

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamamman Koil Street, Egmore, Madras-8.

## IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appac Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9|31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3|1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers Erode.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi Madurai-1.

## IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B. B. Gandhi Street, Calcutta-17.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.